குறும்பர்களின் உறவுமுறை

தா. இராபர்ட் சத்திய சோசப்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

குறும்பர்களின் உறவுமுறை

முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப்
இணைப்பேராசிரியர்
சமூகஅறிவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-281-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்: **221**

திருவள்ளுவராண்டு 2032 மாசி - பிப்ரவரி 2001

நூல்	:	குறும்பர்களின் உறவுமுறை
ஆசிரியர்	:	தா. இராபர்ட் சத்திய சோசப்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மானிடவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	8+152=160
தாள்	:	டிஎன்பிஎல் கிரீம்வூவ்
அளவு	:	1/8 டிம்மி
நூற்கட்டுமானம்	:	சாதாரணக்கட்டு
விலை	:	உரு. **90-00**
படிகள்	:	500
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

அணிந்துரை

ஒருதுறை சார்ந்த ஆழமான அறிவை அடைவதற்குப் பிறதுறை அறிவை நாடிப்பெறும் போக்கு வளர்ந்து வருகிறது. உறவுமுறை பற்றிய முதல்நிலைத் தரவுகளை மானிடவியல், மொழியியல், சமூகவியல் ஆகிய துறைகளின் பின்புலமின்றி நெறிப்படுத்தி ஆழமாக ஆராய முடியாது; இவைபோன்ற தொடர்புடைய துறைகள் இணைந்து செயல்படுவதற்கு மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. அதற்கு எடுத்துக்காட்டாகக் 'குறும்பர்களின் உறவுமுறை' என்ற இந்நூல் அமைந்துள்ளது.

முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப் எழுதிய 'குறும்பர்களின் உறவுமுறை' என்ற இந்நூலில் முள்ளுக்குறும்பர், தேனுக்குறும்பர், பெட்டக்குறும்பர் ஆகிய மூன்று பிரிவுப் பழங்குடி மக்களின் உறவுமுறை அமைப்பு மற்றும் உறவுமுறைச் சொற்கள் முதல்நிலைத் தரவுகளை ஆதாரமாகக் கொண்டு உறவுமுறைக் கோட்பாடுகளின் அடிப்படையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மூன்று பிரிவினரும் குறும்பர் என்ற தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதை விளக்கியுள்ளார்.

முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறையானது சில தனித்தன்மைகளை உடையதாக இருப்பதையும் திராவிட மொழி பேசும் முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை திராவிட உறவுமுறை அமைப்பிலிருந்து வேறுபடுவதையும் சில

இந்தோ-ஆரிய உறவுமுறைக் கூறுகளை உடையதாக இருப்பதையும் ஆராய்ந்துள்ளார். தாய்மாமனின் மகள் மற்றும் தகப்பனின் சகோதரியின் மகள் ஆகியோரை மணந்துகொள்ளும் திருமண முறையை முள்ளுக்குறும்பர்கள் முற்றிலும் தடைசெய்வதையும் ஏனைய இருபிரிவினரும் அத்தகைய திருமண முறையை ஆதரிப்பதையும் விளக்கியுள்ளார்.

முள்ளுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகள் ஏனைய இரு பிரிவினரின் திருமணச் சடங்குகளைவிட விரிவான முறையில் காணப்படுவதற்கு அவர்களின் சமூகப் பொருளாதார நிலை முக்கியக் காரணமாக அமைந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். மூன்று பிரிவினரிடையேயும் திருமணத்தின்போது மணமகளுக்குத் தாலி கட்டும் முறை, தாலி அணிவதில் காணப்படும் வேறுபாடுகள், தாலிக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஆகியவற்றையும் ஆராய்ந்துள்ளார். உறவுமுறைச் சொற்களில் காணப்படும் வேறுபாடுகளையும் குறிப்பிட்டுள்ளார்.

குறும்பர்களின் சமுதாயத்திலும் திருமண முறை மற்றும் உறவுமுறைச் சொற்களிலும் ஏற்பட்டுவரும் மாறுதல்களையும் முள்ளுக்குறும்பர்களிடையே புதுமையாக்கத்தை ஆதரிப்பவர்களுக்கும் அதை ஆதரிக்காதவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிளவு அவர்களின் சமுதாய வடிவமைப்பில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளதையும் விரிவாக ஆராய்நதுள்ளார்.

இந்தியாவில், குறிப்பாகப் பழங்குடி மக்களிடையே காணப்பட்ட பாரம்பரிய உறவுமுறை அமைப்புகள், மக்களிடையே நிலவி உறவுகளின் தன்மை, ஏற்பட்டுள்ள மாறுதல்கள் ஆகியவை பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கு இந்நூல் பெரிதும் உதவும்.

கதிர். மகாதேவன்
(துணைவேந்தர்)

முன்னுரை

இந்தியாவில் பழங்குடி மக்கள் குறித்த ஆய்வுகள் கிறித்தவ மதப் போதகர்களால் (missionaries) துவக்கப்பட்டு அண்மைக்காலத்தில் பல நிலைகளில் வளர்ச்சியுற்று விளங்குகின்றன. மானிடவியலார், சமூகவியலார், மொழியியலார் போன்ற பல துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் பழங்குடி மக்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளமை இத்தகைய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது. தமிழகத்தில் வாழும் பெரும்பாலான பழங்குடி மக்களின் மொழி ஆய்வுகளும் முனைவர்பட்ட ஆய்வேடுகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் தமிழகப் பழங்குடி மக்களின் உறவுமுறை ஆய்வுகள் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. பழங்குடி மக்களின் திருமணமுறை, உறவுமுறை மற்றும் உறவுமுறைச் சொற்கள் ஆகியவை பல தனித்தன்மைகளை உடையனவாக உள்ளன. இந்தியாவில் காணப்பட்ட பாரம்பரிய உறவுமுறை அமைப்புகள், மக்களிடையே நிலவிய உறவுகளின் தன்மை, ஏற்பட்டுள்ள மாறுதல்கள் ஆகியவற்றை ஆராய்வதற்கும் பண்பாட்டு அடிப்படையில் வரலாற்று ரீதியான பல உண்மைகளை வெளிக்கொணரவும் உறவுமுறை ஆய்வுகள் மிகவும் உதவுகின்றன.

உறவுமுறை ஆய்வில் என்னை ஈடுபடச் செய்து 'குறும்பர்களின் உறவுமுறை' என்ற இந்த ஆய்வுத்திட்டத்தை மேற்கொள்ள அனுமதியும் வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரும் மதிப்பிற்குரிய எனது ஆசிரியருமான பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆய்வுப்பணியை மேற்கொண்டு களப்பணி மற்றும் முதல்நிலைப் பணிகளைச் செய்துமுடிக்க ஊக்கமளித்த பேராசிரியர் கி. அரங்கன் அவர்களுக்கும், இப்பணியைச் செய்துமுடிக்க முழு ஆதரவும் அளித்த மறைந்த மதிப்பிற்குரிய

பேராசிரியர் சீ.செ. தேக்கமலை அவர்களுக்கும் இந்த ஆய்வறிக்கையை முற்றிலுமாகப் படித்துப் பல திருத்தங்கள் செய்து கருத்துக்கள் வழங்கிய நண்பர் முனைவர் ஆறு. இராமநாதன் அவர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக வெளியிடப்படாமல் இருந்த இந்த ஆய்வறிக்கையினை வெளியிடுவதற்கு ஆவன செய்த மதிப்பிற்குரிய துணைவேந்தர் முனைவர் கதிர். மகாதேவன் அவர்களுக்கும் பதிவாளர் அவர்களுக்கும் துறைத்தலைவர் முனைவர் அரோமா கு சாம் அவர்களுக்கும் பதிப்புத்துறை இயக்குனருக்கும் பதிப்புக்குழு உறுப்பினர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலினைச் செவ்வனே அச்சிட்டு உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை அலுவலர்களுக்கும் அச்சகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(தா. இராபர்ட் சத்திய சோசப்)

பொருளடக்கம்

	பக்கம்
ஆய்வு முன்னுரை	1
குறும்பர்கள் ஓர் அறிமுகம்	29
முள்ளுக்குறும்பர்	37
தேனுக்குறும்பர்	97
பெட்டக்குறும்பர்	109
முடிவுரை	121
இணைப்பு -1	129
இணைப்பு -2	134
இணைப்பு -3	138
இணைப்பு -4	142
துணைநூற்பட்டியல்	149

ஆய்வுமுன்னுரை

பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பல குறிப்பிடத்தக்க உறவுமுறை அமைப்புகள் மற்றும் சொற்கள் அடங்கிய பல கட்டுரைகளும் புத்தகங்களும் ஆய்வேடுகளும் வெளிவந்துள்ளன. இவை சமூகவியல், மானிடவியல், மொழியியல் போன்ற பல துறைகளிலிருந்தும் வெளிவந்தவையாகும். அண்மையில், உறவுமுறையானது பல கோணங்களில் ஆராயப்பட்டு ஒரு சமுதாயத்தின் சமூக உறவுகளை உறுதிப்படுத்துவதில் அது மிக முக்கிய காரணக்கூறாக உள்ளதென நிரூபிக்கப்பட்டுள்ளது. காரணம் உறவுமுறை சமூக அமைப்போடும் சமூக நடத்தையோடும் தொடர்புடையதாகக் காணப்படுவதேயாகும்.

மனித சமுதாயத்தின் அடிப்படை உறவுமுறைத் தொடர்புகளை எடுத்துக் கொண்டால் மூன்று விதமான உறவுமுறைகள் காணப்படுகின்றன. அதாவது இரத்த உறவு, மண உறவு மற்றும் போலி (fictive) உறவுகள். இரத்த உறவு உயிரியல் (Biological) அடிப்படையிலானது. மண உறவு, திருமண இணைப்பால் ஏற்படுவது. போலி உறவு என்பது சமூக நிலையில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் போலியானது. சான்றாக ஒரு குலத்தைச் சேர்ந்தவர் அவரது வயது பிரிவில் உள்ளவர்களுக்கு சகோதரனாகவோ அல்லது சகோதரியாகவோ அமைகிறார். அவ்வாறு உறவுமுறைச் சொற்களால் குறிப்பிடப்படும் நபரை குடிவழித் தொடர்பில் (genealogical relationship) காணமுடியாது. எனவே, இதைப் போலி உறவாகக் கொள்கின்றனர். மூன்று விதமான

உறவுகளும் சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே காணப்படும் உறவுகளை வரையறுப்பதாகக் காணப்படுகிறது. பொதுவாக போலி உறவுமுறையைவிட இரத்த மற்றும் மண உறவு அதிகமாகக் காணப்படுகிறது. இம்மூன்று உறவுமுறைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை (தனிப்பட்டவை) அல்லாததும் ஒரு குறிப்பிட்ட சமூகப்பிரிவில்காணப்படுவதாயும் இருப்பதுண்டு. சான்றாக ஒரு தனிக்குடும்பத்தில் இரத்த மற்றும் மண உறவினர்களோடு தத்துப்பிள்ளையும் காணப்படலாம். உறவுமுறைத் தொடர்புகள் உறவின் நெருக்கத்தைப் பொறுத்து அமைகிறது. நேரடி உறவு நெருங்கிய உறவினர்களிடையேயும் மறைமுகமான (indirect) உறவு தூரத்து உறவினர்களிடையேயும் காணப்படுவதுண்டு. இத்தகைய உறவுகளின்படிநிலைகளை (நெருக்கதை) முர்டாக் (Murdock, 1949:94) நான்கு படிநிலைகளில் விளக்குகிறார். அதாவது முதல்நிலை உறவினர், (Primary relations) இரண்டாவது நிலை உறவினர் (Secondary relations) மூன்றாவது நிலை உறவினர் (tertiary relations) மற்றும் தூரத்து உறவினர் (distant relations). ஒரு மனிதனின் முதல்நிலை உறவினர்கள் அவரது பிறப்புக்குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், சகோதரி மற்றும் சகோதரன் ஆகியோரும் அவரது திருமணத்தின் மூலம் உருவாகிய குடும்ப அங்கத்தினராகிய அவரது மனைவி, மகன் மற்றும் மகள் ஆகியோருமாவர். ஒருவரின் இரண்டாவது நிலை உறவினர்கள் அவரது தகப்பனின் தகப்பன், தகப்பனின் தாய், தகப்பனின் சகோதரன், தகப்பனின் சகோதரி முதலியோராவர். ஒரு மனிதனின் முதல்நிலை உறவினரின் முதல்நிலை உறவினர்கள் அவரது இரண்டாவது நிலை உறவினராகின்றனர். ஒருவரின் தகப்பனின் தகப்பனின் தகப்பன், தகப்பனின் தகப்பனின் தாய், தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள் முதலியோர் அவரது மூன்றாவது நிலை உறவினர்களாவார்கள். அவரது மூன்றாவது நிலை உறவினர்கள் அவரது இரண்டாவது நிலை உறவினரின் முதல்நிலை உறவினர் ஆவார்கள். இவ்வகைப் படுத்தல் 'உறவுமுறை விரிவாக்கக் கோட்பாட்டின்' (Extension theory of kinship) அடிப்படையிலானது எனவும் கருதலாம். அதாவது உயிரியல் பிரிவின் (Biological group) அங்கத்தினர்களாகிய பெற்றோர் பிள்ளைகளிடையே

தோன்றும் பற்றுறுதி (loyalty) மற்றும் பாசம் ஆகிய உணர்வுகள் தூரத்து பிரிவைச் சார்ந்த உறவினர்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. இவ்வாறு விரிவாக்கப்படும்போது பற்றுறுதி மற்றும் பாசம் ஆகிய உணர்வுகளின் அளவு (degree) வேறுபடுவதுண்டு. அதன் அடிப்படையில் உறவினர்களை முதல்நிலை உறவினர்கள், இரண்டாவதுநிலை உறவினர்கள், மூன்றாவது நிலை உறவினர்கள் மற்றும் தூரத்து உறவினர் எனப் பாகுபடுத்தலாம்.

இத்தகைய பாகுபாட்டின் அடிப்படையில் உறவுமுறை கடப்பாடுகள், உதவிமுறை, போக்குவரத்து (visit habit) ஆகியவற்றிலும் வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. சான்றாக ஒரு தனி நபரை எடுத்துக் கொண்டால் தன் முதல்நிலை உறவினருக்குச் செய்யவேண்டிய உறவுமுறை கடப்பாடுகள் உதவிகள் ஆகியவற்றில் பெரும்பாலும் தவறுவதில்லை. ஆனால் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலை உறவினர்களுக்கு உதவுதல், உறவுமுறைக் கடப்பாடுகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் தவறிவிடுவதுண்டு. எனவே முதல்நிலை உறவினரோடு உறவுமுறை அடிப்படையிலான நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம். இத்தகைய உறவுமுறைக் கடப்பாடுகள் உதவிமுறை மற்றும் போக்குவரத்து போன்ற உறவுமுறைத் தொடர்புகள் வேறு பல காரணக் கூறுகளின் அடிப்படையிலும் மாறுபடுவதுண்டு. சான்றாக விவசாயத்தில் ஈடுபடும் குடும்பத்தை எடுத்துக் கொண்டால், குடும்ப அங்கத்தினர் எல்லோரும் அத்தொழில் ஈடுபடுவதால் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒருவித ஒருமைப்பாடு ஏற்படுகிறது. எனவே பொதுநலன் மற்றும் குடும்பத்தில் ஏனையவர்களைத் தாங்கும் கடமையோடுள்ள கூட்டுக் குறிகோள்கள் காணப்படுகின்றன. இதேப் போன்று வேட்டைத் தொழிலில் ஈடுபடும் பழங்குடியினரை எடுத்துக் கொண்டால் உறவினர்கள் ஒன்றாக வேட்டைக்குச் செல்வதையும் உறவுமுறை அடிப்படையிலான நெருங்கிய தொடர்புகள் இருப்பதையும் காணலாம். இது போன்ற அமைப்புகளில் முக்கியமாக குறிப்பிட வேண்டியது என்னவெனில் ஏனையவர்களைத் தாங்க வேண்மென்ற குடும்ப கடப்பாடு பெற்றோர்களுக்கு மட்டுமல்லாது சகோதரர்கள்,

பெற்றோரின் உறவினர்கள் ஆகியோருக்குமாகும். குடும்பம் என்பது குடும்பத்தினர் சேர்ந்து வாழும் ஒருமம் என்றிருக்கும்போது இத்தகைய எண்ணங்களைக் கொண்டிருப்பதும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதும் அதிக கடினம் அல்ல. சமுதாயத்தில் ஏற்படும் மாறுதல்கள் நிமித்தம் மக்களின் இடப்பெயர்ச்சி ஏற்படுகிறது. இது குடும்பம் என்பது குடும்பத்தினர் சேர்ந்து வாழும் ஒருமம் என்பதைப் பிளவு படுத்துகிறது. புதிய தலைமுறையினரை எடுத்துக் கொண்டால் சிலர் தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர்களைப் போன்று அதே சமுதாயத்தில் வாழலாம். வேறுசிலர் சில மைல்கள் தூரத்திலும் வேறு சிலர் பல மைல்களுக்கு அப்பாலும் இன்னும் சிலர் வெகு தூரத்திலும் வாழலாம். குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதும் ஒருவரையொருவர் தாங்குவதும் உறவுமுறை கடப்பாடுகளை நிறைவேற்றுவதும் அவர்கள் சேர்ந்து வாழும்போது எளிதில் சந்திக்கப்பட்டது போன்று பிரிந்து வாழும்போது நிறைவேற்ற முடிவதில்லை. ஆனால் பெற்றோரைப்போன்று அதே சமுதாயத்தில் அண்மையில் வாழ்பவர்கள் குடும்பத்தின் பிரச்சனைகளை உணர்ந்து கொள்வதும் உதவிக்கு அழைக்கப்படுவதையும் காணலாம். எனவே குடும்பத்தோடு சேர்ந்து வாழ்பவர்கள் மற்றும் அண்மையில் வாழ்பவர்கள் தொடர்ந்து உறவுமுறை இணைப்புக்குள் இழுக்கப்படுவதையும் தூரத்தில் வாழ்பவர்கள் உறவுமுறை கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் சற்று அலட்சியமாக இருப்பதையும் காணலாம். இவ்வாறு தூரத்தில் வாழ்பவர்கள் குடும்பகாரியங்களிலிருந்து முற்றிலும் விலகிவிடுகிறார்கள் என்று கூறயியலாது. புதிய தலைமுறையினரின் வேலையின் தன்மையைப் பொறுத்தும் உறவுமுறைத் தொடர்புகளில் மாறுதல்கள் ஏற்படுவதுண்டு.

பொதுவாகப் பழங்குடி மக்களிடையே காணப்படும் உறவுமுறை அமைப்பும், சொற்களும் தனித் தன்மையுடையவைகளாகக் காணப்படுகின்றன. சில வேளைகளில் இவை முற்கால நாகரீகம், பண்பாடு, மொழி ஆகியவவை பற்றிய பல உண்மைகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின்

மூலம் குறும்பர் என்ற தலைப்பின் கீழ் பண்பாடு, கலாச்சாரம், தோற்றம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டுக்காணப்படும் முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர் மற்றும் தேனுக்குறும்பர்களிடையே நிலவும் உறவுமுறை அமைப்பு மற்றும் உறவுமுறைச் சொற்கள் மானிடவியல் மற்றும் மொழியியல் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ளன. இவர்களின் உறவுமுறை அமைப்பில் காணப்படும் பொதுத் தன்மைகள், அதில் நிலவும் புற உறவுமுளைக் கூறுகள், ஒவ்வொரு பிரிவினரிடையேயும் காணப்படும் தனித்தன்மைகள் ஆகியவையும் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் இவர்களிடையே காணப்படும் அடிப்படை உறவுமுறைச் சொற்கள், சொற்களில் காணப்படும் வேறுபாடுகள், பிறமொழித் தாக்கத்தால் உறவுமுறைச் சொற்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் ஆகியவையும் விவரிக்கப்பட்டுள்ளன. இறுதியில் பிற மக்களோடு ஏற்பட்டுள்ள தொடர்பால் குறும்பர்களின் உறவுமுறை அமைப்பு மற்றும் சொற்களில் ஏற்பட்டு வரும் மாறுதல்களை விவரிக்கவும் முயற்சி செய்யப்பட்டுள்ளது.

செய்திக் கூறுகள் சேகரித்தல்

இந்த ஆய்வு முக்கியமாகச் சென்ற 1984ம் ஆண்டு மே, சூன் மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுக்காவில் வாழும் குறும்பர்களிடமிருந்து நேரடியாகச் சேகரிக்கப்பட்ட செய்திக் கூறுகளின் அடிப்படையிலானதாகும். மேலும் இவ்வாய்வுக்குத் துணையான ஆய்வேடுகள், நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்தும் செய்திகள் சேகரிக்கப்பட்டன.

குறிப்பிடத்தக்க சில உறவுமுறை ஆய்வுகள்

இந்திய உறவுமுறை ஆய்வில் அய்ராவதி கர்வே (1965) குறிப்பிடத்தக்க பணிபுரிந்துள்ளார்கள். அவர்கள் பல்வேறு மொழிப்பிரிவினர் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும் செய்திக் கூறுகளைச் சேகரித்து வரலாறு மற்றும் இனமரபியல் அடிப்படையில் ஆராய்ந்துள்ளார்கள். மேலும், அவர்கள்

இந்தோ ஆரிய மற்றும் திராவிட உறவுமுறை அமைப்புகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தியாவின் மத்திய பகுதியில் தென்னகத்தோடு ஏற்பட்டுள்ள பண்பாட்டு அடிப்படையிலான தொடர்பினால் உறவுமுறை அமைப்பில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகளையும் ஆராய்ந்துள்ளார்.

காத்தலின் காப் (1979:268) திராவிட உறவுமுறையும் உற்பத்தி முறையும் (Dravidian kinship and modes of production) என்ற கட்டுரையில் தஞ்சாவூர் உறவுமுறை அமைப்புக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையே உள்ள தொர்புகளை விளக்கியுள்ளார். தஞ்சாவூர் விவசாயிகளிடையே காணப்படும் உறவுமுறை அடைப்படையிலான இணைப்புக்கள் விவசாய உற்பத்தியோடு தொடர்புடையதாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களையும் கூறியுள்ளார்கள்.

1. தொல்-இந்திய-ஐரோப்பிய மொழிக்குடும்பம் (Proto-Indo-European) தொல் அபாஸ்கான் மொழிக்குடும்பம் (Proto-Athapaskan) மற்றும் வேறு பல மொழிக்குடும்பங்களிலும் ஆராயப்பட்டுள்ள வண்ணம் நம் தொல்-திராவிட உறவுமுறைச் சொற்களை மீட்டுருவாக்கம் செய்ய முயற்சித்தால் தொல்--திராவிடர் மத்தியில் மாயிற்றி (Moiety) அமைப்பு இருந்ததா என்று நாம் கண்டுகொள்ளலாமெனக் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2. இவ்விதமான மீட்டுருவாக்கத்தினால், சகோதரியின் மகளைத் திருமணம் செய்துகொள்வது தொல்-திராவிடக்கூறா பிற்கால கூறா என்பதையும் தொல்-திராவிடர் தாய்வழி உறவை உடையவர்களா தந்தை வழி உறவை உடையவர்களா என்பதையும் அறிந்துகொள்ளமுடியும்.

3. தற்போதைய எல்லா அல்லது பெரும்பான்மையான திராவிட உறவுமுறை அமைப்புகளுக்கும் அடி ஆதாரமாக ஒரு தனி அமைப்பு இருந்தது. ஆனால் சமூக

உருவாக்கம், ஆரியர் மற்றும் வேறு குடியேற்றம், வேறுபட்ட வாழ்க்கைச் சூழல்களில் தனி இடங்களுக்கு மாற்றியமைத்தல், தொழில்கள், வகுப்பு பாகுபாட்டின் நிலைகள், வேறுபட்ட உற்பத்தி முறைகளின் மறுமலர்ச்சி, தொல் மற்றும் பின்-திராவிட அமைப்புகளின் நீடுநிலவல் அல்லது கலப்பு, ஆகிய நடைமுறைகளின் விளைவால் புத்தமைப்புகள் ஏற்பட்டுள்ளன.

4. இத்தகைய புத்தமைப்புகளிடையே மிகுந்த வேறுபாடுகள் காணப்பட்டாலும் சில அடிப்படை ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ரவுட்மேன் (Trautman-1981) திராவிட உறவுமுறை அமைப்பை விரிவாக விவரித்துள்ளார். அவ்வாறான விளக்கத்தில் சில மலைவாழ் மக்களிடையே காணப்படும் உறவுமுறை அமைப்புகளையும் சேர்த்துள்ளார். மேலும், ஒப்பாய்விற்காக இந்தோ-ஆரிய உறவுமுறை அமைப்பையும் விவரித்துள்ளார். தன் ஆய்வுக்கான தரவுகளை பல நூல்கள் மற்றும் கட்டுரைகளிலிருந்து சேகரித்துள்ளார்.

முகர்ஜி (Mukherjee-1981) சுமார் 68 பிரிவுகளைச் சேர்ந்த இந்திய பழங்குடி மக்களிடையே காணப்படும் உறவுமுறை அமைப்பை முர்டாக்கின் (1949) கசின்முறை வகைப்படுத்தலின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளார்.

உறவுமுறைச் சொற்கள்

ஒருவரின் இரத்த, மண மற்றும் போலி (fictive) உறவினர்கள் எல்லோரும் சில வரையறுக்கப்பட்ட சொற்களின் கீழ் கொண்டுவரப்படுகின்றனர் இவ்வகைப்படுத்தல்கள் தொடர்புடையதும் திட்டவட்டமான விதிமுறைகளுடைய இயக்கத்தின் அல்லது செயல்முறையின் விளைவாகும். உறவுமுறைச் சொற்களில் பால், வயது போன்ற வேறுபாடுகளோடு ஒரே தலைமுறையைச் சேர்ந்த நபர்களையும் வேறுபடுத்திக் குறிப்பிடுவது இதற்குச் சான்றாக அமைகிறது. மேலும் உறவுமுறைச் சொல், ஒருவரைக்

குறிப்பிடுவது மட்டுமின்றி குறிப்பிட்ட சமுதாயத்தில் அச்சொல்லால் அழைக்கப்படுவதின் பொருள் என்ன என்பதையும் வெளிப்படுத்துகிறது. எனவே, உறவுமுறைச் சொற்கள் உறவுமுறை அமைப்பையும் அது இயங்குகிற முறையையும் பிரதிபலிக்கின்றன எனவும் குறிப்பிடலாம். உறவுமுறைச் சொல்லமைப்புக்கும் சமூக ஒழுங்கிற்கும் நேருக்குநேர் தொடர்பு இல்லாவிட்டாலும் அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. சான்றாக ஒரு சமுதாயத்தின் உறவுமுறைச் சொற்கள் அச்சமுதாயத்தின் திருமண முறையைப் பிரதிபலிப்பதைக் காணலாம். எனவே, ஒரு மொழியில் காணப்படும் உறவுமுறைச் சொற்களை ஆராயும்போது அது எப்படிப்பட்ட சமூக அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு மொழியில் காணப்படும் ஏனைய சொற்களைவிட உறவுமுறைச் சொற்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. திருமணமுறை, குடும்ப அமைப்பின் தன்மை மற்றும் குடிவழிப் பட்டியலை ஆராய்ந்து முடிவு செய்தல் ஆகியவை உறவுமுறைச் சொற்களின் ஆழமான பொருளை அறிந்து கொள்வதற்கு உதவியாகக் காணப்படுகின்றன. சான்றாக 'மாமா' என்னும் சொல், சில சமூக அமைப்பில் தாயின் சகோதரர்களையும், தகப்பனின் சகோதரியின் கணவனையும், மனைவியின் தகப்பனையும் குறிப்பிடுகிறது. ஆனால் மூத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் முறை காணப்படும் சமூக அமைப்பில் 'மாமா' என்கிற சொல் மூத்த சகோதரியின் கணவனையும் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. மனைவியின் தகப்பனை அல்லது கணவனின் தகப்பனைக் குறிப்பிடும்போது 'மாமனார்' என்று வேறுபடுத்திக் கூறுவதையும் காணலாம்.

ஒரு மொழியில் பிறமொழித் தாக்கம் ஏற்படும் போது ஏனைய சொற்களில் ஏற்படும் மாற்றங்களைப் போன்று உறவுமுறைச் சொற்களில் குறிப்பாக முதல்நிலை உறவினர்களைக் குறிப்பிடும் சொற்களில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. எனவே ஒரு மொழி ஆய்வுக்கும் உறவுமுறை ஆய்வு துணையாக அமைகிறது. ஒரு சமுதாயத்தில் பிற

மக்களோடுள்ள தொடர்பாலும் கல்வி வளர்ச்சியாலும் ஏற்படும் கலாச்சாரப் பண்பாட்டு மாற்றங்களிலும் உறவுமுறை அமைப்பில் மாறுதல்கள் குறைவாக ஏற்படுவதுண்டு. இவ்வாறு ஒரு சாதி அல்லது சமுதாயத்தின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றின் ஆய்வில் உறவுமுறை ஆய்வு முக்கிய இடத்தை வகிக்கிறது.

இவ்வாறு ஒரு சமுதாயத்தின் உறவுமுறைச் சொற்களின் பொருளை மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் மட்டும் வரையறுக்க முடியாத நிலை ஏற்படுவதைக் காணமுடிகிறது. ஒரு உறவுமுறைச் சொல்லின் பொருளை மொழியியல் அடிப்படையில் விளக்க முற்படும்போது அது எந்த மொழியியல் அல்லாத கூறுகளோடு தொடர்புபட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஒரு சமுதாயத்தில் அல்லது ஒரு மொழியில் காணப்படும் உறவுமுறைச் சொற்களை ஆராயும்போது ஒரு குறிப்பிட்ட சொல் என்ன உறவைக் குறிக்கிறது (குருதி உறவா அல்லது மண உறவா). எந்த பாலைக் குறிக்கிறது, எந்த தலைமுறையைக் குறிக்கிறது போன்றவற்றை வேறுபடுத்தி எல்லா உறவுமுறைச் சொற்களோடும் தொடர்புபடுத்தி ஆராய வேண்டும். எனவே உறவுமுறைச் சொற்க்ளை உறவுமுறை அமைப்போடு தொடர்புபடுத்தி ஆராய்வது சிறப்பாக அமையும்.

உறவுமுறை அமைப்பு

ஒரு சமூக அமைப்பின் பெரும்பகுதியும் உறவுமுறை அமைப்போடு தொடர்பு பட்டதாகக் காணப்படுகிறது. எந்த ஒரு சமுதாயத்திலும் தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான உறவுமுறை எந்த வழிகளில் வரையறுக்கப்படுகிறதோ அது திட்டவட்டமான பண்பாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டது. இத்தகைய உறவுமுறைகளை வரையறுப்பதற்கு ஒவ்வொரு பண்பாடும் அதன் சொந்த விதிமுறைகளை உடையதாகக் காணப்படுகிறது. இம்முறையில் எந்த ஒரு பண்பாடுகளும் ஒத்ததாக இருப்பதில்லை. வேறு முறையில் பார்க்கும்போது எந்த ஒரு பண்பாடும் அதன் உறவுமுறை அமைப்பில் முற்றிலுமாகத் தனித்தன்மை உடையதாகவும்

காணப்படுவதில்லை. இந்நிலையில் உறவினர்களைப் பாகுபடுத்தும்போது ஒரு சமுதாயத்தில் அல்லது பண்பாட்டில் கையாளப்படும் அதே விதிமுறைகளை இன்னொரு சமுதாயத்தைப் பற்றிய ஆய்வில் கையாளுவது அவ்வளவு பொருத்தமாக அமைவதில்லை. சான்றாக பங்காளிகள் மண உறவினர் (Affines) என்ற பாகுபாட்டில் தாயின் சகோதரியின் பிள்ளைகள் சேர்க்கப்படுவதில்லை. மேலும் தமிழகத்தின் தென் பகுதியில் வாழும் வேளாளர்களிடையே உறவினர்கள் பங்காளி, தாயாதி, ஒறமுறையார் (மண உறவினர்) என பாகுபடுத்தப்படுகிறார்கள். இவ் வகைப்படுத்தல் சொத்துரிமை மற்றும் திருமண முறையை அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது பங்காளி என்பவர்கள் சொத்துரிமை உடையவர்கள், தாயாதி என்பவர்கள் சொத்துரிமை அற்றவர்கள், ஒறமுறையார் என்பவர்கள் திருமணத்தின்மூலம் இணைக்கப்பட்டவர்கள். எனவே, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உறவுமுறைப் பிரிவுகளை ஆராயும்போது அச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் உறவினர்களை எவ்வாறு பாகுபடுத்துகிறார்களோ அந்த அடிப்படையில் ஆராய்வது சிறந்ததாகும்.

வெவ்வேறு உறவுகளைப் பாகுபடுத்தும் உறவுமுறை அமைப்புகள் சமூகக் குழுக்களிலிருந்து வேறுபடுவதுண்டு. காரணம் உறவுமுறை அமைப்புகள் குழு எல்லைகளையும் தாண்டிச் செல்கிறது. அவை ஒரே குழுவினுள்ளும் வெவ்வேறு குழுக்களிடையேயும் நிலவும் உறவுகளை குறிப்பிடவும் வரையறுக்கவும் செய்கின்றன. ஒரு வியாபார அமைப்பில் வேலைபார்க்கும் இருவரிடையே காணப்படும் தொடர்பு அல்லது வேலை பார்ப்பவர்-வேலையில் அமர்த்துவோர் ஆகியவர்களிடையே காணப்படும் உறவுகள் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். உறவுமுறை அடிப்படையில் இணைக்கப்பட்ட குழுக்கள் அதிக சமூக, பொருளாதார இணைப்புகளால் இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சான்றாக ஒருவரின் தகப்பன் அவரது அடுத்த மூதாதையர் மட்டுமல்லாமல் அவரது பொருளாதார உதவியாளர், அவரைக் கட்டுப்படுத்துபவர், மதவழிகாட்டி ஆகியோருமாவர்.

உறவுமுறை அமைப்பின் ஆய்வில் குடும்ப அமைப்பு மற்றும் குல அமைப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றன. பொதுவாகத் தாய்வழி மற்றும் தந்தைவழி கூட்டுக் குடும்பம் மற்றும் தனிக்குடும்பம் இவற்றிற்கு இடைப்பட்ட சிறு கூட்டுக் குடும்பம் ஆகியவை இந்திய உறவுமுறை அமைப்பில் காணப்படும் குடும்பங்களாகும். சமூகக் காரணங்களான (Social factors) பொருளாதாரம், கல்வி, தொழில்மயம் மேலும் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் ஆகியவை குடும்ப அமைப்பில் பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. பெரும்பாலும் கூட்டுக் குடும்பங்கள் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டவை. போதுமான பொருளாதார வசதியில்லாத நிலையில் கூட்டுக்குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக மாறுவதையும் காணலாம். கல்வி மற்றும் வேலை காரணமாகவும் கூட்டுக் குடும்பங்கள் தனிக்குடும்பங்களாகப் பிரிவதுண்டு. இவ்வாறு தற்போதைய தொழில்மயமாக்கப்பட்ட நகர்ப்புறங்களை எடுத்துக்கொண்டால் பெரும்பாலும் தனிக்குடும்பங்களாகவே காணப்படும். இத்தகைய மாறுதல்களினால் சற்றுத் தூர உறவினர்களைக் குறிப்பிடும் சொற்களையும் இழந்து விடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் ஒரு கிராமப்புறத்தை எடுத்துக் கொண்டால் மக்களிடையே உறவுமுறை அடிப்படையிலான பல இணைப்புகள் இருப்பதைக் காணலாம். இத்தகைய இணைப்புகள் தங்கள் தொழில்களோடும், நிலத்தோடும், சமூக அமைப்புகளோடும் தொடர்புடையதாகவும் அமைகிறது. சமூக, பொருளாதார அடிப்படையில் முழு வளர்ச்சியடையாத மக்கள் தங்கள் ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும் தங்கள் உறவுமுறை அமைப்பையும், உறவினர்களையும் அதிகமாகச் சார்ந்திருப்பதைக் காணலாம். சான்றாக நம் நாட்டில் வாழும் பழங்குடி மக்களும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களும் பெரும்பாலும் தங்கள் சமூகக் கட்டுப்பாடுகளையும் உறவுமுறை அமைப்பையும் சார்ந்து வாழ்வதைக் காணலாம்.

உறவுமுற அமைப்பும் சமூக அமைப்பும்

லலிதா பிரவு (Lalitha Prabhoo, 1984) உறவுமுறை

அமைப்புக்கும் பெரும் சமூக அமைப்புக்குமிடையிலான வேறுபாடுகளை விளக்கும்போது பெரும் சமூக அமைப்பின் முக்கிய பண்புக்கூறுகளின் பாகுபாட்டிற்கு உறவுமுறை அமைப்பு பெருமளவில் அடிப்படையாக அமைகிறது என்றும் சில குறிப்பிட்ட பண்புக்கூறுகளில் சமூக அமைப்பும் உறவுமுறை அமைப்பும் முற்றிலுமாக வேறுபடுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய வேறுபாடுகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. உறவுமுறை அமைப்பில் காணப்படும் இரு பிரிவு அதாவது பிறப்புக்குடும்பம் (family of orientation) மற்றும் திருமணத்தின் மூலம் உருவாகிய குடும்பம் (family of procreation) ஆகியவை முற்றிலுமாக உயிரியல் அடிப்படையிலானதாகும். இது பெரும் சமூக அமைப்புகளில் காணப்படுவதில்லை.

2. உறவுமுறை அமைப்பில் தகப்பனிடமிருந்து மகன் பெற்றுக் கொள்ளும் கடமைகள், தொடர்புகள் முதலி யன பல தலைமுறைகளுக்குப் பாதுகாக்கப்பட்டு வருவதுண்டு. இது பெரும் சமூக அமைப்புகளில் காணப்படுவதில்லை.

3. உறவுமுறைக் கூறுகளின் நிரந்தரத் தன்மையை சமூக அமைப்புக் கூறுகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது உறவுமுறைக் கூறுகளின் தன்மை மிகவும் வலுவானது.

4. பெரும் சமூக அமைப்புகளில் மக்கள் பிரிவின் சீரான தன்மை அல்லது உறவுகள் ஒருவருடைய வாழ்க்கையின் ஒரு பகுதி அல்லது அவரது வாழ்நாள் முழுவதும் மட்டுமே நிலைநிற்கும். உறவுமுறை அடிப்படையிலான தலைமைப் பதவி, தொழில்கள் முதலியன பாரம்பரியமாக அல்லது கால்வழி மூலம் பெறப்படுகிறது.

5. குறிப்பிட்ட உறவுகளைக் குறிப்பிடும் முறையான சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு தனி நபரை மையமாகக்

கொண்டதாகும். பல உறவுமுறை இணைப்புகளோடு ஒவ்வொரு சொல்லும் அண்மையில் அல்லது தூரத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டிருப்பதைக் காணலாம். பல தலைமுறைகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ள இத்தகைய அமைப்பு பெரும் சமூக அமைப்புகளில் காணப்படுவதில்லை.

எந்த வித உறவுமுறை அடிப்படையும் இல்லாமல் சில சமூகக் குழுக்கள் காணப்படும். எனினும் இத்தகைய குழுக்களிலும் ஒருவரையொருவர் உறவுமுறைச் சொற்களைப் பயன்படுத்தி அழைப்பதைக் காணலாம். ஒரு தொழிற் சங்கத்தின் உறுப்பினர்கள் அல்லது மதக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் சகோதரன் அல்லது சகோதரி என்ற சொற்களால் அழைக்கின்றனர். இது திட்டவட்டமான விதிமுறைகளுக்குட்பட்டவை எனக் கூற இயலாது. ஆனால் உறவுமுறை அமைப்பில் உறவுமுறைச் சொற்களால் உறவினர்களை வேறுபட்ட தரங்களாகப் பிரிப்பதும், குறிப்பிடுவதும் திட்டவட்டமான விதிமுறைகளுக்கு உட்பட்டவையாகும்.

ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளை வகைப்படுத்தல்

ஒருவரின் பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளை வகைப்படுத்துவதில் உலகின் பல சமுதாயங்களும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளை எடுத்துக் கொண்டால் ஒருவரின் தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள், தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள், தாயின் சகோதரனின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரியின் பிள்ளைகள் ஆகிய எல்லோரும் கசின் (cousin) என்ற உறவில் காணப்படுகின்றனர். இங்கு பால், வயது ஆகியவற்றின் அடிப்படையிலான வேறுபாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன. இது எல்லா சமுதாயங்களுக்கும் ஒத்ததல்ல. உலகின் பல சமுதாயங்களும் தொடர்புபடுத்தும் உறவினரின் (Linking relation) பால் (sex) அடிப்படையில் மணவழிச் சகோதரர், (cross-cousin), ஒன்றுவிட்ட சகோதரர்

(parallel-cousin) என்று வேறுபடுத்துகின்றன. சில சமுதாயங்களில் மணவழிச் சகோதரர்களிடையே திருமண உறவை ஆதரிப்பதையும் ஒன்றவிட்ட சகோதரர்களிடையே திருமண உறவைத் தடை செய்வதையும் காணலாம். இத்தகைய வேறுபாடுகள் வேறுபட்ட பண்பாட்டு விதிமுறைகளைப் பிரதிபலிப்பதாகும். உலகளவில் இவ்விதமான வகைப்படுத்தலை முர்டாக் (Murdock, 1949) ஆறு வகையாகப் பிரித்துள்ளார்.

முர்டாக்கின் கசின் முறையமைப்பு வகைப்பத்தல் (Murdocks classification of cousin system)

1. உறவாயன் கசின் முறையமைப்பு (Hawaiian cousin system)
2. சுடேனிஸ் கசின் முறையமைப்பு (Sudanese cousin system)
3. எஸ்கிமோ கசின் முறையமைப்பு (Eskimo cousin system)
4. ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பு (Iroquois cousin system)
5. குறோ கசின் முறையமைப்பு (Crow cousin system)
6. ஒமேகா கசின் முறையமைப்பு (Omaha cousin system)

இவற்றைச் சற்றுச் சுருக்கமாகக் காணலாம்.

ஹவாயன் கசின் முறையமைப்பு

ஹவாயன் கசின் அமைப்பில் ஒருவருடைய பெற்றோரின் எல்லாப் பிள்ளைகளையும் அப்பெற்றோரின் சகோதர சகோதரிகளின் பிள்ளைகளையும் ஒரு குறிப்பிட்ட பிரிவின் கீழ் வகைப்படுத்தலாம். இவர்களிடையே உறவுமுறைச் சொற்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை. ஒரே உறவைக் குறிப்பிடும் ஒரே சொல்லால் எல்லோரையும் அழைக்கின்றனர். ஆனால் இவர்கள் பாலின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுகிறார்கள். படத்தில் A-யும் A1-ம் ஆணையும்

பெண்ணையும் வேறுபடுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வகைப்படுத்தலின் மூலம் ஒரே ஒரு விதமான உறவுமுறையே ஏற்படுகிறது. இதனைப் படம் 1-ல் காணலாம்.



படம் 1. ஹவாயன் கசின் முறையமைப்பு

சுடேனிஸ் கசின் முறையமைப்பு

சுடேனிஸ் கசின் அமைப்பு மேற்கூறிய அமைப்பிற்கு மாறானது. அதாவது ஒருவரின் பெற்றோரின் சகோதர சகோதரிகளின் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் வேறுபடுத்தப்படுவதோடு அவரின் உடன் பிறப்புக்களிலிருந்தும் வேறுபடுத்தப்படுகிறார்கள். இவ்வகைப் படுத்தலின் மூலம் ஐந்து விதமான உறவுகள் ஏற்படுகின்றன. இதனைப் படம் 2ல் காணலாம்.



படம் 2. சுடேனிஸ் கசின் முறையமைப்பு

எஸ்கிமோ கசின் முறையமைப்பு

எஸ்கிமோ கசின் அமைப்பில் ஒருவரின் (ego's) பெற்றோரின் எல்லா சகோதர சகோதரிகளின் பிள்ளைகளும் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் வேறொரு உறவுமுறைப் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் அவருடைய சகோதர சகோதரிகளிடமிருந்து (படத்தில் A, A1 என்று குறிப்பிடப்பட்டிருக்கும்) வேறுபடுத்தப்படுகிறார்கள். இவர்கள் பாலின் அடிப்படையிலும் வேறுபடுத்தப் படுகிறார்கள். இங்கு இரண்டு விதமான உறவுமுறைப் பிரிவுகளே ஏற்படுகின்றன. இதனைப் படம் 3-ல் காணலாம். Schwarty and Ewald (1968) இந்த அமைப்பு அமெரிக்க ஐக்கிய நாட்டின் சிறப்புப் பண்பு என்பதையும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கசின் என்ற சொல்லில் பால் புறக்கணிக்கப்படுவதையும் குறிப்பிட்டுள்ளார்.



படம் 3. எஸ்கிமோ கசின் முறையமைப்பு

ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பு

ஈறாக்கியஸ் கசின் அமைப்பில் ஒருவருடைய தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரனின் பிள்ளைகள் (படத்தில் B, B1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) ஆகியோர் (cross cousins) ஒரு உறவுமுறைப் பிரிவினராகச் சேர்க்கப்படுகின்றனர். தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள், தாயின் சகோதரியின் பிள்ளைகள் (Parallel cousins) மற்றும்

சகோதர சகோதரிகள் ஆகியோர் (படத்தில் A, A1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) ஒன்றாக வகைப்படுத்தப்பட்டு வேறுபட்ட ஒரு பிரிவில் அமைக்கின்றனர். இவ்வாறு இரண்டு விதிமான உறவுமுறைப்பிரிவுகள் ஏற்படுகின்றன. இதனைப் படம் 4-இல் காணலாம்.



படம் 4. ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பு

குறோ கசின் முறையமைப்பு

குறோ கசின் முறையமைப்பில் ஒருவரின் (ego's) தகப்பனின் சகோதரர்களின் பிள்ளைகள், தாயின் சகோதரிகளின் பிள்ளைகள் (Parallel cousins) மற்றும் அவரது சகோதர சகோதரிகள் ஆகியோர் (படத்தில் A, A1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) ஒரு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றனர். அவருடைய (ego's) தகப்பனின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரர்களின் பிள்ளைகள் (cross-cousins) மேற்கூறியப் பிரிவிலிருந்து தனித்தனியாக வேறுபடுத்தப்படுகிறார்கள். இவ்வாறு ஒருவரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் (படத்தில் B, B1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) அவரது தாயின் சகோதரனின் பிள்ளைகளிடமிருந்து (படத்தில் C, C1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) வேறுபட்ட ஒரு உறவுமுறைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும்

உறவுமுறைச் சொல் 'என் தகப்பனின் வம்சாவழியைச் சேர்ந்த ஆண் (அல்லது பெண்)' என்பவற்றைக் குறிப்பிடுகிறது. ஒருவர் இதே சொல்லை படத்தில் B, B1 என்று குறிப்பிட்டுள்ள எல்லா உறவினர்களைக் குறிப்பிடும்போதும் பயன்படுத்துகிறார். அதாவது அச்சொல் தகப்பன், தகப்பனின் சகோதரன், தகப்பனின் சகோதரியின் மகளின் பிள்ளைகள் மற்றும் தகப்பனின் வம்சாவழியைச் சேர்ந்த எல்லோரையும் குறிப்பிடும்போதும் பயன் படுத்தப்படுகிறது. இத்தகைய உறவுமுறை சொல்லாட்சியின் முக்கியத்துவட் யாதெனில் மேற்கூறிய எல்லா நபர்களும் ஒருவருக்கு (ego) ஒரேவிதமான உறவில் காணப்படுகின்றனர். அவர்கள் முர்டாக்கின் குறோ கசின் அமைப்புடைய சமுதாயங்களில் மிக முக்கிய பகுதியாகிய ஒருவரின் தகப்பனின் வம்சாவழி உறுப்பினர்களாகும். அவர்கள் எல்லோரும் ஒரே உறவுமுறைப் பிரிவில் வகைப்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் எல்லோரையும் ஒருவர் அவரது (ego) தகப்பனின் வம்சாவழியைச் சேர்ந்த ஆண் (அல்லது பெண்) என்பதைக் குறிக்கும் சொல்லால் அழைக்கின்றார்.

இதே அமைப்பில் ஒருவரின் தாயின் சகோதரனின் பிள்ளைகளைத் தன் சொந்தப் பிள்ளைகளோடு சமப்படுத்தி மகன் அல்லது மகள் என்ற பொருளைத் தரும் சொற்களாலே அழைக்கின்றனர் (படத்தில் C, C1 என்று குறிப்பிடப் பட்டுள்ளது). காரணம் ஒருவருக்கு அவரது தாயின் சகோதரனின் மனைவியின் உறவும் அவரது மனைவியின் உறவும் ஒன்றாகும் (படத்தில் இரண்டும் D1 என்று குறிப்பிடப்பட்டுள்ளன). இந்த உறவுமுறை அமைப்பைக் கையாளுவதால் மூன்று முக்கிய உறவுமுறைப் பிரிவுகள் ஏற்படுகின்றன. 1. ஒருவர் (ego) அவரது சகோதர சகோதரிகள், தகப்பனின் சகோதரர்களின் குழந்தைகள் மற்றும் தாயின் சகோதரியின் பிள்ளைகள் (Parallel cousins) ஆகியோர் அடங்கிய பிரிவு (படத்தில் A, A1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது). 2. ஒருவரின் தகப்பனின் வம்சாவழி அங்கத்தினர்கள் அடங்கிய பிரிவு (படத்தில் B, B1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது). 3. ஒருவரின் சொந்தப் பிள்ளைகள் மற்றும் அவரது தாயின் சகோதரனின் பிள்ளைகள் அடங்கிய

பிரிவு (படத்தில் C, C1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது). இதனைப் படம் 5-ல் காணலாம்.



படம் 5. குறோ கசின் முறையமைப்பு

ஒமேகா கசின் முறையமைப்பு

ஒமேகா கசின் முறையமைப்பு குறோ கசின் முறையமைப்பைப் போன்று சில இடங்களில் தலைமுறை வேறுபாட்டைப் புறக்கணிக்கிறது. ஒருவரின் தகப்பனின் சகோதரர்களின் பிள்ளைகளும், தாயின் சகோதரிகளின் பிள்ளைகளும் (Parallel cousins) அவருடைய சகோதர சகோதரிகளோடு ஒரு தனிப்பிரிவில் சேர்க்கப்படுகிறார்கள் (படத்தில் A, A1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது). தாயின் சகோதரனின் பிள்ளைகள், தாய், தாயின் சகோதரி, தாயின் சகோதரன் ஆகியோர் ஒரு வேறுபட்ட பிரிவாக்கப்பட்டு 'என் தாயின் வம்சாவழியைச் சேர்ந்த ஆண் (அல்லது பெண்)' என்ற பொருளைத் தரும் சொல்லால் அழைக்கின்றனர் (படத்தில் B, B1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது). குறோ

அமைப்பின் பண்பாட்டு அடிப்படையில் தகப்பனின் வம்சாவழி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவது போன்று இந்த அமைப்பில் தாயின் வம்சாவழி முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாக அமைகிறது. ஒருவர் அவருடைய தாயின் வம்சாவழி அங்கத்தினர்களுக்கு ஒரு தனி உறவில் காணப்படுகிறார். இது அவரது பார்வையில் தலைமுறை வேறுபாடில்லாமல் எல்லோரும் சமம் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. இந்த அமைப்பின் இறுதிப்பிரிவு ஒருவரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகளையும் அவருடைய சகோதரியின் பிள்ளைகளையும் ஒன்றாக இணைக்கிறது. அவர்கள் எல்லாரும் 'என் தகப்பனின் வம்சாவழியைச் சேர்ந்த ஒரு பெண்ணின் மகன் (அல்லது மகள்)' என்ற பொருளைத்தரும் சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர். (படத்தில் C, C1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது). இவ்வாறு இந்த அமைப்பிலும் மூன்று முக்கிய உறவுமுறைப் பிரிவுகள் ஏற்படுகின்றன. இதனைப் படம் 6-ல் காணலாம்.



படம் 6. ஓமேகா கசின் முறையமைப்பு

இத்தகைய வகைப்படுத்தல்கள் பொருளற்றதும் விருப்பப்படியானதும் என்று கூற இயலாது. இவை சமுதாயங்களில் சமூகப் பொருளாதார மற்றும் பல்வேறு காரணங்களால் ஏற்படும் மாறுதல்களின் அடிப்படையில் ஏற்படுவதாகவும் கருதலாம். மேற்கூறிய கசின் முறையமைப்புகள் எந்த சமுதாயத்தில் காணப்படுகிறதோ அச்சமுதாயத்தின் சமூக அமைப்பைப் பிரதிபலிப்பதாகும். மேற்கூறிய எல்லா வகைப்படுத்தல்களும் உறவினர்களைச் 'சேர்த்தல் மற்றும் பிரித்தல்' விதிமுறைகளையே பயன்படுத்துகின்றன. இறுதியாகக் கூறப்பட்டுள்ள இரண்டு அமைப்புகளிலும் சில உறவினர்களின் வெவ்வேறு தலைமுறைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன. மேலும் மேற்கூறிய ஆறு விதமான அமைப்புகளையும் எடுத்துக் கொண்டால் படிப்படியான மாறுதல்களைக் காண முடிகிறது. முதலாவது அமைப்பாகிய உறவாயன் கசின் முறையமைப்பை எடுத்துக் கொண்டால் பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள் சொந்த சகோதர சகோதரிகளிடமிருந்து வேறுபடுத்தப்படாமல் எல்லோரையும் ஒரேவித உறவாகவே கருதுவதைக் காணமுடிகிறது. பின்னால் கூறப்பட்டுள்ள அமைப்புகளில் பெற்றோரின் உடன் பிறந்தவர்களின் பிள்ளைகள் பலதரப்பட்ட உறவினர்களாகப் பிரிக்கப்படுகின்றனர். இறுதி இரண்டு அமைப்புகளாகிய குறோ மற்றம் ஒமேகா அமைப்புகளில் தந்தையின் வம்சாவழியினர், தாயின் வம்சாவழியினர் என்ற பாகுபாடு ஏற்பட்டிருப்பதையும் குறிப்பிட்ட சில உறவினர்களிடையே உள்ள தலைமுறை வேறுபாட்டைப் புறக்கணிப்பதையும் காணமுடிகிறது.

முர்டாக்கின் கசின் முறையமைப்பின் அடிப்படையில் பார்க்கும்போது திராவிட உறவுமுறை அமைப்பானது சேர்த்தல் மற்றும் பிரித்தல் விதிமுறைகளை உடைய ஈறாக்கியஸ் கசின் முறையமைப்புக்கு ஒத்ததாகக் காணப்படுகிறது. ஆனால் லவுண்ஸ்பரி (Lounsbury-1964) பொதுவாக திராவிட அமைப்பில் குலம் அல்லது மாயிற்றி (moiety) கணக்கிடல் அல்லாமல் இருபிரிவாகப் பிரித்து கணக்கிடுவது ஈறாக்கிய அமைப்பைப்போல் அல்லாமல் தொடர்புபடுத்தும் எல்லா

உறவினர்களின் பாலின் அடிப்படையில் அமைவதைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் திராவிட மொழி பேசும் 90 விழுக்காடு மக்களால் கடைப் பிடிக்கப்பட்டுவரும் சகோதரியின் மகள் திருமண முறையானது குறோ மற்றும் ஓமேகா அமைப்புகளில் காணப்படுவது போன்று குறிப்பிட்ட உறவினர்களிடையே காணப்படும் தலைமுறை வேறுபாட்டை ஓரளவுக்கு புறக்கணிப்பதாகவும் உள்ளது. மூத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் ஒருவர் அவருடைய தலைமுறைக்குப் பின் தலைமுறையைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்கிறார். எனவே அவருடைய மூத்த சகோதரியும் மாமியாரும் ஒரே வித உறவாக அமைகின்றனர். இவ்வாறு மேற்கூறிய இரு உறவினர்களுக்குமிடையிலான தலைமுறை வேறுபாடு புறக்கணிக்கப்படுகிறது. இதனை கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் 7 இல் காணலாம்.



படம் 7

மூத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் திருமண முறையை உடைய திராவிட உறவுமுறை அமைப்பில் சில முரண்பாடுகள் ஏற்படவும் வாய்ப்புகள்

உள்ளன. சான்றாக படம் 8 இல் கொடுக்கப்பட்டுள்ள வண்ணம் ஒருவரின் (ego's) இளைய சகோதரன் (படத்தில் A என்று குறிப்பிடப்பட்டுள்ளது) தன் மூத்தசகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்கிறார். அவருடைய (ego's) மூத்த மகன் (படத்தில் A1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) தன் அத்தை மகள் என்ற நிலையில் தகப்பனின் மூத்த சகோதரியின் இளைய மகளைத் (படத்தில் B1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது) திருமணம் செய்துகொள்கிறார். இங்கு ஒரு நிலையில் B1, A1க்கு அத்தை மகளாகக் காணப் பட்டாலும் இன்னொரு நிலையில் தன் தகப்பனின் இளைய சகோதரனின் மனைவியின் தங்கை (சித்தி) யாகக் காணப் படுகிறாள். ஒரே சமுதாயத்தில் அல்லது குடுமபத்தில் மூத்த சகோதரியின் மகள் திருமணம், தகப்பனின் சகோதரியின் மகள் திருமணம் மற்றும் தாயின் சகோதரனின் மகள் திருமணம் ஆகிய திருமண முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இத்தகைய முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.



படம் - 8

கேத்தலின் காப் (1979) தஞ்சாவூர் உறவுமுறை அமைப்பை விவரிக்கும் போது 'பிராமணர்களைப் போல்

அல்லாமல் கீழ் சாதியினர் தாயின் இளைய சகோதரியோ அல்லது ஒன்றுவிட்ட சகோதரியோ மணமகனைவிட வயதில் குறைவாக இருந்தால் திருமணம் செய்துகொள்ளும் முறையையும் ஆதரித்தனர்' என்று கூறிப்பிட்டுள்ளார். திராவிட உறவுமுறை அமைப்பில் தாயின் இளைய சகோதரியைத் திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் இருந்ததாக எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் படம் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள வண்ணம் மூத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்தல் மற்றும் தகப்பனின் சகோதரியின் மகளைத் திருமணம் செய்தல் ஆகிய திருமண முறைகளினால் எற்படும் இணைப்புக்களின்மூலம் கேத்தலின் காப் குறிப்பிட்டுள்ளது போன்ற திருமணங்கள் நடைபெறவும் வாய்ப்புள்ளது.

தென் திராவிட மொழி பேசும் திராவிட உறவுமுறை அமைப்பை உடைய மக்கள் வாழும் பகுதியில் வாழும் முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பானது உறவாயன் கசின் முறையமைப்பை ஒத்ததாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும் முகர்ஜி (Mukherjee-1981) பெரும்பாலான இந்தியப் பழங்குடி மக்களும் ஈறாக்கியஸ் அல்லது ஹவாயன் அமைப்பை உடையவர்கள் எனவும், இவ்விரு அமைப்புகளும் ஓமேகா அமைப்பை உடைய பழங்குடியினர் வாழும் நாகாலாந்தைத் தவிர இந்தியா முழுவதும் பரவியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் ஆய்வுக்காக எடுத்துக் கொண்ட 39 இந்தியப் பழங்குடியினரிடையே சுடேனியஸ் மற்றும் குறோ அமைப்புகள் எந்த ஒரு பிரிவினரிடையேயும் காணப்படவில்லை. எஸ்கிமோ அமைப்பு இரண்டு அந்தமான் பழங்குடியினரிடையே மட்டும் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஹவாயன் அமைப்பைச் சேர்ந்த 14 பிரிவினரும், ஈறாக்கியஸ் அமைப்பைச் சேர்ந்த 17 பிரிவினரும் ஓமேகா அமைப்பைச் சேர்ந்த 6 பிரிவினரும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஹவாயன் கசின் முறையமைப்பை உடையவர்களென குறிப்பிடப்பட்டுள்ள 14 பிரிவினர்களில் முள்ளுக்குறும்பர்கள் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹவாயன் கசின் முறையமைப்பை உடைய பழங்குடியினர் எனக் கொடுக்கப்பட்டுள்ளவர்களில் பீகார் மாநிலத்தில் வாழும் ஒரயன் (Oraon) என்ற பழங்குடியினரைத் தவிர வேறு எந்த ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களும் திராவிட மொழி பேசுபவர்களாகவோ அல்லது திராவிட மொழி பேசப்படும் பகுதியில் வாழ்பவர்களாகவோ காணப்படவில்லை. ஹவாயன் கசின் முறையமைப்பைச் சேர்ந்த 14 பிரிவினரில் 6 பிரிவினர் பீகார் மாநிலத்திலும் இரண்டு பிரிவினர் ஒரிசாவிலும் இரண்டு பிரிவினர் உத்தரப் பிரதேசத்திலும் மத்திய பிரதேசம் மற்றும் மிசோரம், மணிப்பூர், திரிபுரா ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு பிரிவினரும் காணப்படுகின்றனர். மொழிக் குடும்பத்தின் அடிப்படையில் பார்க்கும்போது ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக் (Austro-Asiatic) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த 6 பிரிவினரும் இந்தோ-ஆரிய (Indo-Ariya) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த 4 பிரிவினரும் திபத்தோ-பர்மன் (Tibeto-Burman) மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த 3 பிரிவினரும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினரும் காணப்படுகின்றனர். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 1-ல் இதனைக் காணலாம்.

அட்டவணை -1

ஹவாயன் கசின் முறையமைப்புடைய பழங்குடியினர்

வாழும் பகுதி	எண்ணிக்கை	பழங்குடியினரின் பெயர்	மொழிக்குடும்பம்
பீகார்	6	புமிஜ் (Bhumij) பிர்கர் (Birhor) கு (Ho) சந்தால் (Santal)	ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக்
		செரோ (Chero)	இந்தோ ஆரியன்
		ஒரயன் (Oraon)	திராவிடன்

ஒரிசா	2	பொண்டோ (Bondo)	ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக்
		புய்யா (Bhuiya)	இந்தோ-ஆரியன்
உத்தர பிரதேஸ்	2	ஜவுன்சரி (Jaunsari) தரு (Tharu)	இந்தோ-ஆரியன்
மத்திய பிரதேசம்	1	கொல் (Kol)	ஆஸ்ட்ரோ-ஏசியாட்டிக்
திரிபுரா	1	ரியங் (Riang)	
மணிப்பூர்	1	புரும் (Purum)	திபத்தோ-பர்மன்
மிசோரம்	1	லெகர் (Lakher)	

அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ள ஹவாயன் கசின் முறையமைப்புடைய பழங்குடியினர் அனைவரும் தந்தைவழி முறையை உடையவர்களென முகர்ஜி (1981) குறிப்பிட்டுள்ளார். ஆனால் முள்ளுக்குறும்பர்களிடையே தந்தைவழி, தாய்வழி ஆகிய இரண்டு முறைகளும் காணப்படுகின்றன. நிலவியல் அடிப்படையில் பார்க்கும்போதும் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ள பழங்குடியினருக்கும் முள்ளுக்குறும்பர்களுக்குமிடையே எந்தவிதத் தொடர்பும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. முள்ளுக்குறும்பர்கள் வாழும் பகுதியாகிய நீலகிரி மாவட்டத்தில் வாழும் ஏனைய பழங்குடியினராகிய தோடர், கோத்தர், பணியர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகியோரிடையே திராவிட உறவுமுறை அமைப்புக்கொத்த ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பே காணப்படுகிறது. அட்டவணை 1-ன்படி பல்வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பழங்குடியினர் ஒரே உறவுமுறை அமைப்பை உடையவர்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். முன்னர் குறிப்பிட்டுள்ள வண்ணம் மொழி, பண்பாடு ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல்களைப் போன்று உறவுமுறை அமைப்பு மற்றும் உறவுமுறைச் சொற்களில் துரிதமாக மாறுதல்கள் ஏற்படுவதில்லை. எனவே ஒரே உறவுமுறை அமைப்பை

உடைய பழங்குடியினர் வெவ்வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி பேசுபவர்களாகக் காணப்படுவதற்குக் காரணம் அவர்களின் மொழிகளில் ஏற்பட்ட மாறுதல்களாகவும் இருக்கலாம். வேறு விதத்தில் சிந்தித்தால் உறவுமுறை அமைப்புகள் மொழிக் குடும்பங் தோன்றுவதற்கு முன்னால் தோன்றியிருக்கலாம் எனவும் கருதலாம். எவ்வாறாயினும் இதற்கான காரணங்கள் மேலும் ஆராயத்தக்கன.

இனி குறும்பர்களின் உறவுமுறை பற்றி விரிவாக ஆராயலாம்.

குறும்பர்கள் ஓர் அறிமுகம்

நீலகிரி மாவட்டத்தில் வாழும் முள்ளுக்குறும்பர், பெட்டக் குறும்பர், தேனுக்குறும்பர் ஆகிய பிரிவினர்கள் குறும்பர் என்ற தலைப்பின்கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் தோற்றம், மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுகின்றனர்.

குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்தின் சற்றுத் தாழ்வான பகுதிகளாகிய கூடலூர், குன்னூர் தாலுக்காக்களிலும் கோத்தகிரி பகுதியிலும் வாழ்ந்து வருகின்றனர். குறும்பர்களிடையே காணப்படும் பிரிவுகளைக் குறித்து ஆய்வாளர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அய்யப்பன் (1948:125) குறும்பர்களை (1) ஊரு குறும்பர் (2) காடு குறும்பர் என்று இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவற்றுள் காடு குறும்பர் பிரிவை (1) பெட்ட (குன்று) குறும்பர் (2) தேனு/ ஜேனு குறும்பர் என்று மேலும் இரண்டாகப் பிரித்துள்ளார். பெட்டக் குறும்ப பிரிவினரை மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவை: 1. ஆன (Ane=elephant) குறும்பர், 2. பேவின (Be:vina=neem) குறும்பர், 3. கொள்ளி (Kolli=fire stick) குறும்பர். அய்யப்பனின் இந்த வகைப்படுத்தல் பின்னர் வெளிவந்துள்ள ஆய்வுகளில் பின்பற்றப்படவில்லை.

கர்நாடக மாநிலம் கூர்க் மாவட்டத்தில் வாழும் குறும்பர்கள் 'பெட்டக் குறுபா' என்றும் நீலகிரி மாவட்டத்தில் வாழும் குறும்பர்கள் 'பெட்டக் குறும்பா' என்றும் தர்ஸ்டன்

(1975) லூரயிஸ் (1961) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இக்குறும்பர்களிடையே பெயரில் மட்டுமின்றி மொழி மற்றும் சமூக அடிப்படையிலும் வேறுபாடுகள் காணப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஜெயபால், 1978). நடன சபாபதி (1979) காட்டுநாயக்கா, தேனுக்குறும்பா ஆகிய இரண்டும் ஒரே பிரிவைச் சார்ந்த பழங்குடி மக்களைக் குறிப்பிடும் வேறுபட்ட பெயர்கள் என்றும் இவர்கள் சோழ நாயக்கர்களைப்போல் அல்லாமல் வேறுபட்டு காணப்படுகின்றனர் என்றும் கூறியுள்ளனர்.

1961-ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் நீலகிரி மாவட்டத்தில் வாழும் குறும்பர்களிடையே அய்ந்து பிரிவுகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அவையாவன.

1. முள்ளுக் குறும்பர்
2. பெட்டக் குறும்பர்
3. ஊராளிக் குறும்பர்
4. தேனுக்குறும்பர்
5. பாலுக்குறும்பர்

இவ் வகைப்படுத்தல் சற்று குழப்பத்தைத் தருவதாக உள்ளது. இவற்றுள் பெட்டக்குறும்பர், ஊராளிக்குறும்பர் என்பன ஒரே பிரிவைக் குறிக்கும் இரண்டு பெயர்கள் ஆகும். இதனை அய்யப்பன் (1973) செயபால் (1980) ஆகியோரும் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வுக்கான களப்பணியின்போதும் தோற்றம், மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவித வேறுபாடும் இல்லாத ஒரு பிரிவினரை சில பகுதிகளில் பெட்டக் குறும்பர் என்றும் சில பகுதிகளில் ஊராளிக் குறும்பர் என்றும் குறிப்பிடுவதைக் காணமுடிந்தது.

தேனுக்குறும்பர்களை காட்டு நாயக்கர் என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே குறும்பர்களில் முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர், பாலுக்குறும்பர் என்ற

நான்கு பிரிவுகளே உள்ளன. இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படம்-9ல் காணலாம்.



படம் - 9

மேற்கூறிய பிரிவினர்களில் முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகிய மூன்று பிரிவினர்களும் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் வாழ்கின்றனர். பாலுக்குறும்பர்களைப் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. எனினும் இவர்கள் கோத்தகிரிப் பகுதியில் வாழ்வதாகத் தெரிகிறது.

தர்ஸ்டன் (Thurston, 1975:156) 1891-ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையை ஆதாரங்காட்டிக் கூறும் கருத்துக்கள் பின்வருமாறு:

> குறும்பா அல்லது குறுபா என்பவர்கள் முற்கால குறும்பர்கள் அல்லது பல்லவர்களின் தற்கால பிரதிநிதிகள்: அவர்கள் முற்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் வலிமையோடு காணப்பட்டார்கள்: ஆனால் அவர்களின் .பெருமையில் மிகச்சிறிய பகுதியே எஞ்சியிருக்கிறது: ஏழாவது நூற்றாண்டில் பல்லவ மன்னர்களின் வலிமை உச்ச கட்டத்தில் இருந்தது:

பின்னர் கொங்கு, சோழர் மற்றும் சாளுக்கிய தலைவர்கள் இவர்கள் மீது பல வெற்றிகளை அடைந்தனர்: குறும்பா ஆட்சித் தலைமையுரிமையின் வீழ்ச்சி அதோந்தை (Adondai) என்ற சோழ மன்னரால் கி.பி. ஏழு அல்லது எட்டாவது நூற்றாண்டில் ஏற்பட்டது: பெரும்பாலோர் நீலகிரி, வயநாடு, மைசூர் ஆகிய இடங்களுக்குத் தப்பி ஓடினார்கள்: இந்த பழம் மனித இனத்தின் பிரதிநிதிகள் தற்போது காட்டியல்பான நாகரீகமற்ற மலைவாழ் மக்களாகக் காணப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தோற்றம், மொழி, பண்பாடு, ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படும் எல்லா பிரிவைச் சார்ந்த குறும்பர்களும் முற்காலப் பல்லவர்களின் பிரதிநிதிகளா என்ற அய்யம் ஏற்படுகிறது. குறும்பர் என்று தர்ஸ்டன் குறிப்பிடுவது எந்தப் பிரிவைச் சார்ந்த குறும்பர் என்பதும் எல்லாக் குறும்பர்களும் பல்லவர்களின் பிரதிநிதிகளாக இருந்து தோற்றம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் பிற்காலத்தில் ஏற்பட்டவைகளா என்பதும் ஆழமான ஆய்வுக்குரியவைகளாகும். தற்போது பழங்குடி மக்களிடையே காலப்போக்குக்கும் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் ஏற்றாற் போன்று குலத்தொழில், பண்பாடு, மொழி ஆகியவற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. சான்றாக பீன்சூசன் சர்ப் (Bean Susan Sharf, 1972:6) கர்நாடக மாநிலத்தில் காப்புக்கல்லு என்னும் கிராமத்தில் வாழும் குறும்பர்களைக் குறிப்பிடும்போது குறுபா என்பதற்கு மேய்ப்பர்கள் என்று பொருள் என்றும் அவர்களின் பாரம்பரியத் தொழில் ஆடுமாடு வளர்த்தல் என்றும் மாமிசத்தை உணவாகவும் ரோமத்தை போர்வை தயாரிக்கவும் பயன்படுத்துவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் காப்புக்கல்லு கிராமத்தில் வாழும் குறும்பர்களுக்கு ஏனைய சாதிகளை விட ஆடு ஒரு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை என்றும் அவர்கள் நிலம் உடையவர்களாகவும் விவசாயிகளாகவும் காணப்படுகின்றனர் என்றும் மைசூர் மாநிலத்தில் காணப்படும் குறும்பர்கள் பொதுவாக சிறு நில உடைமையாளர்களாகவும்

விவசாயிகளாகவும் காணப்படுகின்றனர் என்றும் கூறியுள்ளார். இங்கு குறும்பர்கள் தங்கள் பாரம்பிரியத்தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகியவர்களில் எந்தஒரு பிரிவைச் சேர்ந்தவர்களும் மேய்ப்பர்களாக இல்லை. முள்ளுக்குறும்பர்கள் மட்டும் வேட்டை, விவசாயம் ஆகிய தங்கள் பாரம்பரியத் தொழில்களோடு ஆடுமாடு வளர்த்தலையும் ஒரு சிறு தொழிலாகக் கொண்டுள்ளனர். பெட்டக்குறும்பர்கள் பெரும்பாலும் விறகு வெட்டுதல், கூலி வேலை ஆகிய வேலைகளில் ஈடுபடுகின்றனர். தேனுக்குறும்பர்கள் தங்கள் பாரம்பரியத் தொழிலாகிய தேன் சேகரித்தலை விட்டுவிட்டு விவசாயம், கூலிவேலை ஆகிய வேலைகளில் ஈடுபடுகின்றனர். மேலும், குறும்பர்கள் வாழும் பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3500 முதல் 4000 அடி வரை உயரமுடையதாகவும் சுமார் 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னால் வரையிலும் கொடிய வனவிலங்குகள் நிறைந்த அடர்ந்த காடுகளுடையதாகவும் காணப்பட்டவை.

மேற்கூறிய குறும்பர்களிடையே சமூக அடிப்படையில் சில ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இவர்களில் முள்ளுக்குறும்பர்கள் உயர்ந்த இடத்தையும், பெட்டக்குறும்பர்கள் இரண்டாவது இடத்தையும், தேனுக்குறும்பர்கள் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றனர். சோமன் என்னும் பெயருடைய வயது சென்ற பெட்டக்குறும்பத் தகவலாளி மேற்கூறிய மூன்று குறும்பர்களும் மூன்று சகோதரிகளின் சந்ததியினர் என்றும் அதில் முள்ளுக்குறும்பர் மூத்த சகோதரியின் சந்ததியினர் என்றும் பெட்டக்குறும்பர் இரண்டாவது சகோதரியின் சந்ததியினர் என்றும் தேனுக்குறும்பர் மூன்றாவது சகோதரியின் சந்ததியினர் என்றும் கூறினார். இது, ஆய்வுக்குரியது.

பெட்டக்குறும்பர்கள் வயதில் மூத்த முள்ளுக்குறும்ப ஆண்களை 'மூத்நார' (Mu:ttna:re) என்றும் வயதில் இளைய

ஆண்களை 'எள்நார' (eḷna:re) என்றும் அழைப்பர். வயதில் மூத்த பெண்களை 'எளுத்தம்மா' (eḷuttamma:) என்றும் வதியல் இளைய பெண்களை 'அக்கா' (akka:) என்றும் அழைப்பர். தேனுக்குறும்பர்கள் முள்ளுக்குறும்பர்களை அழைக்கும்போது வயதில் மூத்த ஆண்களை அழைப்பதற்கு 'நாநார' (na:na:re) என்ற சொல்லையும் வயதில் குறைந்த ஆண்களை அழைப்பதற்கு 'கெள்நார' (heḷna:re) என்ற சொல்லையும் வயதில் மூத்த பெண்களை அழைக்க 'கெளத்தம்மா' (heḷattamma:) என்ற சொல்லையும் வயது சென்ற ஆண்களை அழைக்க 'மூத்நாரு' (mu:ttna:ru) என்ற சொல்லையும் வயது சென்ற பெண்களை அழைக்க 'மூத்தம்மா' (mu:ttamma:) என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் முள்ளுக்குறும்பர்கள் பெட்டக் குறும்பர் மற்றும் தேனுக்குறும்பர்களை அழைக்கும்போது அவர்கள் எவ்வளவு வயது சென்றவர்களாகக் காணப்பட்டாலும் பெயர் சொல்லியே அழைப்பர். இவ்வாறு முள்ளுக்குறும்பர்களை அழைக்கும்போது பெட்டக்குறும்பர் மற்றும் தேனுக்குறும்பர்கள் பயன்படுத்தும் சொற்கள், முள்ளுக்குறும்பர்களுக்கு ஏனைய குறும்பர்கள் கொடுக்கும் மதிப்பையும் மரியாதையையும் காட்டுகிறது.

மேலும் முள்ளுக்குறும்பர்கள் ஏனைய குறும்பர்களின் வீட்டிற்குச் செல்வதில்லை. ஆனால் பெட்டக்குறும்பர் கள் முள்ளுக்குறும்பர்களின் வீட்டிற்குச் செல்வதும் அங்கு உண்பதும் வழக்கமாகக் காணப்படுகிறது. குறிப்பாக முள்ளுக்குறும்பர் களின் திருமணத்தின்போது அங்கு சென்று சில உதவிகளைச் செய்வதும் உண்பதும் வழக்கம். பெட்டக்குறும்பர்கள் தேனுக்குறும்பர்களின் வீட்டில் உண்பதில்லை.

குறும்பர்களின் சமுதாயத்தில் காணப்படும் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படைக் காரணங்கள் எவையென்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் பொதுவாக ஒரு கிராமத்தை அல்லது மலைவாழ் மக்கள் வாழும் பகுதியை எடுத்துக் கொண்டால் அங்குள்ள நில உரிமையாளர்கள் வலிமையுடையவர்களாகக் காணப்படுவது வழக்கம். நிரந்தரமாக வீடுகட்டி வாழ்தல், நில உடைமையாளர்களாக இருத்தல், பாரம்பரியத் தொழில்களாகிய விவசாயம் மற்றம் வேட்டை முதலியவற்றில் ஈடுபடுதல் ஆகியவை

முள்ளுக்குறும்பர்களைக் குறும்பர்களின் சமுதாயத்தில் முதலிடத்தை வகிக்கச் செய்திருக்கலாம்.

மொழிச் சூழல்

நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான குறும்பர்கள் வாழும் பகுதியான கூடலூர் வட்டம் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலத்தைச் சேர்ந்த பண்பாடு, மொழி ஆகியவை சந்திக்கும் ஒரு பகுதி ஆகும். கூடலூர் வட்டம் தமிழ்நாட்டைச் சேர்ந்ததாக இருப்பினும் அங்கு மலையாள மக்களின் பண்பாடும் மொழியுமே அதிகமாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் இப்பகுதியில் குடியேறியுள்ளவர்களில் பெரும்பாலோர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதாகும். முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர் தேனுக்குறும்பர், பணியர் போன்ற பழங்குடிமக்களோடு பிராமணர், நாயர், செட்டி போன்ற சாதி மக்களும், அண்மையில் கேரள மாநிலத்திலிருந்து குடியேறிய ஏராளமான கிறித்தவர் மற்றும் முகமதியர்களும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் கர்நாடக மாநிலத்திலிருந்து வந்து குடியேறியவர்களும், நூற்றுக்கணக்கான இலங்கை அகதிகளும் இப்பகுதியில் வாழ்ந்துவருகின்றனர். எனவே, தமிழ், மலையாளம் கன்னடம் ஆகிய திருந்திய மொழிகளோடு பழங்குடி மக்களின் வேறுபட்ட மொழிகளும் கிளை மொழிகளும் இப்பகுதியில் பேசப்பட்டு வருகின்றன. இவையாவும் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவைகளாகவே காணப்படுகின்றன. இப்பகுதியில் பேசப்படும் பழங்குடி மக்களின் மொழிகளாகிய பணியா, பெட்டக்குறும்பா, காட்டுநாயக்கா, முள்ளுக்குறும்பா போன்றவை ஏனைய திருந்திய மொழிகளிலிருந்து மாறுபடுவது மட்டுமின்றி அவை ஒவ்வொன்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. நீண்ட நாட்களாகத் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று திருந்திய மொழிகளின் தாக்கம் மேற்கூறிய பழங்குடி மக்களின் மொழிகளில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கூடலூர் வட்டத்தில் அரசு மொழி தமிழாகக் காணப்பட்டாலும் மலையாள மொழியின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே மொழி அடிப்படையில் பார்க்கும் போது குறும்பர்களிடையே

பலவிதமான சூழ்நிலைகளையும் பிரச்சனைகளையும் காணலாம். அப்பகுதியின் மொழியெனக் கருதப்படும் (Regional Language) மலையாள மொழி எல்லா மொழி பேசும் மக்களின் பேச்சுவழக்கிலும் கலந்திருப்பதைக் காணலாம். ஒருவர் தன் உற்றார் நண்பர்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமாயின் அவர் சிறிதேனும் மலையாள மொழி பேச வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. கூடலூர் தாலுக்காவில் வாழும் குறும்பர்கள் தமிழ் பேசும் ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களோடு உறவாடும் போது தமிழில் பேச முயலுகின்றனர். மேலும் இப்பகுதியில் வாழும் பழங்குடி மக்களின் மொழி அங்கு வாழும் பிறமொழி பேசுபவர்களுக்குப் புரிவதில்லை. எனவே, பழங்குடி மக்கள் அப்பகுதியில் வாழும் மலையாள மொழி பேசும் மக்களோடு தொடர்பு கொள்ளும் போது மலையாள மொழியில் பேச முயலுகின்றனர். எனவே, குறும்பர்களின் தாய் மொழியோடு அவர்களுக்கு மலையாள மொழி பேசுவதற்கு அதிக வாய்ப்புகளும், தமிழ் மொழி பேசுவதற்குச் சில வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. அதோடு ஏனைய பழங்குடி மக்களோடு தலைமுறை தலைமுறையாகத் தொடர்பு காணப்படுகிறது. இவ்வாறு குறும்பர்களுக்குப் பிற மொழி பேசும் மக்களோடு ஏற்படும் தொடர்பால் இயற்கையாகவே மொழித் தொடர்பும், பின்னர் பண்பாட்டுத் தொடர்பும் ஏற்படுகிறது. இத்தகைய தொடர்பால் குறும்பர்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகிறது. இத்தகைய வேறுபாடுகள், ஏற்பட்டு வரும் மாறுதல்கள் ஆகியவற்றை வெளிப்படுத்த உறவுமுறை ஆய்வு மிகவும் ,உதவும்.

ஜெயபால் (1978) பெட்டக்குறும்ப மொழியில் காணப்படும் ஒலியனியல், உருபனியல், சொற்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இது தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தனி மொழியெனக் கூறியுள்ளார். நடனசபாபதி (1979) தேனுக்குறும்பர்களின் மொழி கன்னட மொழியின் ஒரு கிளை மொழியெனக் கூறியுள்ளார். முள்ளுக்குறும்பர்களின் மொழியும் தென்திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தனி மொழியெனக் கூறப்பட்டுள்ளது. (இராபர்ட் சத்திய சோசப், 1982).

முள்ளுக்குறும்பர்

முள்ளுக்குறும்பர்கள் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் தாலுக்காவின் மேற்குப் பகுதியிலும், கேரளாவில் வயநாடு மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு பகுதிகளும் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. முள்ளுக்குறும்பர்கள் வாழும் இப்பகுதியை தமிழ்நாடு-கேரள எல்லைக்கோடு இரண்டாகப் பிரித்தாலும் சமூக அமைப்பு, பழக்க வழக்கம் ஆகியவற்றில் எவ்வித வேறுபாடும் இல்லாமல் நெருங்கிய தொடர்போடு வாழ்ந்து வருகின்றனர். கூடலூர் தாலுக்காவில் வாழும் முள்ளுக்குறும்பர்கள் பெண் கொடுப்பதும், எடுப்பதும் பெரும்பாலும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த வயநாட்டுப் பகுதியில் ஆகும்.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுக்காவில் நெடுங்கோடு, கப்பாலா, காப்புக்குன்று, நரிவளப்பு, தெய்யக் குன்னி, ஒனிமூலா, மாடக்குண்டு, கள்ளிச்சாலு, படச்சேரி, கொன்னாடு என்னும் பத்து பாடிகளில் (Settlement) முள்ளுக்குறும்பர்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதி சுமார் 25 அல்லது 30 வருடங்களுக்கு முன்னால் வரையிலும் கொடிய வன விலங்குகள் நிறைந்த காடாகக் காணப்பட்டது.

முள்ளுக்குறும்பர்களின் தோற்றத்தைக் குறித்தோ அல்லது இவர்கள் எங்கிருந்து வந்து குடியேறியவர்கள் என்பதைக் குறித்தோ எந்தவித ஆராரங்களும் கிடைக்கவில்லை. ஆனால் கூடலூர் தாலுக்காவில் வாழும் முள்ளுக்குறும்பர்கள் எல்லோரும்

கேரள மாநிலத்தைச் சேர்ந்த வயநாட்டுப் பகுதியிலிருந்து வந்து குடியேறியவர்களென கூறுகின்றனர். கப்பாலா, நெடுங்கோடு என்ற இரண்டு பாடிகளும் (Settlement) உருவாகியதைக் குறித்துப் பரம்பரையாக இவர்களிடையே பின்வரும் செய்தி நிலவி வருகிறது.

ஏழு அல்லது எட்டு தலைமுறைகளுக்கு முன்னால் வயநாடு பகுதியில் வசித்து வந்த இரண்டு சகோதரர்கள் எருமாடு கிராமத்தில் காணப்படும் அதிராளன் என்ற கடவுளின் கோவிலில் காவலுக்காக நாயர் நிலச்சுவான்தார்களால் கொண்டு வரப்பட்டார்கள். அந்த இரண்டு சகோதரர்களும் தற்போது அந்த கோவிலுக்குப் பக்கத்தில் காணப்படும் கப்பாலா என்ற இடத்தில் இரண்டு குடிசைகள் கட்டி வாழ்ந்து வந்தனர். பின்னர் மூத்த சகோதரன் கப்பாலாவிலிருந்து பிரிந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவிலுள்ள நெடுங்கோடு என்ற இடத்துக்குச் சென்று குடிசை கட்டி வாழ்ந்தார். இதுவே அச்செய்தியாகும்.

தற்போது கப்பாலா, நெடுங்கோடு என்ற இரு முள்ளுக்குறும்பப் பாடிகள் காணப்படுகின்றன. இதைத் தவிர ஏனைய எட்டு பாடிகளில் வாழும் முள்ளுக்குறும்பர்களும் கேரளத்தைச் சேர்ந்த வயநாடு பகுதியைச் சார்ந்த நெல்லியாளம், மீனங்காடி ஆகிய இடங்களிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் கூறுகின்றனர். மாடக்குண்டு என்ற பாடி சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகியதாகக் கூறப்படுகிறது.

லூயிஸ் (1962:198) தற்கால முள்ளுக்குறும்பர்கள் முற்கால குறும்பர் அல்லது பல்லவர்களின் பிரதிநிதிகள் என்று கூறியுள்ளார். மேலும், முள்ளுக்குறும்பர்கள் தென்னகத்தின் வேடுவர்கள் என்றும் அவர்கள் மலபார் பகுதிக்கு வந்த பின்னர் குறுமன் என்று அழைக்கப்பட்டார்கள் என்றும் கூறியுள்ளார்.

அய்யப்பன் (1948:95) குறிப்பிடும் போது முள்ளுக்குறும்பர்கள் மிகச் சிறந்த வேட்டைக்காரர்கள் என்றும்

வில், அம்பு பயிற்சியில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களென்றும் கூறியுள்ளார். மேலும் கோட்டயம் இராஜா ஆங்கிலேயரை எதிர்த்து சண்டை செய்தபோது முள்ளுக்குறும்பர்கள் கோட்டயம் இராஜாவோடு சேர்ந்து மிக வீரமுடன் போராடினார்கள் என்றும் கூறியுள்ளார்.

முள்ளுக்குறும்பர்களின் தோற்றம், வாழ்க்கை முறை, மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இவர்கள் சிறந்த பண்பாடும், கலாச்சாரமும் உடைய மனித இனத்தின் பிரதிநிதிகள் என்பதும், திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இவர்களது மொழி தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகக் காணப்படுவதும் பல பழந்தமிழ்ச் சொற்களை உடையதாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும் (இராபர்ட் சத்திய சோசப், 1982).

மக்கள் தொகை

1961-ம் வருட மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி (Census of India, 1961, (Ed.Mitra.A), p.396. Vol.I, part II-C) குறும்பர்களின் மொத்த மக்கள் தொகை 8798 என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மாநில அடிப்படையிலான மக்கள்தொகை அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-2

மாநிலம்	ஆண்	பெண்	மொத்தம்
தமிழ்நாடு	1466	1200	2666
ஆந்திரபிரதேசம்	-	1	1
கர்நாடகா	2654	2780	5434
மகாராஷ்டிரா	325	372	697
மொத்தம்	4445	4353	8798

அட்டவணையில் குறும்பர்களிடையே காணப்படும் வெவ்வேறு பிரிவினரின் மக்கள்தொகை தனித்தனியாகக் கொடுக்கப்படவில்லை. மேலும் கேரள மாநிலத்தில் வாழும் குறும்பர்கள் இங்கு சேர்க்கப்படவில்லை. 1961 மற்றும் அதற்கு முந்தைய மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கைகளில் முள்ளுக்குறும்பர்கள் குறும்பர் என்ற பெயரில் சேர்க்கப்பட்டுள்ளதால் இவர்களின் மக்கள் தொகையைச் சரியாக அறிய முடியவில்லை. மாத்தூர் (1977:71) 1971 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு கூறும்போது முள்ளுக்குறும்பர்களின் மக்கள் தொகை 15,116 எனக் கூறியுள்ளார். அவரே (1977:43) முள்ளுக்குறும்பர்களும், ஊராளிக் குறும்பர்களும் சேர்த்து குறும்பர் என்ற பெயரில் கணக்கிடப்பட்டிருக்கலாம் என்றும் மலபார் பகுதியில் வாழும் குறும்பர்களின் மக்கள் தொகை 15,116 என்றும் கூறியுள்ளார். இந்த ஆய்வுக்கான களப்பணியின்போது கூடலூர் தாலுக்காவில் காணப்படும் பத்து முள்ளுக்குறும்ப பாடிகளுக்கும் சென்று கணக்கெடுக்கப் பட்டது. அப்போது கூடலூர் தாலுகாவில் வாழும் முள்ளுக் குறும்பர்களின் மக்கள் தொகை 1,004 என கணக்கிடப்பட்டது. கேரள மாநிலத்தில் வயநாடு மாவட்டத்தில் வாழும் முள்ளுக் குறும்பர்களின் தொகை இதைவிடப் பன்மடங்கு கூடுதலாக இருக்குமெனத் தகவலாளிகள் கூறினர்.

இந்த ஆய்வு தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த கூடலூர் தாலுக்காவில் வாழும் முள்ளுக் குறும்பர்களிடமிருந்து நேரடியாகச் சேகரிக்கப்பட்ட செய்திக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். கூடலூர் தாலுக்காவில் காணப்படும் பத்து முள்ளுக்குறும்பப் பாடிகளில் 'கப்பாலா' அதிக மக்கள் தொகை உடையதாக இருப்பதால் குல அமைப்பு, குடும்ப அமைப்பு போன்ற ஆய்வுகளுக்கு இப்பாடி தேர்ந்தெடுக்கப்பட்டது.

குல அமைப்பு

முள்ளுக்குறும்பர்களிடையே நான்கு குலங்கள் காணப்படுகின்றன. அதாவது வடக்கே குலம், வில்லிப்ப

குலம், காதிய குலம், வேங்கட குலம் என்பன. வயநாடு மற்றும் கூடலூர் தாலுக்காவில் வாழும் முள்ளுக்குறும்பர்கள் எல்லோரும் இந்த நான்கு குலங்களுக்குட்பட்டவர்கள் ஆவர். இந்தக் குலங்கள் தோன்றியவிதம் பற்றிய ஆதாரபூர்வமான செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் இது குறித்து முள்ளுக்குறும்பர்களிடையே பின்வரும் வாய்மொழிக் கதை தலைமுறை தலைமுறையாகப் பேசப்பட்டு வருவதை இங்கு சுட்டிக்காட்டலாம். கதை வருமாறு:

முள்ளுக்குறும்பர்கள் ஒரு கால கட்டத்தில் வயநாட்டின் ஒரு பகுதியை பூதாடி என்ற இடத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தார்கள். அரசனின் பெயர் வேடராஜா. முள்ளுக்குறும்பர்கள் வலிமையோடு காணப்பட்ட காலத்தில் இவர்களுக்கும், மலபார் பகுதியை ஆண்டுவந்த கோட்டேயம் அரசருக்குமிடையே பகைமை வளர்ந்தது. ஒருமுறை கோட்டேயம் அரசர் முள்ளுக்குறும்பர்கள் வாழ்ந்து வந்த காட்டுப்பகுதியை ஆக்கிரமித்தபோது கோட்டேயம் அரசர் முள்ளுக்குறும்பர்களால் தோற்கடிக்கப்பட்டார். வெற்றியைக் கொண்டாடிய முள்ளுக்குறும்பர்கள் இரவில் தாமதித்துத் தூங்கினர். அத்தருணத்தில் தோல்வியடைந்த அரசனின் படைகள் முள்ளுக்குறும்பர்களின் பகுதியில் புகுந்து பெரும்பான்மையானவர்களைக் கொன்று விட்டனர். பின்னர் கோட்டேயம் அரசனின் படையைச் சார்ந்த நாயர் சமுதாயத்தைச் சேர்ந்த நான்கு போர்வீரர்கள் நான்கு முள்ளுக் குறும்பப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் முள்ளுக்குறும்பப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டதால் தங்களது நாயர் சமுதாயத்திலிருந்து விலக்கப் பட்டார்கள். இந்த நான்கு பெண்களின் சந்ததியினரே தற்போதைய நான்கு குலங்களைச் சார்ந்த முள்ளுக்குறும்பர்கள்.

முள்ளுக்குறும்பர்களின் சமூக அமைப்பு, உறவு முறை அமைப்பு ஆகியவற்றைப் பார்க்கும்போது இவர்களுக்கும் நாயர் சமுதாயத்துக்கும் சில தொடர்புகள் இருப்பதையும் நாயர் சமுதாயத்தினரால் இவர்கள் அடிமைப் படுத்தப்பட்ட வர்கள் என்பதும் தெரியவருகிறது. சான்றாக முள்ளுக் குறும்பர்களின் சமூக அமைப்பில் போர்னன், தலச்சல்

போன்ற பல தலைவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் எல்லோருக்கும் மேலான 'பூதாடித் தம்புரான்' என்ற ஒரு தலைவர் காணப்படுகின்றார். அவர் நாயர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

ஒரு முள்ளுக்குறும்பப் பாடியில் குழந்தைப் பேறு, பெண்கள் பருவமடைதல், இறப்புத்தீட்டுக்கழிக்கும் சடங்கு (death pollution ceremony) ஆகிய சடங்குகளின் போது அப்பாடியின் தலைவர் நாயர் சமுதாயத்தின் நாவிதர், சலவைக்காரர் ஆகியோரிடமிருந்து முறையே எண்ணெய், துணி முதலியன கொண்டு வரவேண்டும். இவ்வாறு எண்ணெய் அல்லது துணி பெறுவதற்குப் போகும்போது கால்ரூபாய் கொடுக்க வேண்டும். அதோடு ஒரு வருடத்தில் ஒருமுறை ஒவ்வொரு முள்ளுக்குறும்பப் பாடியிலிருந்தும் அவர்களின் பகுதியிலுள்ள நாவிதருக்கும், சலவைக்காரருக்கும் சிறிதளவு நெல் கொடுக்க வேண்டும். இதற்குப் பதிலாக மேற்கூறிய நாவிதர் மற்றும் சலவைக்காரர்கள் நாயர் நிலப் பிரபுக்களுக்கு இலவசப் பணிபுரிய வேண்டும். மேலும் விவரங்களுக்கு: Rajalakshmi Misra, (1971:103-105). இதன் அடிப்படையில் நோக்கும்போது குலத்தின் தோற்றம் பற்றிய வாய்மொழிக் கதையில் உண்மை இருக்கலாமென அனுமானிக்க முடிகிறது. அடுத்து குலத்தைப் பற்றிய விளக்கங்களைக் காணலாம்.

ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் எனக் கருதுகின்றனர். எனவே ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குலத்தைத் தவிர வேறு எந்தக்குலத்திலும் திருமண உறவு வைத்துக் கொள்ளலாம். ஆனால் இவர்களிடையே காணப்படும் நான்கு குலங்களுக்குகிடையே நடை பெற்றுள்ள திருமணங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது சில வேறுபாடுகள் காணப் படுகின்றன. அவை அட்டவணை 3 ல் கொடுக்கப்பட்டுள்ளன. நான்கு குலங்களும் அ, ஆ, இ, ஈ என குறிப்பிடப்பட்டுள்ளது.

அ	=	வடக்கே குலம்
ஆ	=	வில்லிப்ப குலம்
இ	=	வேங்கட குலம்
ஈ	=	காதிய குலம்

அட்டவணை-3

நான்கு குலங்களிடையே நடைபெற்றுள்ள திருமணங்களின் எண்ணிக்கை

குலம்	ஆண்						பெண்					
அ	ஆ யோடு 18	% 69.23	இ யோடு 1	% 3.84	ஈ யோடு 7	% 26.92	ஆ யோடு 18	% 56.25	இ யோடு 2	% 6.25	ஈ யோடு 12	% 37 5
ஆ	அ யோடு 18	% 78.26	இ யோடு 1	% 4.35	ஈ யோடு 4	% 17.26	அ யோடு 18	% 66 66	இ யோடு 2	% 7.40	ஈ யோடு 7	% 25.92
இ	அ யோடு 2	% 40	ஆ யோடு 2	% 40	ஈ யோடு 1	% 20	அ யோடு 1	% 33.33	ஆ யோடு 1	% 33.33	ஈ யோடு 1 -	% 33 33
ஈ	அ யோடு 12	% 60	ஆ யோடு 7	% 35	இ யோடு 1	% 5	அ யோடு 7	% 58.33	ஆ யோடு 4	% 33.33	இ யோடு 1	% 8 33

அட்டவணை 3 இன் படி ஒவ்வொரு குலத்தைச் சார்ந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஏனைய குலங்களோடு ஏற்பட்டுள்ள திருமண உறவைப் பார்க்கும் போது மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆ குலத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு அ குலத்தோடு மிக அதிக விழுக்காடு திருமண உறவு ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. ஈ குலத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு இ குலத்தோடு மிகக் குறைந்த விழுக்காடு திருமண உறவு எற்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. அ குலத்துக்கும், ஆ குலத்துக்குமிடையே நடைபெற்றுள்ள திருமணங்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை சரி சமமாகக் காணப்பட்டலாலும் அதன் விழுக்காடு பார்க்கும் போது வேறுபடுகிறது. மேலும் அ, ஆ ஆகிய இரண்டு குலங்களைத் தவிர ஏனைய குலங்களுக்கிடையே நடைபெற்றுள்ள திருமணங்களைப் பார்க்கும் போது சில குலங்களில் ஆண்கள் அதிகமாகவும், சில குலங்களில் பெண்கள் அதிகமாகவும் காணப்படுகின்றனர்.

அட்டவணை-4

குலங்களின் திருமண இணைப்பு விழுக்காடு

குலம்	ஆண்	பெண்	மொத்த விழுக்காடு
அஆ/ஆஅ	18-18=36	18-18=36	50.70
அஇ/இஅ	1-2=3	2-1=3	4.22
அஈ/ஈஅ	7-12=19	12-7=19	26.76
ஆஈ/ஈஆ	4-7=11	7-4=11	15.49
இஈ/ஈஇ	1-1=2	1-1=2	2.81

அட்டவணை 4 இன் படி அஆ குலங்களுக்கிடையே மிக அதிக விழுக்காடு திருமணங்கள் நடைபெற்றுள்ளதைக்

காணமுடிகிறது. அ-ஈ குலங்களுக்கிடையே நடைபெற்றுள்ள திருமணங்களின் விழுக்காடு இரண்டாவது இடத்தையும், இ-ஈ ஐந்தாவது இடத்தையும் (மிகக்குறைந்த) வகிக்கின்றன. குல அடிப்படையில் சமூக, பொருளாதார வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. நான்கு குலங்களுக்கிடையே நடைபெற்றுள்ள திருமணங்களின் எண்ணிக்கையில் இத்தகைய வேறுபாடுகள் காணப்படுவதற்கு வெவ்வேறு குலங்களின் மக்கள் தொகை வேறுபாடே முக்கிய காரணமாக அமையக் கூடுமெனத் தோன்றுகிறது. அ மற்றும் ஆ குலங்கள் அதிக மக்கள் தொகையை உடையதாகவும் இ குலம் மிகக் குறைந்த மக்கள் தொகையை உடையதாகவும் காணப்படலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள கப்பாலா என்ற பாடியின் மக்கள் தொகை அட்டவணை (அட்டவணை-5) இதற்குச் சான்றாகக் காணப்படுகிறது.

அட்டவணை–5

குல அடிப்படையில் மக்கள் தொகை

குடும்பத் தலைவர்	ஆண்				பெண்			
	குலம் அ	குலம் ஆ	குலம் இ	குலம் ஈ	குலம் அ	குலம் ஆ	குலம் இ	குலம் ஈ
வைகுண்டன்	1					5		
பைதல்	1			3				4
முராரி		1		1		2		
இராமகிருஷ்ணன்	2				6			
பாற்றா	1							
தம்பி	1			5				3
கோவிந்தன்	1	2				3		
குஞ்சுராமன்	1	1				3		
தம்பி	5	1			3			
சும்பிரி		2				1		
கும்பள்ளி	1	1			3			
அச்சு		1			3			
அச்சுதன்	1	1			1			
கல்லு	1					1		
அம்பாடி	1	1			1			
இராமன்	1							1
மாரா	2				2			2
அப்பு	1	1			4			
குஞ்சுக்கண்ணன்		1		1		1		
சப்பரன்			1	1			2	
ராமோதரன்		1		1		2		
பாண்டியன்				1		1		1
சாமி		1		1				
மாதவன்	2			1	2			
கேசவன்	2			1	1			
மொத்தம்	25	15	1	16	26	19	2	11

மேலே கொடுக்கப்பட்ட அட்டவணையின்படி சுமார் 25 குடும்பங்களின் குல அடிப்படையிலான மக்கள் தொகையைப் பார்க்கும் போது, அ மற்றும் ஆ குலங்கள் அதிக மக்கள் தொகை உடையதாகவும் இ குலம் மிகக் குறைந்த மக்கள் தொகை உடையதாகவும் காணப்படுகிறது. பொதுவாகத் தென்னிந்திய திருமண முறையின்படி திருமணத்துக்குப் பிறகு ஒரு பெண்ணின் குலத்தைவிட்டு விடுவது வழக்கம். காரணம், திருமணத்திற்குப் பிறகு ஒரு பெண் அவளது கணவனின் குலத்தில் சேர்ந்து விடுகிறாள். இதற்கு நேர் மாறான அமைப்பு முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுகிறது. பிறக்கும் பிள்ளைகள் எல்லோரும் (ஆணும், பெண்ணும்) தாயின் குலத்தைச் சேர்ந்தவர்களாகும். இவர்களின் திருமண முறையின்படி பெண்ணுக்குத் தாலி கட்டுவது பெண்ணின் தாய்மாமன் அல்லது மூத்தசகோதரன் ஆவார். இதற்கு அவர்கள் கூறும் காரணம் யாதெனில் பெண்ணின் குலத்தைச் சேர்ந்த இரத்த உறவினர்தான் தாலி கட்ட வேண்டும் என்பதாகும்.

முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் குல அமைப்பு திருமண ஒழுங்கில் மட்டுமன்றி வேறு சடங்குகளிலும் முக்கிய இடத்தை வகிக்கிறது. இறந்த ஒருவரை நீராட்டும்போது அவரது குலத்தைச் சார்ந்தவர்தான் முதலில் தண்ணீர் கொண்டு வைக்க வேண்டும். மேலும் இறப்புத் தீட்டுக்கழிக்கும் சடங்கன்று எல்லோருக்கும் எண்ணெய் வார்த்துக் கொடுப்பதும் இறந்தவரின் குலத்தைச் சேர்ந்தவர் தான் செய்ய வேண்டும். இறந்த ஒருவரை எரிப்பதாக இருந்தால் அவரது குலத்தைச் சேர்ந்தவர்தான் கால்பாகமும் தலைப்பாகமும் முதலில் தீ வைக்கவேண்டும். இவ்வாறு முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பில் குலம் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

திருமணமுறை

பொதுவாக ஒரு மணமகன் தன் தாய்மாமனின் மகளையோ அல்லது தகப்பனின் சகோதரியின் மகளையோ திருமணம் செய்துகொள்வது தென்னிந்தியாவில் எல்லா சாதி

மதத்தினரிடையேயும் காணப்படும் திருமணமுறையாகும். முள்ளுக்குறும்பர்கள் இத்தகைய திருமண முறையை முற்றிலுமாகப் புறக்கணிக்கின்றனர். சொந்தக் கிராமத்திலோ உறவினர் மத்தியிலோ அவர்கள் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. தென்னிந்திய திருமண முறைப்படி முறைப்பெண் அல்லது முறை மாப்பிள்ளை எனக் கருதும் தாய்மாமன் மற்றும் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகளையும் முள்ளுக்குறும்ப உறவுமுறை அமைப்பில் சொந்த சகோதர சகோதரிகளாகவே கருதுவதோடு அவ்வாறான உறவுமுறைச் சொற்களையும் பயன்படுத்துவதும் குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இரண்டு குடும்பங்களுக்கிடையே பெண் எடுப்பதும் கொடுப்பதும் வைத்துக் கொள்வதில்லை. சகோதரிகள் இரண்டுபேரை ஒரே வீட்டில் திருமணம் செய்துகொடுப்பது அவர்கள் முறைப்படி தவறாகக் கருதப்படாவிட்டாலும் அவ்வாறு செய்யப்படுவதில்லை. இவர்கள் ஒரே பாடியில் மட்டுமின்றி அண்மையிலுள்ள பாடிகளில்கூடத் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. எனவே, இவர்கள் புற இன மணமுறையைப் பாடி அல்லது கிராம அளவிலும் பின்பற்றுகின்றனர். இவ்வாறு, முள்ளுக்குறும்பர்களின் திருமண முறையைப் பார்க்கும்போது தென்னிந்தியத் திரும்ண முறையிலிருந்து வேறுபடுவதையும் இந்தோ-ஆரியத் திருமணமுறையோடு ஒப்புமையுடையதாகக் காணப்படுவதையும் அறிய முடிகிறது.

முள்ளுக்குறும்பர்களின் திருமண முறைப்படி முதலில் ஆண் வீட்டிலிருந்துதான் பெண் தேடிச் செல்லவேண்டும். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் வாழும் முள்ளுக்குறும்பர்களில் பெரும்பாலோரும் கேரள மாநிலத்தில் வயநாடு பகுதியில் நெடுந்தூரம் சென்று திருமணம் செய்துகொள்கின்றனர். வழக்கமாக முதலில் பெண் தேடிச் செல்வது மணமகனின் தகப்பன் ஆகும். முதலாவதாக பெண் எந்தக் குலத்தைச் சேர்ந்தவள் என்று பார்ப்பார்கள். குலம் பொருத்தமாக இருந்தால்தான் பெண் கேட்டு வந்ததாகக் கூறுவார்கள். பெண் கேட்டுச் செல்பவர் இரண்டாவது நாள் போகும்போதுதான் பெண் வீட்டாரின் விருப்பத்தைக் கூறுவார்கள். பெண் வீட்டார் விரும்பாவிட்டால்

பெண்ணுக்காக இங்கு வரவேண்டாம் என்று கூறிவிடுவார்கள். பெண் வீட்டாருக்கு விருப்பமாக இருந்தால் ஏதாவது கொண்டு வந்தால் கொடு என்று கூறுவார்கள். இவ்வாறு கேட்பது தங்களின் விருப்பத்தை வெளிப்படுத்துவது ஆகும். அவ்வாறு கேட்கும்போது பெண் தேடிச் சென்றவர் 10 அல்லது 15 ரூபாய் கொடுப்பார். முற்காலத்தில் ரூபாய்க்குப் பதில் ஒரு புட்டி சாராயம் கொண்டு போவது வழக்கம். பின்னர் பெண் தேடிச் சென்றவர் பெண்ணின் பெற்றோரிடம் உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்பார். அப்போதுதான் பரிசப்பணம்[1] (Bride Price) கேட்பார்கள். தற்போது பரிசப்பணம் 100 முதல 200 ரூபாய் வரையிலும் காணப்படுகிறது. பின்னர் ஒரு நாளைக் குறித்து அன்று ஒரு மூநாமனையும்[2] (mu:ŋa:men) கூட்டிக்கொண்டு வருமாறு பெண் வீட்டார் கூறுவர். இவ்வாறு மூநாமனும் மணமகன் வீட்டாரும் பெண் வீட்டுக்கு செல்லும் நாளை 'பெண்ணு குறி' என்பர். அன்று திருமண நாள் நிச்சயித்துவிடுவார்கள். பின்னர் மணமகனிடம் பீலி அணிந்துகொள்ளுமாறும்[3] திருமணத்துக்கு ஆயத்தமாகிக் கொள்ளுமாறும் கூறுவர். பெண்ணுகுறி அன்று பக்கத்து வீடுகளில் உள்ள நெருங்கிய உறவினர்களும் கலந்து கொள்வார்கள். அன்று எல்லோரும் மதுபானம் அருந்திய பின்னர் பக்கத்துப் பாடிகளில் வாழ்பவர்களைத் திருமணத்துக்கு அழைப்பார்கள். இப்போதும் அச்சிட்ட திருமண அழைப்பிதழ் வழங்கும் பழக்கம் இவர்களிடையே இல்லை.

முள்ளுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகள் யாவும் தெய்வப்புரையில்தான்[4] நடைபெறும். திருமணச் சடங்குகள் மூன்று அல்லது நான்கு நாட்கள் நடைபெறும். திருமணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முந்திய தினத்தை 'பெந்துவா' என்று கூறுவார்கள். அன்று உறவினர் எல்லோரும் கூடிவந்து வேட்டைக்குச் செல்லுவார்கள். அன்றய வேட்டையை 'பெந்துவா நாயாட்டு' என்பார்கள். அதாவது உறவினர்களோடு வேட்டைக்குச் செல்லுதல். அன்று நண்பகல் முதல் உறவினர்களுக்கும் அந்தப் பாடியிலுள்ள அனைவருக்கும் திருமண வீட்டார்தான் உணவளிக்கவேண்டும். அன்று இரவுமுழுவதும் தெய்வப்புரையின் முன்னால்

'கோல்களி'[5] நடைபெறும். மறுநாள் காலையில் அதாவது திருமணத்துக்கு முன்தினம் காலையில் மணப்பந்தல் வேலை ஆரம்பிப்பார்கள். மணப்பந்தல் தெய்வப்புரையின் முன்னால்தான் கட்டுவார்கள். அன்று அண்மையிலுள்ள பாடிகளில் வாழ்பவர்கள் கூடி வருவார்கள். அன்றய தினத்தை 'ஆளுகூடல்' என்று கூறுவார்கள். அன்று பிற்பகல் ஆண்கள் வேட்டைக்குச் செல்வார்கள், பெண்கள் சமையல் வேலையில் ஈடுபடுவார்கள். வேட்டைக்குச் சென்றவர்கள் மாலையில் திரும்பி வருவார்கள். பின்னர் இரவு சோறு உண்டபின்னர் பந்தலின் நடுவில் விளக்கேற்றி வைத்து வட்டக்களி[6] ஆரம்பிப்பார்கள். வட்டக்களி இரவு முழுவதும் காணப்படும். பெண்வீட்டுத் திருமணமாக இருந்தால் வட்டக்களிப் பாட்டோடு அன்று இரவு கதையும் பாட்டும்[7] காணப்படும். ஆண் வீட்டுத் திருமணமாக இருந்தால் மறுநாள் காலையில் மணமகன் மணமகள் வீட்டிற்குச் செல்வதற்கு ஆயத்தமாவார்.

மணமகன் மணக்கோலம் பூண்டு மணமகள் வீட்டிற்குப் போகும்போது 'காணங்கெட்டி'[8] என்பவரும் 'முண்டுகார்த்தி'[9] என்பவரும் ஒரு 'மூநாமனும்'[10] சுமார் பத்து இளம் பெண்களும் போவது வழக்கம். இவர்கள் நாகரீக முறைப்படி ஆடை அணிபவர்களாக இருந்தாலும் மணமகனோடு செல்லும்போது பாரம்பரிய முறைப்படி அணிவேண்டிய ஆடைகள்தான் அணிய வேண்டும். அதாவது மணமகன் திருமணத்திற்கு முன்தினம் காதில் அணியப்பட்டுள்ள பீலி யை அகற்றிவிட்டு 'காதலா' என்ற ஒரு அணிகலன் அணியவேண்டும். இதை திருமணத்துக்குப்பின் மூன்றாவது நாள் கழற்றிவிடவேண்டும். மேலும் மணமகள் வீட்டிற்குப் போகும்போது கையில் ஒரு வெள்ளிவளை அணியவேண்டும். இடுப்பில் துணியாலான ஒரு கச்சையும் கட்டவேண்டும். வெள்ளியால் செய்யப்பட்ட ஒரு கத்தியும்[11] அதன் உறையும், இரும்பால் செய்யப்பட்ட ஒரு எழுத்தாணியும் கச்சையில் வைக்கவேண்டும். காணங்கெட்டி என்பவரும் இடுப்பில் ஒரு கச்சைகட்டி அதில் பெண்வீட்டு கார்ணோரிடம்[12] கொடுக்க வேண்டிய 5½ ரூபாய் நாணயத்தை வைக்கவேண்டும். 'முண்டுகார்த்தி' மணப்பெண்ணுக்குரிய புதிய ஆடைகளைக் கொண்டுபோக வேண்டும். 'மூநாமன்' ஒரு பெரிய அரிவாள்

கொண்டுபோக வேண்டும். ஏனையோரும் அவர்களின் பாரம்பரிய முறைப்படி வெள்ளைநிற ஆடைகள்தான் அணியவேண்டும். பொதுவாக மணமகனோடு வேறு ஆண்கள் செல்வதில்லை. ஆண்கள் எல்லோரும் மணமகனை மணமகள் வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டு வேட்டைக்குச் செல்வதும் மாலையில் திரும்பி வருவதும் வழக்கம்.

மணமகன் மணமகளின் வீட்டில் சென்றதும் தெய்வப்புரையின் வராந்தாவில் அமரச் செய்வார்கள். அமரும்போது மணமகனின் வலது பக்கத்தில் காணங் கெட்டியும் இடது பக்கத்தில் முண்டுகார்த்தியும் அமரவேண்டும். மணமகனோடு வந்தவர்களுக்கு அறிமுகமான மணமகள் வீட்டார் யாராவது இருந்தால் அவர்களுக்கு வெற்றிலை கொடுத்து அன்பு பாராட்டிக் கொள்வது வழக்கம். பின்னர் பந்தலின் நடுவில் விளக்கேற்றி வைத்து கோல்களி ஆரம்பிப்பார்கள். சுமார் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கோல்களி நடைபெறும். கோல்களி முடிந்தவுடன் எல்லோருக்கும் உணவு வழங்குவார்கள். அப்போதுதான் மணமகனையும் அவனோடு வந்தவர்களையும் தெய்வப்புரையின் உள்ளே அழைப்பார்கள்.

மணமகன் மணமகள் வீட்டிற்கு வந்து சேர்வதற்கு முன்னால் மணப்பெண்ணை ஆயத்தப்படுத்தி தெய்வப்புரையில் அமரச் செய்வார்கள்.[13]

மணமகனும் அவரோடு வந்தவர்களும் தெய்வப்புரையினுள் சென்றதும் முண்டுகார்த்தி மணப்பெண்ணின் கையைப் பிடித்து எங்கள் வீட்டிற்குப் போவோம் வா என்று கூறி தன் பக்கமாக சேர்த்துக் கொள்வாள். இவ்வாறு மணப்பெண் மணமகனின் குடும்பத்தோடு சேர்க்கப்படுகிறாள். இதுவே மணமகன் அப்பெண்ணை தன் மனைவியாக ஏற்றுக் கொள்கிற முறையாகும். பின்னர் மணமகன் வீட்டார் கொண்டுவந்த புதிய ஆடைகளை மணப்பெண்ணுக்கு அணிவார்கள். பின்னர் மணப்பெண்ணின் தாய்மாமன் தெய்வப்புரையினுள் செல்வார். அப்போது காணங்கெட்டி 51/2 ரூபாய்

ணயத்தை அவரிடம் கொடுப்பார். அவர் அந்த ரூபாயை ர்ணோரிடம் கொடுப்பார். மணமகன், மணமகள், முண்டுகார்த்தி, காணங்கெட்டி ஆகியோருக்கு மணமகளின் தாய்மாமன் தெய்வப்புரையினுள் இலைபோட்டு சோறு வழங்குவார். பின்னர் மணமகளின் தந்தை மணமகனுக்கும் காணங்கெட்டிக்கும் வெற்றிலை கொடுத்து தெய்வப்புரையின் வராந்தாவில் அமரச் செய்வார் எல்லோரும் சோறு உண்டபின்னர் மணமகனும் காணங்கெட்டியும் திரும்பவும் தெய்வப்புரையினுள் செல்வார்கள். அப்போது ஒருவர் தெய்வப்புரையின் உள்ளே சென்று வெற்றிலை கொடுப்பார். பின்னர் மணமகனும் மணமகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தெய்வப்புரையிலிருந்து வெளியே வருவார்கள். அப்போதும் வெளியே ஒருவர் வெற்றிலை கொடுத்துக் கொண்டிருப்பார் அதையும் பெற்றுக்கொண்டு அப்படியே மணமகன் வீட்டிற்குப் புறப்பட்டுவிடுவார்கள் அவ்வாறு மணமகன் வீட்டிற்குப் போகும்போது மணமகள் வீட்டார் யாரும் உடன் செல்வதில்லை

மணமகனின் வீட்டில் செல்லும்போது முதலில் காணங்கெட்டியும், இரண்டாவது மணமகனும் பின்னர் முண்டுகார்த்தியும் அதன்பிறகு மணப்பெண்ணுமாக தெய்வப்புரையினுள் செல்லவேண்டும் பின்னர் காணங்கெட்டி மணமகன் ஆகியோர் தங்கள் வீட்டிற்குச் செல்வர் மணப்பெண் தெய்வப்புரையில்தான் இருப்பாள்.

இவ்வாறு திருமண நிகழ்ச்சிகள் நடைபெறும்போது இரண்டுபேர் வெற்றிலை கொடுப்பதும் பொதுவாக எல்லோரும் மதுபானம் அருந்துவதும் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் ஒரு முக்கிய பழக்கமாக உள்ளது

மணமக்கள் மணமகனின் வீட்டில் சென்று இரவு எல்லோரும் சோறு உண்டபின் பந்தலின் நடுவில் விளக்கேற்றி வைத்து வட்டக்களி ஆரம்பிப்பார்கள் அன்று இரவு முழுவதும் வட்டக்களியும் கதை பாட்டும் காணப்படும். மணமக்களுக்குத் தனி வீடு இருந்தால் அங்கு செல்வார்கள்.

இல்லாவிடில் அன்று தெய்வப்புரையிலேயே தூங்குவது வழக்கம். மறுநாள் காலையில் ஆண்கள் முயல் வேட்டைக்குச் செல்வார்கள். அன்று நண்பகல் எல்லோரும் உண்டபின்னர் உறவினர்கள் பிரிந்து செல்வார்கள்.[14]

திருமணத்துக்குப் பின் மூன்றாவது அல்லது ஐந்தாவது நாள் மணமக்கள் மணமகளின் வீட்டிற்குச் செல்வார்கள் அவர்களோடு இரண்டு அல்லது மூன்று ஆண்களும் இரண்டு அல்லது மூன்று பெண்களும் செல்வது வழக்கம். இரண்டு 'கட்டு புட்டும்'[15] கொண்டுபோவார்கள். இவ்வாறு புறப்பட்டுப்போகும் போது முதலில் புட்டுக்கட்டுகளும் மணமகளும் தெய்வப்புரையிலிருந்து புறப்பட்டுப் போகவேண்டும். மணமக்களோடு புட்டுக்கட்டுகளும் கொண்டு செல்பவர்கள் பாதி தூரம் தான் செல்வார்கள். பாதி தூரத்தில் பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்களும் பெண்களும் மணமக்களை அழைத்துச் செல்ல வந்திருப்பார்கள். மணமகன் வீட்டார் புட்டுக் கட்டுகளை மணமகள் வீட்டாரிடம் கொடுப்பார்கள். இவ்வாறு மணமக்கள் போவது மூன்றாவது நாளாக இருந்தால் மணமகள் வீட்டார் புட்டுக்கட்டை அவிழ்த்து மூன்று தோசையை மணமகன் வீட்டாரிடம் கொடுப்பார்கள். ஐந்தாவது நாளாக இருந்தால் ஐந்து தோசை கொடுப்பார்கள். பின்னர் மணமகன் வீட்டார் தங்கள் வீட்டிற்குத் திரும்பி சென்றுவிடுவார்கள். மணமகள் வீட்டார் மணமக்களை அழைத்துச் செல்வார்கள். அங்கு சென்றவுடன் தெய்வப்புரைக்குச் சென்று புட்டுக்கட்டை அவிழ்த்து இறந்துபோனவர்களுக்கு படைத்துவிட்டு அந்தப் பாடியிலுள்ள எல்லோருக்கும் புட்டு வழங்குவார்கள்.

மணமகள் வீட்டில் அய்ந்து அல்லது ஏழு நாட்கள் தங்குவது வழக்கம். அந்நாட்களில் மணமகனை கவுரவிக்கும்படி மணமகள் வீட்டார் மணமகனை வேட்டைக்கு அழைத்துச் செல்வார்கள். இதே போன்று மணமகன் வீட்டைச் சேர்ந்த பெண்கள் மணமகளை மீன்பிடிக்க அழைத்துச் செல்வது வழக்கம். மணமகள் வீட்டிலிருந்து திரும்பிச் செல்லும்போதும் அய்ந்து அல்லது ஆறுபேர்

புட்டுக்கட்டுகளுடன் பாதி தூரம் வரை வருவார்கள். மணமகன் வீட்டிலிருந்தும் நாலு அல்லது ஐந்து பேர் பாதி தூரம் வரை வருவார்கள். இவர்கள் மணமகள் வீட்டார் கொண்டுவரும் புட்டுகளை வாங்கி, மணமக்கள் திரும்பி வருவது ஐந்தாவது நாளாக இருந்தால் ஐந்து தோசையும் ஏழாவது நாளாக இருந்தால் ஏழு தோசையும் மணமகள் வீட்டாரிடம் திருப்பிக் கொடுப்பார்கள். மணமக்கள் வீட்டில் சென்றதும் முதலில் தெய்வப்புரையில் சென்று இறந்தவர்களுக்குப் படைத்தபின்னர் எல்லோருக்கும் தோசை வழங்குவார்கள். அப்போது தம்பதி ளுக்கும் அவர்களை அழைத்து வந்தவர்களுக்கும் தெய்வப்புரையிலேயே சோறு வழங்குவார்கள். மணமகனுக்கு தனி வீடு வசதியிருந்தால் தம்பதிகளை அங்கு அழைத்துச் செல்வார்கள். இல்லாவிட்டால் அன்றுமட்டும் தெய்வப்புரையிலேயே தூங்குவார்கள். பொதுவாக அன்றுதான் அவர்களுக்கு முதலிரவாக இருக்கும். அதோடு திருமணச் சடங்குகள் யாவும் முடிவடையும்.

மணமகன் மணமகளின் வீட்டிற்குச் செல்லும்போது மூநாமன் என்பவர் ஒரு பெரிய கத்தியை ஏந்திச் செல்வதும், மணமக்கள் மணமகளின் வீட்டிற்குச் செல்லும்போதும் வரும்போதும் பாதி தூரம்வரை இருவீட்டாரும் செல்வதும் அழைத்து வருவதும் முள்ளுக்குறும்பர்களின் திருமணச்சடங்குகளில் காணப்படும் தனித்தன்மைகள் ஆகும். மணமக்கள் அடர்ந்த காடுகளின் வழி நடந்து செல்லும்போது ஆபத்துக்கள் நேரிடாதவண்ணம் காப்பதற்காக இவ்வாறு அமைத்திருக்கலாம் எனவும் கருதலாம்.

ஒரு பெண் திருமணமாகி கணவன் வீட்டிற்கு வந்தபிறகு அப்பெண்ணின் பெயர் விரும்பத்தக்கதாக இல்லாதிருந்தாலோ அல்லது அவ்வீட்டில் வயதில் முதிர்ந்தவர்களுக்கு அதேபெயர் இருந்தாலோ புதிதாகத் திருமணமாகி வந்த பெண்ணின் பெயரை மாற்றும் வழக்கம் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுகிறது. பொதுவாகப் புதிய பெயரிடுவது கணவனின் தாயாகும். இப்பெயரை 'மளமாட்டிப் பேரு' (malama:ttipe:ru) என்று கூறுவார்கள். கணவன் வீட்டார் மட்டுமே

இப்பெயரைப் பயன்படுத்துவார்கள். இதேப்போன்று ஒரு ஆண்மகனின் பெயரையும் பெண்வீட்டார் மாற்றலாம். இதை 'மளமாளன் பேரு' (maḷama:ḷen pe:ru) என்பார்கள். பொதுவாக ஆண்களின் பெயரை மாற்றுவதில்லை. இவ்வாறு திருமணத்துக்குப்பின் ஒரு பெண்ணின் பெயரை மாற்றும் வழக்கம் காசுமீர் மாநிலத்தில் வாழும் இந்துக்களிடையேயும் காணப்படுகிறது. (பார்க்க: இராபர்ட் சத்திய சோசப், 1983).

வேறு சாதி மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது முள்ளுக்குறும்பப் பெண்கள் திருமணத்துக்குப்பிறகு தாய் வீட்டிற்குச் செல்வது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. திருமணமாகிய முதல் சில மாதங்களில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் தாய்வீட்டிற்குச் செல்வர். பின்னர் கணவனின் குடும்பத்தோடு ஒன்றறக்கலந்து விடுகின்றனர். முதல் குழந்தைப் பேற்றின்போதும் கணவனின் வீட்டிலேயே இருந்துவிடுகின்றனர். குழந்தை பிறந்தவுடன் கணவனின் குடும்பத்தில் மனைவியின் நிலை மேலும் உறுதியாகிவிடுகிறது.

இவ்வாறு முள்ளுக்குறும்பர்களின் திருமணமுறையைப் பார்க்கும்போது ஒரு தனித் தன்மையுடையதாகக் காணப்படுகிறது. திருமணத்தின்போது மணமகளுக்கு மணமகன் தாலி கட்டுவதில்லை. திருமணத்துக்கு முன்தினம் இரவு மணமகளின் தாய்மாமன் தெய்வப்புரையில் வைத்து தாலிகட்டிவிடுவார். தாய்மாமன் இல்லாவிடில் மணமகளின் மூத்த சகோதரன் கட்டலாம். தாலி செய்யும் பொறுப்பும் மணமகனுக்கு இல்லை. பொதுவாக தாய்மாமன்தான் தாலி செய்து கொண்டுவருவது வழக்கம். மேலும் மணமகனும் மணமகளும் எந்தவிதத் திருமண ஒப்பந்தமும் செய்துகொள்வதில்லை. கணவன் இறந்துவிட்டாலும் தாலி யை அகற்றுவதில்லை. பிற சாதி மதத்தினரோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, முள்ளுக்குறும்பர்களின் தாலி யின் தன்மையே சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது.

முள்ளுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகளில் வேட்டையும் கிராமிய நடனங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒரு பெண் மணப்பருவம் அடைந்ததும்

அப்பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கவேண்டுமெனப் பெற்றோர் அதிக அக்கறைப்படுவதில்லை. ஒரு பெண்ணுக்கு மணமகன் வரும்வரை காத்திருக்கவேண்டும். மணமகனைத் தேடிச் செல்லும் பழக்கம் இவர்களிடையே இல்லை. ஒரு பெண்ணின் திருமணச் செலவைவிட ஒரு ஆணின் திருமணச் செலவு அதிகமாகக் காணப்படுகிறது. இவர்களின் திருமணச் செலவில் பெரும்பகுதியும் விருந்தினரை உபசரிப்பதற்கே செலவிடப்படுகிறது.

ஒரு பெண்ணுக்கு நல்ல மணமகன் அமைவது அவளது குணநலன், அழகு, உடல்வலிமை ஆகியவற்றைப் பொறுத்ததாகும். எனவே சில பெண்களுக்கு 18 அல்லது 20 வயதிலேயே திருமணமாகி விடுவதும் சில பெண்கள் 30 அல்லது 40 வயது வரையிலும் திருமணமாகாமல் இருப்பதையும் காணமுடிகிறது. ஆனால் ஆண்களுக்கு 20 முதல் 25 வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது. மேலும் தவறான நடத்தையுடைய அல்லது அழகற்ற பெண்களுக்குப் பரிசப்பணம் குறைவாகவே கிடைக்கும். பொதுவாகக் கூடுதல் பரிசப்பணம் கொடுத்துத் திருமணம் செய்து கொள்வதற்கு வசதியற்றவர்கள் அல்லது மறுமணம் புரிபவர்கள் இத்தகைய பெண்களைத் திருமணம் செய்கின்றனர்.

பொதுவாக முள்ளுக்குறும்பர்கள் ஒரு கணவனுக்கு ஒரு மனைவி என்ற முறையையே பின்பற்றுகின்றனர். விவாகரத்து செய்துகொள்வதும் மறுமணம் செய்வதும் இவர்களிடையே காணப்படுகின்றன. ஒரு பெண் அல்லது ஆண் விவாகரத்து செய்துகொண்டாலோ அல்லது கணவனோ மனைவியோ இறந்து விட்டாலோ எத்தனை முறை வேண்டுமானாலும் மறுமணம் செய்துகொள்ளலாம்.

ஒரு பெண் தன் கணவனோடு வாழ விரும்பாமல் விவாகரத்து செய்ய விரும்பினால் அவளின் பெற்றோர் வாங்கிய பரிசப்பணத்தையும், கார்ணோருக்குக் கொடுத்த காணப்பணத்யையும் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆனால் ஒரு ஆண் விவாகரத்தை விரும்பினால் பெண்

வீட்டாரிடமிருந்து எதுவுமே பெற்றுக் கொள்வதற்கு உரிமையில்லை.

பொதுவாக விதவைகள் எந்தவிதமான சமூக கட்டுப்பாடுகளாலும் துன்புறுத்தப்படுவதில்லை. ஒரு விதவைக்கும் கணவனோடு வாழும் பெண்ணுக்கும் ஆடை அணிகலன்களில் எந்தவித வேறுபாடும் காணப்படுவதில்லை. ஆனால் ஒரு விதவையைக் குறிப்பிடும் போது 'பிண்டத்தி' என்றும் மனைவி இறந்த ஒருவரை 'பிண்டன்' என்றும் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர்.

ஒரு விதவையை மறுமணம் செய்துகொள்பவர் அந்த விதவையின் முன்னாள், கணவனின் உறவினராக இருக்கக் கூடாது. மேலும் குலம் போன்ற சட்டதிட்டங்களையும் கடைப்பிடிக்கவேண்டும். அதேப் போன்று ஒருவரின் இரண்டாவது அல்லது மூன்றாவது திருமணத்தின்போது பரிசப்பணம், கார்ணோருக்குக் கொடுக்கவேண்டிய ரூபாய் ஆகியவற்றைக் கொடுக்கவேண்டும்.

விருப்பத்திருமணம், கடத்திச் செல்லுதல் போன்றவை மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. கூடலூர் தாலுகாவில் வாழும் முள்ளுக்குறும்பர்களில் எந்த ஒரு ஆண்மகனும் வேறு சாதி மதத்தைச் சேர்ந்த பெண்களோடு தவறாக நடந்துகொண்டதாகத் தெரியவில்லை.[16] முற்காலத்தில் அண்ணன் மனைவியோடு தம்பி உடலுறவு கொண்டாலும் அதை ஒரு பெரிய குற்றமாகக் கொள்வதில்லை எனவும் அண்ணன் தம்பி மனைவியோடு எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற ஒரு நிலை இருந்ததாகவும் கூறுகின்றனர். தற்போது அவ்வாறு அண்ணன் மனைவியோடு தவறாக நடந்துகொள்வதில்லை என்றும் கூறுகின்றனர். எனவே 'அண்ணன் மனைவியிடம் தம்பிக்கு உரிமையுண்டு, தம்பி மனைவியிடம் அண்ணனுக்கு உரிமையில்லை' என்ற ஒரு நிலை முள்ளுக்குறும்பர்களிடையே காணப்பட்டுள்ளது. இதே நிலை தருமபுரிமாவட்டத்தில் ஒருசாராரிடம் காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுவதை (இராமநாதன், ஆறு, 1982:71) இங்கு சுட்டிக் காட்டலாம். இப்போதும் அண்ணன்

மனைவிக்கும் தம்பிக்குமிடையே காணப்படும் கேலி உறவு (Joking relationship) மற்றும் தம்பி மனைவி அண்ணனைக் கண்டால் மரியாதையோடு விலகிச் செல்வதும் இதற்குச் சான்றாக அமைகிறது. தமிழகத்திலும் கேரளமாநிலத்தின் சில பகுதிகளிலும் காணப்படும் நாட்டுப்புறப் பாடல்களில் அண்ணன் மனைவியோடு உடலுறவு கொண்ட தம்பியை அண்ணன் கொலை செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. (இராமநாதன், ஆறு, 1982:64). ஆனால் முள்ளுக்குறும்பர்களிடையே இதுபோன்ற சம்பவங்கள் நடந்ததாக ஆதாரங்கள் எதுவும் இல்லை. எனவே அண்ணன் மனைவியோடு உடலுறவு கொள்வதை இப்போது தவிர்த்தாலும் அவர்களின் சமூக அமைப்பின்படி அதை ஒரு பெரிய குற்றமாகக் கருதவில்லை எனவும் அதனால்தான் அண்ணன் தம்பிகளுக்கிடையே பூசல்கள் ஏற்படவில்லை எனவும் கொள்ளலாம். இதுபோன்ற நட்புகள் நீலகிரி மாவட்டத்தில் வாழும் தோடர், கோத்தர் ஆகியோரிடம் காணப்படும் பலகணவ மணத்தின் எச்சமாகவும் இருக்கலாம். இப்போது அத்தகைய நட்பினைத் தவறெனக் கருதும் பிற சமூக அமைப்புகளைச் சேர்ந்த மக்களோடு ஏற்பட்ட தொடர்பின் காரணமாக முள்ளுக்குறும்பர்களும் இதைத் தவிர்க்க முயல்கின்றனர் எனவும் கொள்ளலாம்.

முள்ளுக்குறும்பர்களிடையே காணப்பட்ட இம்முறையைப் பார்க்கும்போது ‘அண்ணன பொண்டாட்டி அரைப்பொண்டாட்டி தம்பி பொண்டாட்டி தன் பொண்டாட்டி’ என்ற பழமொழிக்குச் சற்று முரண்பட்டுக் காணப்படுகிறது. ஆறு. இராமநாதன், (1982:70-71) கூறும் பின்வரும் கருத்து நோக்கத்தக்கது:

> ‘அண்ணன் மணந்துகொள்ளும்போது தம்பி சிறியவனாக இருக்கலாம். இதுபோன்ற நிலைகளில் அண்ணன் மனைவியைத் தம்பி முழுமையாக ஆளுமை செய்ய இயலாது. இதே நேரத்தில் பாலியல் அனுபவம் மிகுந்த அண்ணன், தன் கூட்டுக்குடும்பத் தலைமையதிகாரத்தைப் பயன்படுத்தித் தம்பி மனைவியை முழுமையாகத் தானே அனுபவிக்கமுடியும். இதனை

அண்ணன் பொண்டாட்டி அரைப் பொண்டாட்டி, தம்பி பொண்டாட்டி தன் பொண்டாட்டி என்ற பழமொழி தெளிவுபடுத்துகிறது. இதுபோன்ற நடைமுறைகள் அண்ணன் தம்பிகளுக்கிடையே பூசல்களை ஏற்படுத்தியிருக்கலாம். இதுபோன்ற பூசல்களைத் தவிர்ப்பதற்காகவே , ,ண்ணன் மனைவியிடம் தம்பிக்கு உரிமையுண்டு, தம்பி மனைவி அண்ணனுக்கு உரிமையில்லை என்ற புதிய விதி சமுதாயத்தில் தோன்றியிருக் வேண்டும் . . . . . இப்புதிய விதி !பூசலைத் தவிர்ப்பதற்குப் பதில் பூசலை மிகுதிப்படுத்தியிருக்க வேண்டும்'.

இவ்வாறு சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் பார்க்கும்போது முள்ளுக்குறும்பர்களின் சமூக அமைப்பிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்குமெனத் தோன்றுகிறது.

இனி கப்பாலா பாடியில் நடைபெற்றுள்ள திருமணங்களைப் பற்றி ஆராயலாம்.

முன்னர்க் குறிப்பிட்டது போன்று நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுக்காவில் முள்ளுக்குறும்பர்கள் கப்பாலா உட்பட 10 பாடிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

அட்டவணை 6

அறுபது திருமணங்களின்மூலம் கப்பாலா பாடியோடு இணைக்கப்பட்டுள்ள கிராமங்களின் பெயர்களும் திருமணங்களின் எண்ணிக்கைகளும்.

வ.எண்.	கிராமத்தின் பெயர்	திருமணங்களின் எண்ணிக்கை
1.	திருமத்தா	1
2.	காடங்கொல்லி	1

3.	நடுவயல்	1
4.	நெல்லாறு	1
5.	பொலச்சிக்குன்னி	1
6.	அண்டுரு	1
7.	கெடங்கல்	2
8.	அயினிப்பெர	1
9.	வேங்கூரு	1
10.	கோவிந்தன்பெர	1
11.	தோட்டப்பெர	1
12.	நாரங்கொல்லி	1
13.	ஞாமலம்	1
14.	அம்மதமூலா	1
15.	வெளிதேங்கி	1
16.	ஓணிமூலா (தமிழ்நாடு)	1
17.	மாரோட்டு	1
18.	புறக்காடி	2
19.	மீனங்காடி	1
20.	தெற்கேபொற்ற	3
21.	திருநெல்லி	1
22.	நாய்கட்டி	1
23.	மணங்கால்	1
24.	பொட்டநோட்டு	1
25.	கள்ளாடிக்கொல்லி	1
26.	கோட்டுடு	1
27.	சோலம்போத்து	1
28.	அப்பாடு	1
29.	மாதமங்கலம்	2
30.	பெட்டச் சேரி	1
31.	கானஞ்சேரி	1
32.	புஞ்சவயலு	2
33.	வெலியகொல்லி	1
34.	சளிஞ்சேரி	1
35.	கரும்பங்கொல்லி	1
36.	ஓணிமூலா (கேரளா)	1
37.	கல்லுாரா	1
38.	உருக்கண்டி	1

39.	வாளவெத்தா	1
40	தோரமங்கலம்	1
41.	ஆற்றுவாயி	1
42.	பொத்துருவலு	1
43.	மாட்டும்போத்து	1
44.	மதூரு	1
45.	எதிர்குன்று	1
46.	மாறாட்டு	1
47.	வாரியாட்டு	1
48.	எருஞ்சேரி	1
49.	பளவயல்	1
50.	தச்சங்குளம்	1
51.	கண்டகாட்டு	1
52.	தோட்டப்பெர	1
53.	அண்டக்கர	1
54.	பொலாக்கூட்டம்	1

அட்டவணை 6-ன்படி கப்பலா பாடியில் நடைபெற்றுள்ள 60 திருமணங்களைப் பார்க்கும்போது இப்பாடியைச் சேர்ந்தவர்கள் ஓணிமூலா என்ற பாடியைத்தவிர கூடலூர் தாலுகாவில் உள்ள வேறு எந்தப் பாடியிலும் திருமணத்தொடர்பு கொள்ளவில்லை. ஓணிமூலா என்ற பாடியோடு ஏற்பட்டுள்ள ஒரு திருமணமும் விருப்பத்திருமணமாகும். ஏனைய அனைத்துத் திருமணங்களும் கேரள மாநிலத்தில் வயநாடு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு பாடிகளோடு நடைபெற்றுள்ளது. மேலும் எந்த இரு சகோதரர்கள் இரு சகோதரிகளைத் திருமணம் செய்து கொண்டதாகவோ அல்லது இரு சகோதரிகளை ஒரே பாடியில் திருமணம் செய்து கொடுத்ததாகவோத் தெரியவில்லை. கப்பலா பாடியில் நடைபெற்றுள்ள 60 திருமணங்களின்மூலம் 54 கிராமங்கள் கப்பலாவோடு இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கெடங்கல் என்ற கிராமத்தோடு இரண்டு திருமணங்களும், புறக்காடி என்ற கிராமத்தோடு இரண்டு திருமணங்களும், தெற்கேபொற்ற என்ற கிராமத்தோடு மூன்று திருமணங்களும், மாதமங்கலம் என்ற கிராமத்தோடு இரண்டு திருமணங்களும், புஞ்சவயலு

என்ற கிராமத்தோடு இரண்டு திருமணங்களும், ஏனைய எல்லா கிராமங்களோடும் ஒவ்வொரு திருமணங்களும் நடைபெற்றுள்ளன.

கெடங்கல் என்ற கிராமத்தோடு இரண்டு திருமணங்கள் நடைபெற்றுள்ளன. அவை கப்பாலாவைச் சேர்ந்த வெணாத்தன் என்பவரின் இரண்டாவது திருமணமும் அவரது மகனின் மகன் முராரி என்பவரின் திருமணமுமாகும். புறக்காடி என்ற கிராமத்தோடும் இரண்டு திருமணங்கள் நடைபெற்றுள்ளன. அவை கப்பாலாவைச் சேர்ந்த தம்பி என்பவர் மூன்றாவதாகத் திருமணம் செய்த ஜானகியின் ஊரும், தம்பியின் தகப்பனின் தகப்பன் பங்குவின் மூத்த சகோதரன் சாத்துவின் மகனின் மகன் சாமியின் மனைவி மாங்காவின் ஊருமாகும். தெற்கேபொற்ற என்ற கிராமத்தோடு மூன்று திருமணங்கள் நடைபெற்றுள்ளன. கப்பாலாவைச் சார்ந்த தம்பி என்பவரின் மூத்த சகோதரி உடுகி என்பவளை தெற்கே பொற்றயில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். தம்பியின் தகப்பனின் இளைய சகோதரனின் மகன் அச்சுதன் தெற்கேபொற்றயில் திருமணம் செய்துள்ளார். தம்பியின் தகப்பனின் தகப்பனின் மூத்த சகோதரன் வெள்ளனின் மகனின் மகன் இராமகிருஷ்ணன் தெற்கேபொற்றயில், திருமணம் செய்துள்ளார். இது விருப்பத் திருமணமாகும். இருவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். மாதமங்கலம் என்ற கிராமத்தோடு இரண்டு திருமணங்கள் நடைபெற்றுள்ளன. கப்பாலா பாடியைச் சேர்ந்த கள்ளுவின் மூத்த மகள் மாணியை மாதமங்கலத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். கள்ளுவின் தகப்பனின் தகப்பனின் மூத்த சகோதரன் சுப்புக்கனின் கடைசி மகன் கரும்பன் மாதமங்கலத்தில் திருமணம் செய்துள்ளார். புஞ்சவயலு என்ற கிராமத்தோடும் இரண்டு திருமணங்கள் நடைபெற்றுள்ளன. கப்பாலா பாடியைச் சேர்ந்த பங்கு என்பவரும் அவரது மூத்த சகோதரன் செலுவனும் புஞ்சவயல் என்ற கிராமத்திலிருந்து திருமணம் செய்துள்ளார்கள்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஒன்றுக்கு மேல் திருமணத்தொடர்பு ஏற்பட்டுள்ள ஐந்து கிராமங்களில் இரண்டு

கிராமங்களோடு பெண் எடுத்தலும் கொடுத்தலும் நடைபெற்றுள்ளது. ஏனைய மூன்று கிராமங்களோடும் பெண் எடுத்தல் மட்டுமே நடைபெற்றுள்ளது. ஒரே தலைமுறையைச் சார்ந்தவர்கள் அல்லது வெவ்வேறு தலைமுறையைச் சார்ந்தவர்கள் ஒரு கிராமத்திலிருந்து பெண் எடுத்துள்ளதைக் காணமுடிகிறது. ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொடுத்துள்ள ஊரிலிருந்து அப்பெண்ணின் தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் பெண் எடுத்திருப்பதையும் காண முடிகிறது. மேலும் இரண்டு சகோதரர்கள் ஒரே கிராமத்திலிருந்து பெண் எடுத்திருப்பதையும் காணமுடிகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது முள்ளுக்குறும்பர்களிடையே உறவினர்களிடையே திருமண உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற பாரம்பரிய முறையை முற்றிலுமாக கடைபிடிக்காத நிலையைக் காண முடிகிறது. நெருங்கிய உறவினர்களிடையே திருமண உறவு காணப்படாவிட்டாலும் தூரத்து உறவினர்களிடையே திருமண உறவு ஏற்படுவதைக் காணலாம். இதற்குக் காரணம் முள்ளுக்குறும்பர்களின் மக்கள் தொகை மற்றும் அவர்கள் பரவியிருக்கும் இடப்பரப்பு ஆகியவை குறைவாகக் காணப்படுவதாகவும் அமையலாம். ஆனால் புறமணமுறையை கண்டிப்பாகப் பின்பற்றி வருவதைக் காணமுடிகிறது. இத்தகைய புறமணமுறையானது இந்தோ-ஆரிய சமுதாயங்களில் காணப்படும் கூறாகும். தென்னிந்திய சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் வாழுமிட ஒப்புமை[17] ஒரு முக்கியக் கூறாகக் காணப்படுவதுண்டு. இதனால் இருவரின் பண்பாட்டு அடிப்படையிலான எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவை சீராக அமைவதால் திருமணத்துக்குப்பின் ஏற்படும் சில இடையூறுகளைத் தவிர்க்க முடிகிறது. முள்ளுக்குறும்பர்கள் இதற்கு மாறாகக் காணப்படுவதைக் காணலாம் புறமணமுறையைப் பின்பற்றுவதும், உறவினர்களிடையே திருமண உறவு வைத்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுவதும் இவர்களிடையே மண உறவினர்களின் பரப்பை மிகவும் விரிவடையச் செய்கிறது. முன்னால் குறிப்பிட்டுள்ளவாறு கப்பாலா பாடியில் நடைபெற்றுள்ள 60 திருமணங்களின்மூலம் 54

கிராமங்களோடு திருமணஉறவு கொண்டிருப்பதைக் காணலாம். இவ்வாறு மண உறவினர்கள் விரிவாகக் காணப்படுவதும் இந்தோ-ஆரிய சமுதாயங்களில் காணப்படும் கூறாகும். மேலும் முள்ளுக்குறும்பர்களிடையே ஒருவர் பிறந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள் அவரது மண உறவினராக இயலாது.

சொத்துரிமை

சொத்துரிமையைப் பொறுத்தமட்டில் முள்ளுக் குறும்பர்கள் தந்தைவழி முறையையே கையாளுகின்றனர். சொத்துக்களைப் பங்கிடும்போது குடும்பத் தலைவர் கூறுவதை அப்படியே பின்பற்றுகின்றனர். பொதுவாக தகப்பனின் மரணத்துக்குப் பிறகுதான் பிள்ளைகள் சொத்துக்களை எடுத்துக் கொள்வது வழக்கம். ஒருவர் எவ்வளவு சொத்துக்களை உடையவராக இருந்தாலும் பெண்களுக்கு சொத்துரிமை இல்லை. ஒருவருக்கு ஆண் பிள்ளைகள் இல்லாவிட்டால் தத்து எடுப்பார்கள். இல்லாவிடில் அவரது சொத்துக்கள் அவரது பங்காளிகளைச் சேரும்.

ஒருவர் போதுமான பணவசதியற்றவராய் இருந்து அவரது மனைவியின் வீட்டில் வேறு ஆண்கள் இல்லாவிட்டால் அங்கு சென்று வாழும் பழக்கம் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுகிறது. மனைவியின் வீட்டை 'இல்லவீடு' என்றும் அவ்வாறு சென்று வாழ்வதை 'இல்லத்துப் பெய்கூடி' (illattu peyi ku:ṭi) என்றும் சற்று இழிவாகக் கூறுவார்கள். நகைகள், பாத்திரங்கள் ஆகியவை கூடுதலாக இருந்தால் அவற்றைப் பெண் பிள்ளைகளுக்குக் கொடுப்பது வழக்கம்.

குல பாரம்பரியத்தைப் பார்க்கும்போது இவர்கள் தாய்வழி முறையையே பின்பற்றுகின்றனர். அதாவது முன்னால் கூறியபடி பிள்ளைகள் எல்லோரும் தாயின் குலத்தைச் சேர்ந்தவர்கள். எனவே முள்ளுக்குறும்பர்களின் சமூக அமைப்பில் **தந்தைவழிமுறையும் தாய்வழி முறையும் பின்பற்றப்படுவதைக் காணமுடிகிறது.** தமிழகத்தில் தந்தைவழிக் குடும்பங்களே உள்ளன. கேரள மாநிலத்தைச் சேர்ந்த நாயர் சாதியினரிடையே தாய்வழிக் குடும்ப அமைப்பு

காணப்படுகிறது. நாயர் சாதியினருக்கும் முள்ளுக் குறும்பர்களுக்குமிடையே சில தொடர்புகள் இப்போதும் இருந்துவருகின்றன என்பது முன்னரே சுட்டப்பட்டது. குல உரிமையைப் பொறுத்தவரையில் நாயர் சமுதாயத்தில் காணப்படும் தாய்வழி முறையையே முள்ளுக்குறும்பர்களும் பின்பற்றி வருகின்றனர்.

முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் இத்தகைய கால்வழி (இருகால் வழி), தென்னிந்தியாவில் காணப்படும் ஒரு கால்வழிப் பிரிவுகளின் பொதுவான போக்குக்கு மாறாகக் காணப்படுகிறது. இரத்த மற்றும் மண உறவின் ஆசார நடைமுறையிலும் கால்வழி மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இத்தகைய கால்வழிக் கணக்கிடல்தான் ஒன்றுவிட்ட சகோதரர் (parallel cousins) மற்றும் மணவழிச் சகோதரர் (cross-cousins)களை வேறுபடுத்துவதும், ஒன்றுவிட்டசகோதரர் களுக்கிடையிலான திருமணங்களைத் தடைசெய்து மணவழிச்சகோதரர்களுக்கு இடையிலான திருமணங்களை ஆதரிக்கும் விதிகளுக்கு வழிகாட்டுவதுமாகும். தென்னிந்தியாவில் ஒரு கால்வழி முறையைப் பின்பற்றும் பிரிவினரிடையே இரத்த மற்றும் மண உறவு பாகுபாட்டில் குழப்பங்கள் ஏற்படுவதைக் காணலாம். சான்றாக 'இரத்த உறவினரின் உறவினர் இரத்த உறவினர்' என்ற விதியின்படி ஒரு சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்ள இயலாது. ஆனால் அத்தகைய திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய குழப்பங்கள் முள்ளுக்குறும்பர் களிடையே காணப்படாததற்குக் காரணம் அவர்களிடையே காணப்படும் திருமணமுறையேயாகும்.

தென்னிந்தியாவில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் ஒரு தனி மனிதனின் சொத்து அல்லது நிலை அவரது பிள்ளைகளுக்கும் பின்னர் அவரது மகனின் பிள்ளைகளுக்கும் ஒப்படைக்கப்படுகிறது. (மகளின் பிள்ளைகளுக்கு அல்ல). அதாவது ஒருவரின் தகப்பனின் தகப்பனின் நிலை அல்லது சொத்து தகப்பனுக்கும் பின்னர் தனக்கும் ஒப்படைக்கப்படுகிறது என்பது புலப்படுகிறது. இதே போன்று தாயின் தகப்பனின் நிலையும் அவரது

பிள்ளைகளுக்கும், அடுத்த தலைமுறையில் அவரது மகனின் பிள்ளைகளுக்கும் ஒப்படைக்கப்படுகிறது. (அவரின் மகளின் பிள்ளைகளுக்கு அல்ல). முள்ளுக்குறும்பர்களும் பொருளாதார நிலைகளில் இம்முறையையே பின்பற்றுகின்றனர். அதாவது ஒருவரின் சொத்து மற்றும் உடைமைகளை அவரது ஆண் பிள்ளைகளே எடுத்துக் கொள்ளுகின்றனர். பெண்களுக்கு சொத்துரிமை இல்லை. ஆனால் ஒரு தாயின் பிள்ளைகள் எல்லோரும் தாயின் குலத்தை சுதந்தரித்துக் கொள்ளுகின்றனர். இங்கு ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் இரத்த உறவினர் என்ற அடிப்படையில் பார்க்கும்போது தென்னிந்தியாவில் பரவலாகக் காணப்படும் திருமண முறைகளான மூத்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்துகொள்வது மற்றும் தாய்மாமனின் மகளைத் திருமணம் செய்து கொள்வது போன்ற திருமண முறைகள் முள்ளுக்குறும்பர்களிடையே தடை செய்யப்படுகிறது. தென்னிந்தியாவில் நடைபெற்றுவரும் இன்னொரு முன்னுரிமைத் திருமணமுறையாகிய தகப்பனின் சகோதரியின் மகளைத் திருமணம் செய்துகொள்வதும் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படாததற்குக் காரணம் முள்ளுக்குறும்பர்கள் தகப்பனின் சகோதரியை இரத்த உறவாகக் கருதுவதாகவும் இருக்கலாம். தென்னிந்திய உறவுமுறையில், தகப்பனின் சகோதரி இரத்த உறவினர் அல்ல என்று டுமாண்டு (1953:168) குறிப்பிட்டுள்ளதின் குறையை சுப்பாரெட்டி (1984) சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது டுமாண்டின் விதிமுறையில் ஒருவரின் தகப்பனின் சகோதரி ஒரு திருமணமான பெண் என்ற முறையில் அவருடைய இரத்த உறவுப்பிரிவினர் அல்ல என்று குறிப்பிடும் போது ஒரு திருமணமான சகோதரியோ அல்லது திருமணமான மகளோ இரத்த உறவுப்பிரிவில் எப்படி இருக்கமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் முள்ளுக்குறும்பர்கள் தென்னிந்தியாவில் காணப்படும் முன்னுரிமைத் திருமணங்களைத் தடை செய்வதற்கு அவர்களிடையே காணப்படும் தந்தைவழி சொத்துரிமையும் தாய்வழிக் குல உரிமையும் இன்னொரு காரணமாக அமைகிறது. அதாவது தென்னிந்திய சமுதாயங்களில் காணப்படும் ஒரு கால்வழி முறைக்கு மாறாக முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும்

இருகால்வழி முறையாகும். இதன் விளைவாக தென்னிந்திய உறவுமுறை அமைப்பில் காணப்படாத சில கூறுகள் முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பில் ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. சான்றாக உறவினர்களிடையே திருமண உறவுகொள்ளாமை, சொந்தக் கிராமத்தில் திருமண உறவு கொள்ளாமை, மண உறவினர்கள் விரிவாகக் காணப்படுதல் போன்ற இந்தோ-ஆரிய உறவுமுறைக் கூறுகள் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுவதற்கும் இவர்களிடையே காணப்படும் இருகால்வழி முறை மற்றும் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளை வகைப்படுத்தும் முறை ஆகியவைகளே காரணமெனக் கருதலாம்.

முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் இரு கால்வழி முறையானது இவர்களின் சமுதாயத்தில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றத்தால் ஏற்பட்டதாகவும் இருக்கலாம். இங்கு தாய்வழி முறை பிற்காலத்தில் ஏற்பட்டதா அல்லது தந்தைவழிமுறை பிற்காலத்தில் ஏற்பட்டதா என்பதற்கு சரியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. எனினும் வரலாற்று அடிப்படையில் பார்க்கும்போது தாய்வழி முறையே மூல வடிவமாகக் கருதலாம். சான்றாக எங்கெல்ஸ் (1884:26) கருத்தை இங்கு எடுத்துக்காட்டலாம். அக்கருத்து வருமாறு:

> 'தாய் உரிமை அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த கணங்களே ஆதிமூல வடிவம் என்றும், அதிலிருந்துதான் பின்னால் தந்தை உரிமையை அடிப்படையாகக் கொண்ட கணங்கள் வளர்ந்தன என்றும் மார்கன் கண்டுபிடித்தார். இப்படித் தந்தை உரிமை அடிப்படையிலமைந்தவையே, பண்டைக் காலத்திய நாகரிகத்தைச் சேர்ந்த மக்களிடையே நாம் பார்க்கும் கணங்களாகும் . . . . பரிணாம வளர்ச்சி பற்றிய டார்வினின் தத்துவம் உயிரியல் துறையில் எத்தனை அர்த்தமுக்கியத்துவம் கொண்டிருக்கிறதோ, உபரி மதிப்பு பற்றிய மார்க்ஸின் தத்துவம் அரசியல் பொருளாதாரத்துறையில் எத்தனை அர்த்தமுக்கியத்துவம் கொண்டிருக்கிறதோ அதே அளவுக்கு, நாகரிகமடைந்த மக்கள் சமூகங்களின் தந்தை உரிமைக் கணத்துக்குப் பூர்வாங்கமான கட்டமாக ஆதிகாலத் தாய் உரிமைக்

கணம் இருந்தது என்ற மறுகண்டு பிடிப்பும் ஆதிகாலச் சமுதாய வரலாற்றுத் துறையில் அர்த்தமுக்கியத்துவம் கொண்டதாகும். அதைக் கொண்டு குடும்பத்தைப் பற்றிய ஒரு வரலாற்றை முதல் தடவையாக மார்கன் வரைந்து காட்ட முடிந்தது'.

மேலும் காத்தலின்காப் (1979) குறிப்பிடும்போது 'இரு பிரிவுடைய அமைப்புகள் (அதாவது தாய்வழி உறவாக இருக்கலாம்) ஒரு சமயத்தில் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்ததாகவும் இதுதான் ஆதி திராவிட முறையாக இருக்கலாம் என்று பேராசிரியர் குரேய் (Prof. Ghurye) எழுதியிருப்பதை நான் நம்புகிறேன்' என்று கூறியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் தாய்வழிக் குல உரிமையானது தென்னிந்தியா முழுவதும் காணப்பட்ட ஆதிமூல அமைப்பின் எச்சமாக இருக்கலாம் எனவும் கருதலாம். இவர்களிடையே காணப்படும் தந்தைவழி சொத்துரிமையானது பொருளாதார அடிப்படையில் ஏற்பட்ட மாறுதல்களால் பிற்காலத்தில் தோன்றியதாகவும் இருக்கலாம். காரணம் முள்ளுக்குறும்பர்களின் பாரம்பரிய தொழில் வேட்டையாடுவதாகும். இவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுவந்தாலும் நில உடைமை என்பது முள்ளுக் குறும்பர்கள் வாழும் பகுதியில் ஏனைய மக்களின் குடியேற்றத்துக்குப் பிறகு ஏற்பட்டதாகும். இதற்குச் சான்றாக சுமார் 30 அல்லது 40 வருடங்களுக்கு முன்னால் வரையிலும் முள்ளுக்குறும்பர்கள் நிலமாற்றிப்பயிரிடும் (shifting cultivation) முறையையே கடைபிடித்து வந்ததாகக் கூறுகின்றனர். தற்போது அப்பகுதியில் குடியேறியுள்ள ஏனைய மக்கள் பெரும்பாலும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கிறித்தவர்களும், முகமதியர்களுமாகும். அவர்கள் தந்தைவழி சொத்துரிமை யையே பின்பற்றி வருகின்றனர். அவர்களோடு ஏற்பட்டத் தொடர்பால் முள்ளுக்குறும்பர்களும் அத்தகைய தந்தைவழி சொத்துரிமையைப் பின்பற்றியுள்ளனர் எனவும் கருதலாம்.

குடும்ப அமைப்பு

ஆளுமையை அடிப்படையாகக் கொண்டு முள்ளுக் குறும்பர்களின் குடும்பத்தைப் பார்க்கும்போது தந்தைவழி குடும்ப மாகவே காணப்படுகிறது. ஆனால் தாய்வழிக் குடும்பத்தின் அம்சங்களும் இவர்களிடையே காணப்படுகிறது. சான்றாக முன்னால் கூறியவண்ணம் குல பாரம்பரியத்தைப் பார்க்கும் போது தாய்வழி முறையையே பின்பற்றுகின்றனர். முள்ளுக்குறும்பர் களின் குடும்பங்கள் பெரும்பாலும் தனிக் குடும்பங்களாகவே காணப்படுகின்றன. அதாவது கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோர் சேர்ந்து வாழும் குடும்பங்கள். ஆனால் கூட்டுக் குடும்பத்தின் சில அம்சங்களும் இவர்களிடையே காணப்படுகின்றன.

குடும்பத்தின் அங்கத்தினர்கள் சமயலறையின் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறார்கள். அதாவது குடும்பம் என்பது யார் யாரின் உணவு ஒரே சமயலறையில் ஒன்றாக தயாரிக்கப்படுகிறதோ அவர்கள் அடங்கிய ஒருமம் ஆகும். சில வேளைகளில் ஒரு வீடு தனி சமயலறையும் தனி வாசல்களும் உடைய இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களை உடையதாகவும் காணப்படுவதுண்டு. முள்ளுக்குறும்பர்களுடைய குடும்பங்களின் தன்மையைப் பார்க்கும்போது வயது சென்ற தாய் தகப்பன் மட்டும் வாழும் சிறிய குடும்பம் முதல் திருமணமாகிய இரண்டு சகோதரர்களும் அவர்களுடைய திருமணமாகாத பிள்ளைகளும், திருமணமாகாத ஒரு சகோதரனும் சேர்ந்து வாழும் பெரிய தந்தை வழி குடும்பம் வரை காணப்படுகிறது.

ஆறு. இராமநாதன் (1982:58) குறிப்பிடும் போது இத்தகைய பெரிய குடும்பங்களை சிறிய கூட்டுக் குடும்பங்கள் எனக் கொள்ளலாமென்றும், இதனைக் குடும்பச் சமூகத்திற்கும், தனிப்பட்ட குடும்பத்துக்குமிடையில் மாறிச் செல்லும் கட்டமாகக் கருதலாம் என்றும் கூறியுள்ளார். இதன் அடிப்படையில் பார்க்கும்போது முள்ளுக்குறும்பர்களின் சமுதாயத்தில் காணப்படும் தனிக் குடும்பங்களை சிறிய கூட்டுக் குடும்பங்களில் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்பட்டவை எனவும் கொள்ளலாம். அதோடு, முள்ளுக்குறும்பர்களிடையே தத்துப் பெற்றோரோடு வாழும் குடும்பமும் காணப்படுகிறது.

அட்டவணை - 7

குடும்ப அமைப்பு

வ.எ.	மாதிரிக் குடும்பங்கள்	எண்	விழுக்காடு
1.	ஆண் தலைமையுடைய தனிக்குடும்பம்	24	64.86
2.	தாய் தகப்பன் மட்டும் வாழும் குடும்பம்	1	2.70
3.	இணைக்கப்பட்ட தகப்பனும், திருமணமாகாத ஒரு சகோதரனுமுடைய குடும்பம்	1	2.70
4.	இணைக்கப்பட்ட பெற்றோர் மற்றும் ஒரு திருமணமாகாத சகோதரியுமுடைய குடும்பம்	1	2.70
5.	திருமணமாகிய இரண்டு சகோதரர்களும் அவர்தம் பிள்ளைகளும், திருமணம் ஆகாத ஒரு சகோதரனும் சேர்ந்துவாழும் குடும்பம்	1	2.70
6.	இணைக்கப்பட்ட முதல் மனைவியின் மகனை உடைய குடும்பம்	1	2.70
7.	இணைக்கப்பட்ட திருமணமாகாத சகோதரி அல்லது சகோதரனையுடைய குடும்பம்	2	5.40
8.	இணைக்கப்பட்ட தாய் மற்றும் திருமணம் ஆகாத சகோதர சகோதரிகள் உடைய குடும்பம்	3	8.10

9.	இணைக்கப்பட்ட பெற்றோருடைய குடும்பம்	1	2.70
10.	இணைக்கப்பட்ட தாயையுடைய குடும்பம்	1	2 70
11.	தத்துப் பெற்றோரோடு வாழும் குடும்பம்	1	2.70

அட்டவணை 7-ன் படி முள்ளுக்குறும்பரிடையே ஆண் தலைமையுடைய தனிக் குடும்பமே அதிகமாகக் காணப்படுகின்றன. உடை, உணவு, பணம் ஆகியவற்றை வழங்குவது குடும்பத் தலைவரின் பொறுப்பாகும். தலைவி வீடு, குழந்தைகள் மற்றும், உணவு தயாரித்தல் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்வதோடு குடும்பத்தின் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றாள். அதாவது பெண்கள் மீன்பிடித்தல், விவசாய வேலைகளில் உதவி செய்தல், கூலி வேலை செய்தல் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர். சுமார் பத்து வயது வரையிலும் பிள்ளைகள் அவர்கள் விருப்பத்துக்கு விடப் படுகிறார்கள். இரண்டாவதாகப் பெற்றோரும், திருமணமாகாத பிள்ளைகளும் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றன. பொதுவாக வயது சென்ற பெற்றோர்கள் ஏதாவது பிள்ளைகளோடு இணைந்து வாழ்கின்றனர். பெற்றோர் தனித்து வாழும் குடும்பங்கள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன.

முள்ளுக்குறும்பர்களின் குடும்ப அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளை வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.

1. தாய் தகப்பன் மட்டும் வாழும் குடும்பம்.



2. ஆண் தலைமையுடைய தனிக்குடும்பம்



3. இணைந்து வாழும் தகப்பனும், திருமணமாகாத ஒரு சகோதரனுமுடைய குடும்பம்.



4. இணைந்துவாழும் பெற்றோர் மற்றும் ஒரு சகோதரியும் உடைய குடும்பம்.



5. திருமணமாகிய இரண்டு சகோதரர்களும் அவர்தம் பிள்ளைகளும் திருமணமாகாத ஒரு சகோதரனும் சேர்ந்து வாழும் குடும்பம்.



6. இணைந்துவாழும் தாய் மற்றும் திருமணமாகாத சகோதர சகோதரிகள் வாழும் குடும்பம்



7. இணைந்துவாழும் தாயை உடைய குடும்பம்



8. தத்துப் பெற்றோரோடு வாழும் குடும்பம்.



9. இணைந்துவாழும் முதல் மனைவியின் மகனையுடைய குடும்பம்.



ஒருவரின் மனைவி பிள்ளைகளைக் கொண்ட சிறிய குடும்பம் நடைமுறையில் விரிவடைகிறது. ஒரு திருமணமான இளைஞனும், அவன் மனைவியும் தான் வளர்ந்த தன் தகப்பனின் அல்லது தகப்பனின் தகப்பனின் வீட்டில்

வாழ்கிறான். பெரிய குடும்பத்திலிருந்து தனிக் குடும்பங்கள் ஏற்படுவதற்குக் காரணங்கள் பல உள்ளன. குடும்பங்கள் ஒன்றாக இருப்பதற்குத் த்குந்த தலைமை, சரியான ஒத்துழைப்பு ஆகியவை தேவைப்படுகின்றன. பெண்களிடையே சண்டை, சச்சரவு ஏற்படாமலும், குடும்பப் பொறுப்புகளையும், வேலைகளையும் பகிர்ந்து கொள்வதில் ஆண்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படாமலுமிருந்தால் குடும்பங்கள் பிரிவதற்குத் தாமதமாகின்றன. பொதுவாக ஆண்பிள்ளைகள் திருமணமானதும் தனிக்குடும்பம் அமைப்பது வழக்கம். ஒருவர் வயது சென்ற போதும் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்காமல் இறந்துவிட்டால் அவரது ஆண்பிள்ளைகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றனர். பொதுவாகத் தகப்பனின் மரணத்துக்குப் பிறகுதான் பிள்ளைகள் சொத்துக்களை அனுபவிப்பது வழக்கம். சில குடும்பங்களில் சகோதரர்கள் பெற்றோரின் மரணத்துக்குப் பிறகும் சிலகாலம் சேர்ந்து வாழ்கின்றனர். பொதுவாகப் பழைய வீட்டிலேயே புது சுவர்களும், சமையலைறகளும் கட்டுவதில்லை. பிரிந்து செல்பவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லாமல் அதே பாடியில் பழைய வீட்டிற்கு மிக அண்மையிலேயே வீடு கட்டுகின்றனர். வேறு இடங்களில் சென்று குடியேறினால் தங்கள் தெய்வம் கோபித்து விடும் என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. வீடுகட்டுவதும் அவர்களின் பரம்பரையான வடிவ அமைப்பிலேயே கட்டுவர். இவ்வாறு பிரிந்து செல்பவர்கள் ஒரே இடத்தில் வீடுகட்டி வாழ்வதால் ஒருபாடியில் வாழும் எல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் எல்லோரும் இரத்த உறவினர்களாகவும், வெவ்வேறு குலத்தைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். கப்பாலா பாடியின் குடிவழிப் பட்டியல் ஆய்வு (Genealogical Study) இதனை விளக்கும்.

குடிவழிப்பட்டியல் ஆய்வின் மூலம் கப்பாலா பாடியிலுள்ள சுமார் 75% மக்களும் ஒரு தகப்பனின் சந்ததியினர் என்பது தெளிவாகிறது. ஏனைய சுமார் 25% மக்களும் இவர்களின் நெருங்கிய உறவினர்களாகவே

காணப்படுகின்றனர். எனவே அவர்கள் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் பிரிந்தவர்கள் எனத் தோன்றுகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும் போது கப்பாலா பாடி உருவாகிய விதத்தைக் குறித்து முள்ளுக் குறும்பர்களிடையே பரம்பரையாக நிலவி வரும் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி உண்மை என்பதை சான்றுகளுடன் நிரூபிக்க முடிகிறது. மேலும் குடிவழிப் பட்டியல் ஆய்வின்மூலம் கப்பாலா பாடியில் வாழும் அனைவரும் கேரள மாநிலத்தில் வயநாடு பகுதியில் பல்வேறு பாடிகளில் வாழும் முள்ளுக்குறும்பர்களோடு திருமணத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது.

முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பு திராவிட உறவுமுறை அமைப்பிலிருந்து வேறுபடுவதைக் காணமுடிகிறது. இவ்வேறுபாடு அவர்களின் உறவுமுறைச் சொற்களிலும் பிரதிபலிக்கிறது. தாயின் சகோதரன், தகப்பனின் சகோதரியின் கணவன் ஆகியோரைக் குறிப்பிடும் 'மாமன்' என்ற சொல் மற்றும் தாயின் சகோதரனின் மனைவி, தகப்பனின் சகோதரி ஆகியோரைக் குறிப்பிடும் 'மாமி' என்ற சொல் ஆகியவை முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுகின்றன. ஒருவரின் சகோதரியின் மகன், மகளின் . கணவன் ஆகியோரைக் குறிப்பிடும் 'மெருமகன்' என்ற சொல் மற்றும் சகோதரியின் மகள், மகனின் மனைவி ஆகியோரைக் குறிப்பிடும் 'மெருமாளு' என்ற சொல் ஆகியவையும் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுகின்றன. ஆனால் மாமன், மாமி ஆகியோரின் பிள்ளைகளைக் குறிப்பிடும்போது வயதில் மூத்த ஆணாக இருந்தால் 'அண்ணன்' = மூத்த சகோதரன், வயதில் மூத்த பெண்ணாக இருந்தால் 'அற்றா' = மூத்த சகோதரி, வயதில் குறைந்த ஆணாக இருந்தால் 'சும்பன்/எனியன்' இளைய சகோதரன், வயதில் குறைந்த பெண்ணாக இருந்தால் 'சும்பி/எனியத்தி' இளைய சகோதரி என்றும் குறிப்பிடுகின்றனர். இதே சொற்கள் தகப்பனின் சகோதரர்களின் பிள்ளைகள், தாயின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் சொந்த சகோதர சகோதரிகள் ஆகியோரைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பில் தாய் மாமனின் பிள்ளைகள், தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் ஆகியோரையும் தங்கள் சகோதர சகோதரிகளாகவே கருதி அவ்வாறான சொற்களையும் பயன்படுத்துகின்றனர். இங்கு ஒருவரின் பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளிடையே எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல் எல்லோரும் சமமாகக் கருதப்படுகின்றனர். இவ்வாறு ஒருவருடைய பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள் எல்லோரையும், அவருடைய சகோதர சகோதரிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே உறவுமுறைப் பிரிவாகப் பிரிப்பது முர்டாக்கினுடைய ஹவாயன் கசின் முறையமைப்பாகும். முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் இத்தகைய அமைப்பு தென் திராவிட இனத்தைச் சேர்ந்த எந்தப் பிரிவினரிடையேயும் காணப்படாத ஒரு தனித் தன்மையாகும். இது திராவிட உறவுமுறை அமைப்புக்கு ஒத்ததாகக் கருதப்படும் ஈறாக்கியஸ் கசின்முறையமைப்பிலிருந்து வேறுபடுகிறது. இதனைப் படம் 9-ல் காணலாம்.



படம் - 9

annen	=	FaSiSoE*, FaBrSoE, MoSiSoE, MoBrSoE, EBr
arra	=	FaSiDaE, FaBrDaE, MoSiDaE, MoBrDaE, ESi
cumpen/eniyen	=	FaSiSoY*, FaBrSoY, MoBrSoY, YBr
cumpi/eniyatti	=	FaSiDaY, FaBrDaY, MoSiDaY, MoBrDaY, YSi
amme	=	Mo
appen	=	Fa
kurumen	=	Hu
kuruma:tti	=	wi

E = Elder than the Ego Y = Yonger than the Ego

படம்-9 ல் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் ஒரு தனி உறவின் முறையார் ஆகும். அண்ணன் அற்ற போன்ற உறவுமுறைச் சொற்கள் பலதரப்பட்ட உறவின்மக்களையும் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. ஆனால் அப்பன், அம்மெ, குறுமன், குறுமாட்டி போன்ற சொற்கள் ஒரு குறிப்பிட்ட உறவின்முறையை மட்டும் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. முள்ளுக் குறும்பர்களிடையே ஹவாயன் கசின் முறையமைப்பைப் போன்று பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள் பாலின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுவது மட்டுமின்றி மூத்த இளைய பாகுபாடும் காணப்படுகிறது.

முள்ளுக்குறும்பர்களிடையே ஒரு பெண்ணின் சகோதரியின் குழந்தைகள் எல்லோரும் அவளது குழந்தைகளாகவே இருந்துவருவதுபோல் அவளது சகோதரனின் குழந்தைகளும் அவளது குழந்தைகளாகவே இருந்துவருகின்றனர். ஒருவரின் சகோதரர்களுடைய குழந்தைகள் எல்லோரும் அவரது குழந்தைகளாக இருப்பது போல் அவரின் சகோதரிகளின் குழந்தைகளும் அவரது குழந்தைகளாகவே இருந்து வருகின்றனர். எனவே ஒருவரின் தாயின் சகோதரிகளின் குழந்தைகளும், தகப்பனின் சகோதரர்களின் குழந்தைகளும் அவருக்கு ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளாக இருப்பது போன்று அவரது தாயின் சகோதரர்களின் குழந்தைகளும், தகப்பனின் சகோதரிகளின் குழந்தைகளும் அவருக்கு ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளாகவே இருந்து வருகின்றனர்.

தென்னிந்திய உறவுமுறை அமைப்பில் தாயின் சகோதரனின் குழந்தைகளையும் தகப்பனின் சகோதரியின் குழந்தைகளையும் வேறுபட்ட உறவுமுறைப்பிரிவில் சேர்ப்பது போன்ற அமைப்பு முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படவில்லை. எங்கெல்ஸ் (1884:64)

> ‘எனது தாயின் சகோதரிகளுடைய கணவர்கள் எல்லோரும் எனது தாயின் கணவர்களாக இன்னும் இருந்து கொண்டிருக்க, எனது தகப்பனாரின்

> சகோதரர்களுடைய மனைவிகளெல்லாம் எனது தகப்பனாரின் மனைவிகளாகவே (நடைமுறையில் இல்லாமற் போனாலும், உரிமைப்படி) இருந்துகொண்டிருக்க, சகோதர சகோதரிகளுக்கிடையே புணர்ச்சி நிகழ்வதைத் தடுக்கும் சமுதாயத்தடையானது இதுவரை வர்ஜாவர்ஜமின்றிச் சகோதர சகோதரிகளாகக் கருதப்பட்டு வந்த ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்தது. சிலர் (தூர) சகோதர சகோதரிகளாக முன்போலவே இருந்துவருகிறார்கள். மற்றவர்கள்-அதாவது, ஒருபக்கத்தில் சகோதரர்களுடைய குழந்தைகளும், இன்னொரு பக்கத்தில் சகோதரிகளுடைய குழந்தைகளும்-இனிமேல் சகோதர சகோதரிகளாக இருக்கவே முடியாது: தாயாகவோ, தந்தையாகவோ அன்றி இரண்டு பேருமாகவோ அவர்களுக்குப் பொதுவான பெற்றோர்கள் இனிமேல் இருக்கமுடியாது: எனவே மருமான், மருமகள் என்ற, ஆண் பெண் தாயாதிகள் என்ற வகுப்பு முதல் தடவையாக அவசியப்படுகிறது. முந்திய குடும்ப அமைப்பில் இதற்கு அர்த்தமே இருந்திருக்காது'.

என்று குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் பார்க்கும்போது தென்னிந்திய உறவுமுறை அமைப்பில் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளிடையே காணப்படும் பாகுபாடு பிற்காலத்தில் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்றும் இத்தகைய பாகுபாடு முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பில் ஏற்படாதிருந்திருக்கலாம் என்றும் கருதலாம். ஆனால் முள்ளுக்குறும்பர்களிடையே ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளைத் திருமணம் செய்து கொள்ளும் முறை அல்லது பழக்கம் இருந்ததற்கான எந்தவித ஆதாரமும் இல்லை. மேலும் எங்கெல்ஸ் (1884:47).

> 'இன்றைய நூற்றாண்டின் முதற்பகுதியிலுங்கூட சான்ட்விச் (ஹவாயி) தீவுகளில் ஒரு குடும்ப வடிவம் இருந்துவந்தது: அமெரிக்க ரத்த உறவுமுறையும் பண்டைக்கால இந்திய ரத்த உறவுமுறையும் கோருகிற அதே மாதிரியான தாய் தகப்பன்மார்களையும், சகோதர

சகோதரிகளையும், குமார குமாரத்திகளையும் அது கொண்டிருந்தது. ஆனால் இதில் அதிசயமென்னவெனில், ஹவாயியில் நிலவிய ரத்த உறவுமுறையும் அங்கு யதார்த்தத்தில் இருந்த குடும்ப வடிவத்தோடு முரண்பட்டுக் கிடந்ததுதான். அங்கே, ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள் எல்லோரும் விதி விலக்கென்பதின்றி சகோதர சகோதரிகளாகவும், தங்களுடைய தாயாருடையவும் அல்லது பெரியம்மா சின்னம்மாக்களுடையவும் பொதுவான குழந்தைகளாகவும் மட்டுமின்றி, அல்லது தங்களுடைய தகப்பனாருடையவும் பெரியப்பா, சிற்றப்பாக்களுடையவும் பொதுவான குழந்தைகளாகவும் மட்டுமன்றி, வேறுபாடெதுவும் பாராட்டாத வகையில் தமது பெற்றோர்களின் எல்லாச் சகோதர சகோதரிகளுடைய பொதுவான குழந்தைகளாகவும் கருதப்பட்டனர். அமெரிக்க வகைப்பட்ட ரத்த உறவுமுறைக்கு முன்னால் ஒரு மிகவும் ஆதிகாலக் குடும்ப வடிவம் இருந்திருக்க வேண்டும் என்று சொன்னால் - இது அமெரிக்காவில் இப்போதில்லை, ஆனால் ஹவாயில் இன்னும் நிஜமாகவே இருந்து வருகிறது. மற்றொரு புறத்தில், ஹாவாயி வகைப்பட்ட ரத்த உறவுமுறை முன்னால் அதைவிட மிகவும் பூர்வீகமான ஆதிமனிதக் குடும்ப வடிவத்தைச் சுட்டிக் காட்டுகிறது: எங்கேயாவது அது இன்னும் நிலவுவதாக நிரூபிக்க முடியாதாயினும், அது அப்படி இருந்திருக்க வேண்டும், ஏனெனில், அதின்றி அதற்குப் பொருத்தமாயுள்ள ஒரு ரத்த உறவுமுறை தோன்றியிருக்க முடியாது'.

என்றும் கூறியுள்ளார்.

முள்ளுக்குறும்பர்களிடையே வேறுபாடெதுவும் பாராட்டாத வகையில் ஒருவரின் பெற்றோரின் எல்லாச் சகோதர சகோதரிகளுடைய பிள்ளைகளும் பொதுவான குழந்தைகளாகக் கருதப்பட்டு வருகின்றனர். இங்கு எங்கெல்ஸ் 'சகோதர சகோதரிகளுக்கிடையே புணர்ச்சி நிகழ்வதைத் தடுக்கும் சமுதாயத் தடையானது இதுவரை

வர்ஜா வர்ஜமின்றிச் சகோதர சகோதரிகளாகக் கருதப்பட்டு வந்த ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்தது'. என்று குறிப்பிட்டிருப்பதின் அடிப்படையில்தான் தாயின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் தகப்பனின் சகோதரர்களின் பிள்ளைகள் ஆகியோர் **(Parallel cousins)** தாயின் சகோதரர்களின் பிள்ளைகள் மற்றும் தகப்பனின் சகோதரிகளின் பிள்ளைகளிடமிருந்து **(Cross cousins)** வேறுபடுத்தப்பட்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றனர். இவ்வாறு வேறுபடுத்தி ஒரு பிரிவினரோடுள்ள திருமணங்களைத் தடைசெய்து இன்னொரு பிரிவினரோடுள்ள திருமணங்களை ஆதரிக்கும் விதிமுறைகள் உருவாகியுள்ளன.

இதேப் போன்று முள்ளுக்குறும்பர்களின் சமுதாயத்தில் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளுக்கிடையே புணர்ச்சி நிகழ்வதைத் தடை செய்த சமுதாயத் தடையானது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளை இரண்டாகப் பிரக்காமல் அவர்களை ஒன்றாக வகைப்படுத்தி, சகோதர சகோதரிகளாகவே இருக்கச் செய்து அவர்களிடையே புணர்ச்சி நிகழக் கூடாது என்ற தடையை உருவாக்கியிருக்கலாம். எனவேதான் முள்ளுக்குறும்பர்களிடையே ஒருவரின் பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள் எல்லோரையும் சகோதர சகோதரிகளாகவே கருதும் முறை ஏற்பட்டிருக்கலாம்.

இதன் அடிப்படையில் பார்க்கும்போது முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் ஒன்றுவிட்ட சகோதரர்களை வகைப்படுத்தும் முறை மிகப் பழமையான ஒரு உறவுமுறை அமைப்பைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது. முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை தென்னிந்திய உறவுமுறை கோருகிற அதேமாதிரியான தாய்தகப்பன்மார்களையும், சகோதர சகோதரிகளையும் குமாரர் குமாரத்திகளையும், மாமா மாமிகளையும் மருமகன் மருமகள் களையும் உடையதாகக் காணப்படுகிறது. ஆனால் தென்னிந்தியாவில் நிலவுகின்ற இரத்த மற்றும் மண உறவுமுறையில் முள்ளுக்குறும்பர்கள் வேறுபடுகின்றனர். அதாவது முன்னால்

குறிப்பிட்டுள்ள வண்ணம் ஒருவரின் பெற்றோரின் உடன் பிறந்தவர்களின் பிள்ளைகள் எல்லோரும் விதி விலக்கென்பதின்றி ஹவாய உறவுமுறையில் காணப்படுவது போன்று சகோதர சகோதரிகளாகவே கருதப்படுகின்றனர். தென்னிந்திய வகைப்பட்ட இரத்த உறவுமுறைக்கு முன்னால் ஒரு மிகவும் ஆதிகால உறவுமுறை அமைப்பு இருந்திருக்கலாம். எங்கெல்ஸ் ஹவாய இரத்த உறவுமுறையை அமெரிக்க வகைப்பட்ட இரத்த உறவுமுறைக்கு முன்னால் நிலவிய ஒரு மிகவும் ஆதிகால குடும்பவடிவமாகக் கருதுவதுபோன்று: முள்ளுக்குறும்பர்களின் இரத்த உறவு முறையையும் தற்போதய தென்னிந்திய வகைப்பட்ட இரத்த உறவுமுறைக்கு முன்னால் நிலவிய ஒரு மிகவும் ஆதிகால வடிவமாகவும் கருதலாம்.

அய்ராவதிகர்வே (1953) உறவுமுறை அமைப்பு பெரும்பாலும் மொழி அமைப்பைப் பின்பற்றி காணப்படுவதாகக் கூறியுள்ளார். அதாவது திராவிட மொழி பேசுபவர்கள் திராவிட உறவுமுறை அமைப்பை உடையவர்களாகக் காணப்படுவார்கள், இந்தோ-ஆரிய மொழி பேசுபவர்கள் இந்தோ-ஆரிய உறவுமுறை அமைப்பை உடையவர்களாக இருப்பார்கள் என்பதாகும். முள்ளுக் குறும்பர்களின் மொழி தென்திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாகும். அவர்களின் தோற்றம், ஆடை, பண்பாடு ஆகியவற்றைப் பார்க்கும்போது அவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் அய்யமில்லை. ஆனால் உறவுமுறை அமைப்பிலும் சொற்களிலும், தற்போது திராவிட உறவுமுறை அமைப்பில் காணப்படாத சில கூறுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு உறவுமுறை அமைப்பானது மொழி அமைப்பைப் பின்பற்றியதாக அல்லாமல் பண்பாட்டு அடிப்படையிலானதாகக் காணப்படுவதை உணரலாம்.

'மாமன்' என்கிற சொல் தாயின் சகோதரன், தகப்பனின் சகோதரியின் கணவன், சகோதரனின் மனைவியின் தகப்பன், சகோதரியின் கணவனின் தகப்பன் ஆகியோரையும் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. இதேப்போன்று 'மாமி' என்கிற சொல் தாயின் சகோதரனின் மனைவி, தகப்பனின் சகோதரி, சகோதரனின் மனைவியின் தாய், மற்றும்

சகோதரியின் கணவனின் தாய் ஆகியோரையும் குறிப்பிடும் சொல்லாகக் காணப்படுகிறது. ஆனால் மனைவியின் தகப்பன், கணவனின் தகப்பன் ஆகியோரை 'அம்மமுத்தன்' என்றும் மனைவியின் தாய் கணவனின் தாய் ஆகியோரை 'அம்மாயிமுத்தி' என்றும் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். முத்தன், முத்தி என்கிற சொற்கள் முறையே எந்த ஒரு வயது சென்ற முள்ளுக்குறும்ப ஆணையும் பெண்ணையும் குறிப்பிடும்போது மரியாதையாகப் பயன்படுத்தப்படும் சொற்களாகும். அம்மமுத்தன் என்கிற சொல்லில் காணப்படும் அம்ம என்கிற பகுதியும் அம்மாயிமுத்தி என்கிற சொல்லில் காணப்படும் அம்மாயி என்கிற பகுதியும் மண உறவுகளை வேறுபடுத்திக் குறிப்பிடுவனவாகக் காணப்படுகின்றன. ஆனால் ஒரு தலைமுறைக்கு மேல் பார்க்கும்போது இவ்வேறுபாடு காணப்படவில்லை. சான்றாக தகப்பனின் தகப்பனையும் கணவனின் தகப்பனின் தகப்பனையும் 'முத்தப்பன்' என்றே குறிப்பிடுகின்றனர். மேலும் அம்மாயி என்னும் சொல் மலையாள மொழியில் தாயின் சகோதரனின் மனைவி, மனைவியின் தாய், கணவனின் தாய், தகப்பனின் சகோதரி ஆகியோரைக் குறிப்பிடுவதாகக் கணப்படுகிறது. முள்ளுக்குறும்பர்கள் தாயின் தகப்பன், தகப்பனின் தகப்பன் ஆகியோரை 'முத்தப்பன்' என்ற ஒரே சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

மனைவியின் மூத்த சகோதரனையும் இளைய சகோதரனையும் 'அளியன்' (aḷiyen) என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். இங்கு மூத்த இளைய வேறுபாடு சொல்லில் காணப்படவில்லை. இதே சொல் மலையாள மொழியிலும் காணப்படுகிறது. மனைவியின் மூத்த சகோதரியை 'பெரியோளு' (periyo:ḷu) என்றும் மனைவியின் இளய சகோதரியை 'செறியோளு' (ceṟiyo:ḷu) என்றும் வேறுபடுத்தி குறிப்பிடுகின்றனர். பெரியோளு என்கிற சொல் மனைவியின் மூத்த சகோதரனின் மனைவி, மூத்த சகோதரனின் மனைவி முதலியோரைக் குறிப்பிடும்போது பயன்படுத்தப்படுகிறது. செறியோளு என்கிற சொல் மனைவியின் இளைய சகோதரனின் மனைவி, மனைவியின் இளைய சகோதரி, இளைய சகோதரனின் மனைவி

ஆகியோரைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் கணவனின் மூத்த சகோதரனையும், கணவனின் சகோதரியின் கணவர்-மூத்தவரையும் 'பெரியவன்' என்றும் கணவனின் இளைய சகோதரனையும் சகோதரியின் கணவன்-இளையவரையும் 'செறியவன்' என்றும் குறிப்பிடு கின்றனர். கணவனின் சகோதரிகள் மூத்ததாகவோ இளையராக வோ இருந்தாலும் 'நாத்தா' என்றே குறிப்பிடுகின்றனர். இங்கு பெரியோளு, செறியோளு பெரியவன், செறியவன் என்னும் சொற்கள் முற்றிலுமாக மண உறவைக் குறிப்பிடும் சொற்களாகக் காணப்படுகின்றன. மேலும் மனைவியின் சகோதரனின் மனைவி மற்றும் கணவனின் சகோதரியின் கணவன் ஆகியோரைத் தென்னிந்திய உறவுமுறை அமைப்பில் காணப்படுவதுபோன்று சகோதர உறவுக்கான சொற்களைப் பயன்படுத்தாமல் வேறுபடுத்திக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. 'பெரியோளு' என்பது ஒரு பெண்பால் சொல்லாகும். பொதுவாக இச்சொல் பெண்களால் பயன் படுத்தப்படுவதில்லை. இவ்வுறவினர்களைக் குறிப்பிடும்போது நாத்தா/அத்தியா என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். ஆனால் ஆண்கள் இச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர். ஆங்களா (a:ṅkaḷa:) பெங்களா (peṅkaḷa:) என்பன முறையே சகோதரன், சகோதரி என்ற பொருளில் பயன்படுத்தப்படு கின்றன. ஆனால் அவற்றைப் பயன்படுத்தும் முறையில் வேறுபாடு காணப்படுகிறது. ஆங்களா என்னும் சொல் பெண்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அதே போன்று பெங்களா என்னும் சொல் ஆண்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

எ.டு.

1. அவளு என்ன பெங்களா 'அவள் என் சகோதரி'

2. அவளு என்ன அச்சி/சும்பி 'அவள் என் அக்காள்/ தங்கை'

3. அவனு என்ன ஆங்களா 'அவன் என் சகோதரன்'

4. அவனு என்ன அண்ணன்/சும்பன் 'அவன் என் அண்ணன்/தம்பி'

முதலாவது வாக்கியத்தை ஒரு ஆண் மட்டுமே பயன்படுத்த முடியும். ஒரு பெண் தன் சகோதரியைக் குறிப்பிடும் போது இவ்வாக்கியத்தைப் பயன்படுத்துவதில்லை. இரண்டாவது வாக்கியத்தையே பயன்படுத்துவாள். இதேபோன்று மூன்றாவது வாக்கியத்தை ஒரு பெண் மட்டுமே பயன்படுத்த முடியும். ஒரு ஆண் தன் சகோதரனைக் குறிப்பிடும்போது நான்காவது வாக்கியத்தையேப் பயன்படுத்துவார். இங்கு ஒருவருடைய பாலின் அடிப்படையில் உறவுமுறைச் சொற்கள் பயன்படுத்தப்படும் முறை வேறுபடுவதைக் காண முடிகிறது. இதேப்போன்று ஒரு ஆண் தன் மகனின் மனைவியின் தாயைப் பெங்களா என்றும் தகப்பனை அளியன் என்றும் குறிப்பிடுகின்றார். ஒரு பெண் தன் மகனின் மனைவியின் தகப்பனை ஆங்களா என்றும் தாயை நாத்தா என்றும் குறிப்பிடுகின்றாள். இங்கு ஆங்களா பெங்களா என்னும் சொற்களைக் குருதி உறவுச் சொற்களாகக் கருதமுடியாத நிலை காணப்படுகிறது. திராவிட உறவுமுறை அமைப்பிலும் குருதி உறவு, மண உறவுப் பாகுபாட்டில் சமுதாயப் பண்பாட்டு அடிப்படையில் பல சிக்கல்கள் ஏற்படுவது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. முள்ளுக்குறும்பர்களிடையே ஆங்களா பெங்களா என்ற குறிப்பிட்ட சொற்களில் அத்தகைய சிக்கல்கள் காணப்படுகின்றன. இதே சொற்கள் மலையாள மொழி பேசும் மக்களிடையேயும் சகோதர சகோதரிகளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இச்சொற்கள் முள்ளுக்குறும்பர்களின் வழக்கிலும் காணப்படுவது முள்ளுக்குறும்பர்களின் மொழியின் மீது மலையாள மொழியின் ஆதிக்கத்தால் ஏற்பட்ட மாறுதலாகவும் இருக்கலாம்.

மண உறவினர்களைப் 'பெண்ணு பெந்தம்' என்று வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். இங்கு பெண்ணு பெந்தம் என்று குறிப்பிடுவது ஒருவரின் மனைவியின் உறவினர்களை மட்டுமே குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. ஒருவரது மகனின் மனைவியின் உறவினர்களை பெண்ணு பெந்தமாகக் கொள்ளாத நிலை காணப்படுகிறது. முன்னால் குறிப்பிட்டவண்ணம் ஒருவரது மனைவியின் தாய், தகப்பன்

அல்லது கணவனின் தாய், தகப்பன் ஆகியோரை மட்டும் 'அம்மாயிமுத்தி' 'அம்மமுத்தன்' என்று வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். ஒருவரது மகனின் மனைவியின் தாயை பெங்களா(சகோதரி) என்றும் மகனின் மனைவியின் தகப்பனை அளியன் (மைத்துனர்) என்றும் குறிப்பிடுகின்றனர். இங்கு தகப்பனின் சகோதரியின் மகளைத் திருமணம் செய்துகொள்ளும் முறையை முள்ளுக்குறும்பர்கள் முற்றிலும் புறக்கணித்தாலும் உறவுமுறைச் சொற்களில் அத்திருமணமுறை சற்று பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

மூத்த சகோதரனை கார்நோரு (Ka:rno:ru) அல்லது அண்ணன் என்று குறிப்பிடுகின்றனர். இதே சொல் மனைவியின் மூத்த சகோதரியின் கணவனைக் குறிப்பிடு வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மனைவியின் இளைய சகோதரியின் கணவனைக் குறிப்பிடும்போது இளைய சகோதரனுக்கான சொல்லைப் பயன்படுத்தாமல் 'அனந்தரன்' என்ற சொல்லால் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். இங்கு சகோதரிகளைத் திருமணம் செய்துகொண்டவர்களை வயது அடிப்படையில் வேறுபடுத்திக் குறிப்பிடுவதையும் மூத்த சகோதரியைத் திருமணம் செய்து கொண்டவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதையும் காணமுடிகிறது.

முன் தலைமுறைகளை எடுத்துக் கொண்டால் மூன்று தலைமுறை வரையிலும் வெவ்வேறு சொற்களால் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். அதோடு தகப்பனின் தகப்பனின் சகோதரர்களை 'தட்டப்பன்' என்றும் தகப்பனின் தகப்பனின் சகோதரர்களின் மனைவிகளை 'தட்டம்மா' என்றும் குறிப்பிடுகின்றனர். இங்கு இளைய மூத்த வேறுபாடு சொல்லில் காணப்படவில்லை. ஆனால் தகப்பனின் சகோதரர்கள் மூத்தவர்களாக இருந்தால் 'பேப்பன்' (pe:ppen) என்றும் இளையவர்களாக இருந்தால் 'ஏப்பன்' (e:ppen) என்றும் வேறுபடுத்துகின்றனர். தகப்பனின் தகப்பனின் தகப்பனை 'மோப்பப்பன்' (mo:ppappen) என்று குறிப்பிடு கின்றனர். அவரது சகோதரர்களுக்கென தனிச் சொல் இல்லை. பின் தலை முறையை எடுத்துக் கொண்டால் இரண்டு தலைமுறை வரைக்குமே தனிச் சொற்கள் காணப்படுகின்றன.

தகப்பனின் இளைய சகோதரனையும் தாயின் இளைய சகோதரியின் கணவனையும் 'ஏப்பன்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். மேற்கூறியவர்கள் தன்னைவிட வயதில் குறைந்தவர்களாக இருந்தால் 'ஏப்பி' என்ற சொல்லால் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு தகப்பனின் இளைய சகோதரர்களையும் வயது அடிப்படையில் பாகுபடுத்திக் குறிப்பிடுவது முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் ஒரு தனித்தன்மையாகும்.

குழந்தைகள் இல்லாத ஒருவரை 'மெய்யன்' என்ற சொல்லாலும் குழந்தைகள் இல்லாத ஒருத்தியை 'மெச்சி' என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றனர். விதவையை 'பிண்டத்தி' என்றும் மனைவி இறந்த ஒருவரை 'பிண்டன்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

முள்ளுக்குறும்பர்களின் சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள்

சமூகப் பொருளாதார அடிப்படையில் முழு வளர்ச்சியடையாத மக்கள் அவர்களின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் தங்கள் உறவுமுறை அமைப்பையும் உறவினர்களையும் அதிகமாகச் சார்ந்திருப்பதைக் காணலாம். ஆனால் முள்ளுக்குறும்பர்களின் சமுதாயத்தில் இந்நிலைக்கு எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

பொதுவாக ஒரு சமுதாயத்தில் மாறுதல்கள் ஏற்படும்போது புதிய மாறுதல்களை ஆதரிப்பவர்களுக்கும் அவற்றை வெறுப்பவர்களுக்குமிடையே பிளவுகள் ஏற்படுவது வழக்கம். முள்ளுக்குறும்பர்களின் சமுதாயம் இதற்கு ஒரு சான்றாக அமைகிறது. பிற சமுதாயத்தைச் சேர்ந்த மக்களோடு ஏற்பட்ட தொடர்பாலும் வானொலி, செய்தித்தாள் ஆகியவற்றின்மூலம் வெளி உலகத்தோடு ஏற்பட்டுள்ள தொடர்பாலும் முள்ளுக்குறும்பர்களின் சமுதாயத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாறுதல்களில் சில அவர்களின் உறவுமுறை அமைப்பிலும் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

முள்ளுக்குறும்பர்களிடையே 'தாளவரம்', 'மேலவரம்' என்ற பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. அதாவது தற்கால நாகரீகத்தை விரும்பாதவர்கள் தாளவரத்தைச் சேர்ந்தவர்களும் தற்கால நாகரீகத்தை விரும்புபவர்கள் மேலவரத்தைச் சேர்ந்தவர்களும் ஆவர்.

தாளவரத்தைச் சேர்ந்தவர்கள் பாரம்பரிய சட்டதிட்டங்கள் யாவும் அவர்களின் கடவுளால் அருளப்பட்டவை என்றும் அவற்றை மீறுவதால் குடும்பத்தில் நோய் அல்லது வேறுவிதமான தொல்லைகள் ஏற்படும் என்றும் கருதுகின்றனர். கூடலூர் தாலுகாவில் வாழும் முள்ளுக்குறும்பர்களில் பெரும்பாலானோரும் தாளவரத்தையே ஆதரிக்கின்றனர். கூடலூர் தாலுகாவில் மேலவரத்தை ஆதரிப்பவர்கள் கப்பாலா பாடியில்தான் அதிகமாகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் கப்பாலாவில் கல்வி கற்றவர்கள் அதிகமாகக் காப்படுவதும், பிற சமுதாயத்தைச் சேர்ந்த மக்களோடு அவர்களுக்கு அதிகத் தொடர்பு ஏற்பட்டிருப்பதுமாகும். ஏனைய பாடிகளில் இப்பாகுபாடு பெயரளவிலேயே காணப்படுகிறது. மேலும் இப்பாகுபாடு சுமார் 20 வருடங்களுக்கு முன்னால்தான் ஏற்பட்டதாகவும் கூறுகின்றனர்.

மேலவரத்தைச் சேர்ந்தவர்கள் முள்ளுக்குறும்பர்களின் பாரம்பரிய சட்டதிட்டங்கள் யாவும் இவர்கள் வாழ்க்கையில் முன்னேறாமல் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இவர்களை அடிமைப்படுத்திய நாயர் நிலப்பிரபுக்களால் ஏற்படுத்தப்பட்டவை என்றும் அவற்றைப் பின்பற்றியதால்தான் தாங்கள் வாழ்க்கையில் முன்னேறாமல் போய்விட்டனர் என்றும் கருதுகின்றனர். சான்றாகத் தங்கள் பாடியைவிட்டு வேறு இடங்களில் வீடுகட்டக்கூடாது என்பதைப் பின்பற்றியதால் கூடுதல் நிலங்களைச் சொந்தமாக்கிக்கொள்ள இயலாமல் போய்விட்டதென்ற எண்ணம் இவர்களிடையே காணப்படுகிறது.

மேலவரத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் பாரம்பரிய ஆடை, நகைகளைப் புறக்கணிப்பதோடு திருமணமுறை, குல அமைப்பு, வீடு கட்டுதல் போன்றவற்றில் அவர்களின் பாரம்பரிய

முறைகளை மீறுவதைக் காணமுடிகிறது. மேலவரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணத்தின்போது கணவன் தான் தாலி கட்டவேண்டும், ஏனைய மதத்தினரைப் போன்று திருமணம் கோவிலில்தான் நடைபெறவேண்டும், திருமணத்தின்போது அணியவேண்டிய பாரம்பரிய ஆடை அணிகலன்கள் ஒன்றும் தேவையில்லை என்ற மாறுதல்களை விரும்புகின்றனர். 1982-ம் வருடம் கப்பாலா பாடியைச் சேர்ந்த ஒருவரின் திருமணம் இந்து மதக்கோவிலில் நடைபெற்றுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இதுவே முதல் முறையாக முள்ளுக்குறும்ப சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இந்துமதக் கோவிலில் வைத்து திருமணம் செய்துகொண்டதாகும். கப்பாலாவில் வடக்கே குலத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் என்பவர் கேரளாவில் கோவிந்தன் பெரா என்ற பாடியைச் சேர்ந்த நாணி என்ற வடக்கே குலத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். இதேப்போன்று கப்பாலாவைச் சேர்ந்த ஜானகி என்ற வடக்கேகுலத்தைச் சேர்ந்த பெண்ணை ஓணிமூலா என்ற பாடியில் அதே குலத்தைச் சேர்ந்த கருணாகரன் என்பவர் திருமணம் செய்துள்ளார். இவர்கள் இருவரும் எஸ்.எஸ்.எல்.சி. படித்து வேலைபார்ப்பவர்கள் ஆகும். இவ்வாறு ஒரே குலத்தில் திருமணம் செய்துகொண்ட எல்லோரும் மேலவரத்தைச் சேர்ந்தவர்களாகும்.

உறவுமுறை அமைப்பைச் சார்ந்திருப்பதும் சமுதாய சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதும் வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடை செய்கிறது என்ற எண்ணம் முள்ளுக்குறும்பர்களிடையே ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உண்மையிலேயே ஒரு சமுதாயத்தின் உறவுமுறை அமைப்பைச் சார்ந்து வாழ்வது அல்லது சமுதாய சட்டதிட்டங்களைப் பின்பற்றுவது வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடைசெய்கிறதா? என்பது ஆய்வுக்குரியதாகும். ஒவ்வொரு சமுதாயத்தின் சட்டதிட்டங்களைப் பொறுத்தும் அவை எப்படிப்பட்ட பின்னணியில் ஏற்படுத்தப்பட்டவை என்பதைப் பொறுத்தும் வேறுபடலாம்.

முள்ளுக்குறும்பர்களின் பாரம்பரிய சமுதாயத்தை பழங்குடியினர், குலம், குடும்பம், தனிமனிதன் என்ற நான்கு

நிலைகளாகப் பிரிக்கலாம். இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம்.

ப - பழங்குடியினர்

↓

குல - குலம்

↓

குடு - குடும்பம்

↓

த.ம. - தனிமனிதன்

தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தால் இவர்களின் சமூக அமைப்பில் ஒரு பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. அதாவது தற்கால நாகரீகம் அல்லது புதுமையாக்கத்தை விரும்புகிறவர்கள் குல அமைப்பை சற்று புறக்கணிக்க முற்படுவது முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குல அமைப்பை புறக்கணிப்பவர்களின் சமுதாயத்தில் பழங்குடியினர், குடும்பம், தனி மனிதன் என்ற மூன்று நிலைகளே காணப்படுகின்றன. இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம்.



பு = புதுமையாக்கம்

தற்கால நாகரீகத்தை அல்லது புதுமையாக்கத்தை விரும்புகிறவர்களும் தங்கள் பாரம்பரியச் சமூக சட்டதிட்டங்களிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெறாத நிலையில் உள்ளனர். சான்றாக மேலவரத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் திருமணத்தின்போது பெரும்பாலான பாரம்பரியச் சடங்குகளையும் கைக்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு ஏற்பட்டுள்ள பிளவு மேலும் வலுப்பட்டு நாளடைவில் முள்ளுக்குறும்பர்களின் சமுதாயம் இரண்டாகப் பிரித்து 'மேலவரம் முள்ளுக்குறும்பர்' 'தாளவரம் முள்ளுக்குறும்பர்' என்ற இரண்டு சமுதாயம் உருவாகிவிடுமெனக் கருதுவதற்கும் வாய்புள்ளது. இதன் அடிப்படையில் தாஸ்டன் (1975:156) குறும்பா அல்லது குறுபா என்பவர்கள் முற்கால குறும்பர்கள் அல்லது பல்லவர்களின் தற்காலப் பிரதிநிதிகள் என்று கூறியிருப்பதையும்: வேறுபட்ட பிரிவைச் சார்ந்த குறும்பர்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது குறும்பர்களிடையே காணப்படும் வேறுபாடுகள் பிற்காலத்தில் ஏற்பட்டவைகளாக இருக்கலாம் என்ற அய்யம் ஏற்படுகிறது.

முள்ளுக்குறும்பர்களின் திருமண முறைப்படி பெண்ணின் திருமண வயது ஆணின் திருமண வயதைவிடக் குறைவாக இருக்கவேண்டுமென்பது பொதுவிதியாக இருப்பினும் இதில் சில வேளைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. முன்னால் கூறியவண்ணம் பெண்களின் திருமண வயது 18 முதல் 30 அல்லது 40 வரையிலும் காணப்படுகிறது. காரணம் ஒரு பெண் தனக்குத் தகுந்த கணவன் வரும்வரை காத்திருக்கவேண்டும். கணவனைத் தேடிச்செல்லும் பழக்கம் இவர்களிடையே இல்லை. கப்பாலா பாடியில் ஒரு பெண்ணுக்குத் தகுந்த கணவன் வராததால் திருமணம் ஆகாமலேயே வயது சென்று இறந்துவிட்டதாகத் தெரிகிறது. இந்த அமைப்பு பெண்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிப்பதாகக் காணப்படுகிறது. இதனால் முள்ளுக் குறும்பப் பெண்கள் பிற சாதி மதத்தைச் சேர்ந்தவர்களை விருப்பத்திருமணம் செய்து கொள்ளும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. கூடலூர் தாலுகாவில் வாழும்

முள்ளுக்குறும்பர்களிடையே எந்தஒரு ஆண்மகனும் பிறசாதிப் பெண்ணைத் திருமணம் செய்ததில்லை. ஆனால் இதுவரை ஒன்பது முள்ளுக்குறும்பப் பெண்கள் பிற சாதியினரைத் திருமணம் செய்துள்ளனர். இவ்வாறு முள்ளுக்குறும்பர்களின் சமுதாயத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருவதையும் இம்மாறுதல்கள் அவர்களின் உறவுமுறையிலும் பிரதிபலிப் பதையும் காணமுடிகிறது.

உறவுமுறைச் சொற்களில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள்

முள்ளுக்குறும்பர்களின் சமூக அமைப்பிலும் உறவுமுறை அமைப்பிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் போன்று உறவுமுறைச் சொற்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. முள்ளுக்குறும்பர்களின் மொழியின் ஒலியனியல், உருபனியல் சொற்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது மலையாள மொழியின் தாக்கம் கடுமையாக ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இத்தாக்கத்தால் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் முள்ளுக்குறும்பர்களின் மொழியை மலையாள மொழியின் ஒரு கிளை மொழியென கருதும் அளவுக்கு ஏற்பட்டுள்ளது (இராபர்ட் சத்திய சோசப், 1982). உறவுமுறைச் சொற்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் சற்று குறைவாகவே காணப்பட்டாலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

மேலும் இளைய தலைமுறையினர் தங்கள் பாரம்பரிய உறவுமுறைச் சொற்களை பயன்படுத்துவதை சற்று இழிவாகக் கருதுகின்றனர். இவர்கள் மலையாள மொழியில் காணப்படும் உறவுமுறைச் சொற்களைப் பயன்படுத்த முற்படுகின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் வாழும் பகுதியில் குடியேறியுள்ள, பெரும்பான்மையான, சமூகப்பொருளாதார நிலைகளில் முன்னேறிய மக்கள் பேசும் மலையாள மொழியானது அப்பகுதியின் மொழியாகக் கருதப்படுவதே யாகும். மலையாள மொழியில் பேசுவதையும் அவ்வாறான உறவுமுறைச் சொற்களைப் பயன்படுத்துவதையும் சற்று உயர்வாகக் கருதுகின்றனர். எனவே உறவினர்களை குறிப்பிடும்போது மலையாள உறவுமுறைச் சொற்களைப் பயன்படுத்த முற்படுகின்றனர். ஆனால் அவர்களின்

உறவினர்களை அழைக்கும் போது பெரும்பாலும் பாரம்பரிய உறவுமுறைச் சொற்களாலே அழைக்கின்றனர். அவர்களின் பாரம்பரிய உறவுமுறைச் சொற்களுக்குப்பதிலாகப் பயன்படுத்தப் படும் சில மலையாள உறவுமுறைச் சொற்களை கீழே காணலாம்.

பெரியோளு	⟶	ஏட்டத்தியம்மா 'மூத்தசகோதரனின் மனைவி'
சும்பன்	⟶	எனியன் 'இளைய சகோதரன்'
சும்பி	⟶	எனியத்தி 'இளைய சகோதரி'

அடிக்குறிப்புகள்

1. பரிசப்பணம் என்பது ஆண் வீட்டார் பெண்ணின் பெற்றோருக்குக் கொடுக்கும் ஒரு தொகை ஆகும். இத்தொகை பெண்ணின் அழகு, குணம், வயது ஆகியவற்றைப் பொறுத்து வேறு படும். ஒரு பெண்ணின் இரண்டாவது திருமணமாக இருந்தாலோ திருமணத்துக்கு முன்னால் தவறாக நடந்த பெண்ணாக இருந்தாலோ பரிசப்பணம் கூடுதலாகக் கிடைப்பதில்லை.

2. மூநாமன் என்பவர் பெண் தேடிச் சென்றவரின் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் ஆகும் (a third party).

3. திருமணத்துக்குச் சில நாட்களுக்கு முன்னால் மணமகனும் மணமகளும் காதில் மயில் பீலி அணியவேண்டும். திருமணத்துக்குப்பின்னர் அவற்றை அகற்றி விடுவர். இவ்வாறு மணமக்களுக்குப் பீலி அணிவதும் அகற்றுவதும் தாய்மாமன் தான் செய்வது வழக்கம். இல்லாவிட்டால் அதே குலத்தைச் சேர்ந்த வேறு நெருங்கிய உறவினர் யாராவது அச்சடங்கினைச் செய்வது வழக்கம். இவ்வாறு பீலி அணிவது திருமணத்துக்குப்பிறகு காதலை, கடுக்கன் போன்ற அணிகலன்கள் அணிவதற்குத் தக்கவாறு காதின் துறை பெரிதாவதற்காகும்.

4. தெய்வப்புரை என்பது ஒவ்வொரு பாடியின் நடுவிலும் காணப்படும் கோவில் போன்ற வீடு. அவர்கள் வழிபடும் கடவுள் அங்கு வாழ்வதாகவும் கருதுகின்றனர். தெய்வப்புரையைப் பெரிய வீடு என்றும் கூறுவார்கள்.

5, 6. கோல்களி, வட்டக்களி ஆகியவை முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் கிராமிய நடனங்களாகும். இவற்றில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. கோல்களியின்போது

தெய்வப்புரையின் முன் விளக்கேற்றி வைத்து கைகளில் இரு கோல்களோடு வட்டமாக நிற்பார்கள். பின்னர் கோல்களை அடித்து தாளங்களுடன் பாட்டுப்பாடுவார்கள். வட்டக்களியின் போது கைகளில் கோல்கள் இல்லாமல் அவ்வாறு வட்டமாக நின்று கரங்கள் மற்றும் கால்களினால் தாளங்களோடு பாட்டுப்பாடுவார்கள். அவ்வாறு பாடும் பாடல்களில் பெரும்பாலும் மகாபாரதம், கம்பராமாயணம் ஆகிய புராணங்களில் காணப்படும் கதைகளே காணப்படுகின்றன. கோல்களி மற்றும் வட்டக்களி திருமணச் சடங்கு மற்றும் முக்கிய விழாக்கள் ஆகிய மகிழ்ச்சியான நாட்களில் காணப்படும்.

7. கதையும் பாட்டும் என்பது ஒரு கதை சொல்லி அதற்கான விளக்கத்தைப் பாட்டாகப் பாடுதல். இது திருமண நாட்களில் மட்டுமின்றி புலிவேட்டை போன்ற விஷேச பணிகள் நடைபெறும்போதும் காணப்படும்.

8. காணங்கெட்டி என்பவர் மணமகனின் சகோதரியின் கணவன் ஆகும்.

9. முண்டுகார்த்தி என்பவள் மணமகனின் சகோதரி ஆகும். காணங்கெட்டி மற்றும் முண்டுகார்த்தி ஆகியோர் மணமகனுக்கு உருதுணையாக இருப்பார்கள்.

10. மூநாமன் என்பவர் மணமகனின் பாடியைச் சேர்ந்த ஒருவர் அல்லது பக்கத்துப்பாடியில் உள்ள ஒருவர் ஆகும். வழியில் விபத்துக்கள் நேரிடாமல் காக்கவேண்டியது இவரது பொறுப்பாகும்.

11. கத்தியின் பெயர் மளமாளன் கத்தி

12. முள்ளுக்குறும்பர்களின் சமூக அமைப்பில் காணப்படும் ஒரு தலைவரின் பெயர், இவருக்கு ஆண்வீட்டார் 51/2 ரூபாய் கொடுக்கவேண்டும்.

13. மணப்பெண்ணை ஆயத்தப்படுத்தி தெய்வப்புரையில் அமரச்செய்வதை சமெச்சு வெக்கலு (cameccuvekkalu) என்று கூறுவார்கள்.

14. திருமணத்துக்கு மறுநாள் உறவினர்கள் பிரிந்து செல்வதை ஆளுபிரியலு (a:ļupiriyalu) என்று கூறுவார்கள்.

15. புட்டு என்பது முள்ளுக்குறும்பர்களால் தயாரிக்கப்படும் ஒருவித தோசை ஆகும். இதை திருமணத்துக்குப்பின் முதலாவது மணமக்கள் மணமகளின் வீட்டிற்குச் செல்லும்போது வெள்ளைத் துணியில் இரண்டு கட்டுகள் கட்டி கொண்டு போவது வழக்கம். இவ்வாறு புறப்பட்டு செல்பவர்களை புட்டுகாரு என்று கூறுவார்கள்.

16. அண்மையில் கள்ளிச்சால் என்ற பாடியைச் சேர்ந்த ஒரு முள்ளுக்குறும்பர் ஒரு முகமதிய பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். இதுபோன்ற சம்பவம் எதுவுமே இதற்கு முன்னால் நடந்ததில்லை என கூறுகின்றனர்.

17. வாழுமிட ஒப்புமை என்பது ஒரே ஊரில் வாழ்தல், ஒரே சமூகநிலையைச் சேர்ந்தவர்களாக இருத்தல் முதலியன.

தேனுக்குறும்பர்

தேனுக்குறும்பர்கள் தமிழ்நாட்டில் மட்டுமன்றி கேரளா, கர்நாடகா, மாநிலங்களிலும் வாழ்வதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் (1961) கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் தாலுக்காவில் முட்டலுமூலா, அய்யங்கொல்லி, மசனங்குடி நாடுகாணி, ஆனக்கெட்டி, தெப்பக்காடு, பந்தலூர், கூடலூர், மரப்பாலம் ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழும் பாடிகளில் சுமார் 5 முதல் 10 குடிசைகள் காணப்படுகின்றன. இவர்களின் மக்கள் தொகையினைக் குறித்து ஆய்வாளர்களிடையே பல கருத்துக்கள் காணப்படுகின்றன. 1951ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையின் படி கூடலூர் தாலுகாவில் வாழும் தேனுக்குறும்பர்களின் தொகை 941 எனவும் 1961 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி 552 பேர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாமோதரன் (1962) குறிப்பிடும்போது 1951 ஆம் வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் தொகையில் அப்பகுதியில் வாழும் ஏனைய குறும்பர்களையும் சேர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். 1971 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி நீலகிரி மாவட்டத்தில் வாழும் தேனுக்குறும்பர்களின் எண்ணிக்கை 1260 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதிலும் அப்பகுதியில் வாழும் ஏனைய குறும்பர்கள் சேர்க்கப்பட்டிருப்பார்களோ என்ற அய்யம் ஏற்படுகிறது.

ஒவ்வொரு பாடியிலும் கார்ணவெனு (ka:rṇavenu) என்ற தலைவரும் அவரின் கீழ் சில அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு பஞ்சாயத்தும் காணப்படுகிறது. மக்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது இப்பஞ்சாயத்தின் கடமையாகும். ஒவ்வொரு குடும்பத்திலும் 'மனெ கார்ணவெனு' (maneka:rṇavenu) என்ற ஒருவர் காணப்படுகின்றார். தேனுக்குறும்பர்களின் சமூக ஒழுங்கின்படி தாய்மாமன் தான் அப்பொறுப்பை ஏற்க வேண்டும். அவரது ஒப்புதலோடு தான் குடும்பத்தில் திருமணங்கள் ஒழுங்கு செய்யப்படும். 'மந்தரகாரனு' என்ற ஒரு தலைவரும் இவர்களிடையே காணப்படுகிறார். இவர் மரணச் சடங்குகள், பேய் துரத்துதல் போன்றவற்றில் ஈடுபடுவார். மேலும், ஒவ்வொரு பாடியிலும் காரணப்பாடு (Ka:raṇappa:ṭu) என்ற ஒருவர் இருப்பார். அவர்தான் மத சம்மந்தமான காரியங்களைக் கண்காணிப்பார்.

நடன சபாபதி (1979) தேனுக்குறும்பர்களின் மொழியைக் கன்னட மொழியின் கிளை மொழியெனக் கூறியுள்ளார். இவரால் வரையறுக்கப்பட்டு கையாளப்பட்டுள்ள ஒலியன்கள் இவ்வாய்விலும் பின்பற்றப்பட்டுள்ளன.

தேனுக்குறும்பர்களிடையே குல அமைப்பு காணப்படவில்லை. ஆனால் தறவாட்டுக்காரர்களோடு திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. இங்கு தறவாட்டுக்காரர் என்பது தகப்பனின் கால்வழியைச் சார்ந்தவர்கள். தாய் மாமனின் மகளைத் திருமணம் செய்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். தகப்பனின் சகோதரியின் மகளையும் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனால் சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்வதில்லை.

திருமண முறை

தேனுக்குறும்பர்களிடையே இரண்டு விதமான திருமணங்கள் நடைமுறையில் காணப்படுகின்றன. ஒன்று ஒழுங்கு செய்யப்பட்ட திருமணம் மற்றொன்று விருப்பத்

திருமணம். ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கணவனும் மனைவியுமாக வாழ விரும்பினால் இருவரும் காட்டில் நெடுந்தூரம் சென்று தூரத்திலுள்ள ஏதாவது பாடியில் சென்று குடும்ப வாழ்க்கையை ஆரம்பிப்பார்கள். இவர்கள் பெற்றோரின் ஒப்புதலில்லாமல் செல்வதால் தங்களின் பாடியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். இவ்வாறு சென்றவர்களுள் சிலர் குறைந்தது மூன்று மாதங்களுக்குப் பின் திரும்பி வருவது வழக்கம். அவ்வாறு வந்தால் முதலில் பாடியின் தலைவரிடம் (ka:ranaveru) மன்னிப்புக் கேட்டுப் பின்னர் அவர்கள் கடவுளின் காலைப்பிடித்து வழிபாடு நடத்திய பின்னர்தான் பாடியில் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.* இவ்வாறு விருப்பத் திருமணம் செய்து கொள்வதை 'எறுத கெட்டுது' (erude kettudu) என்று இழிவாகக் கூறுவார்கள்.

ஒழுங்கு செய்யப்பட்டத் திருமணமானது பெற்றோரின் ஒப்புதலோடு நடைபெறுகிறது. இத்திருமணத்திற்கு முதலில் ஆண்வீட்டார்தான் பெண் தேடிச் செல்லவேண்டும். முதலில் மணமகனின் தாய்மாமன் அல்லது சகோதரியின் கணவன் அவரைப் பெண்ணின் வீட்டிற்கு அழைத்துச் செல்வார். மணமகனும், பெண்ணின் தாய் மாமனும் ஒப்புதலளித்தால் திருமணத்திற்கான ஒழுங்குகள் செய்யப்படும். இரண்டாவது ஒருமுறை உறவினர்களோடு ஆண்வீட்டார் பெண் வீட்டிற்குச் செல்வார்கள். அப்போது அப்பாடியின் காரணவனின் ஒப்புதலோடு திருமண நாள் நிச்சயிப்பார்கள். திருமணம் நிச்சயிக்கும்போது ஆண் வீட்டார் பெண் வீட்டாருக்கு சுமார் 100/- ரூபாய் பணமும் சுமார் 100 ரூபாயக்கு ஆடையும் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். மணமகன் பெண்ணின் பெற்றோருக்கும் தாய் மாமனுக்கும் ஆடை வழங்க வேண்டும். இவ்வாறு கொடுக்கும் ரூபாயையும் ஆடையையும் 'அண கொடுது' என்று கூறுவார்கள். ஆண்களுக்கு சுமார் 25 வயதிலும் பெண்களுக்கு சுமார் 20 வயதிலும் திருமணம் நடைபெறுகிறது.

தாலி என்பது ஒருவித மணியாகும். இதை ஒருவித நூலில் கோர்த்துக் கட்டுவது வழக்கம். நடன சபாபதி

(1979) குறிப்பிடும்போது திருமணத்தன்று மணமகனின் *தாய்மாமன் மணமகளுக்குத் தாலி கட்டுவதாகக் கூறியுள்ளார்.* ஆனால் தற்போதைய கள ஆய்வின் போது முட்டலு மூலை பாடியின் தலைவர் திரு. கரியன் மற்றும் வேறு சில தகவலாளிகள் கூறியதின்படி திருமணம் நிச்சயிக்கும் போதே தாலிகட்டி விடுவர். அதாவது திருமணம் நிச்சயிக்கும் போது தாலியை ஆணின் தாய் மாமன் பெண்ணின் தாய்மாமனிடம் கொடுத்து பெண்ணின் தாய்மாமன் தான் பெண்ணுக்குத் தாலி கட்டுவார். ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் அவள் தாலி மற்றும் அணிகலன்களை அகற்றி விடுவாள். சுமார் பத்து நாட்களுக்குப் பின் திரும்பவும் அணிந்து கொள்வது வழக்கம்.

திருமணத்தன்று மணமகனும் அவரது உறவினர்களும் மணமகளின் வீட்டிற்குச் செல்வார்கள். அங்கு பாட்டு, நடனங்களோடு வரவேற்கப் படுவார்கள். மணமகளுக்கான புதிய ஆடைகளை வெற்றிலை, பாக்கு ஆகியவற்றோடு மணமகனின் தாய்மாமன் மணமகளிடம் கொடுப்பார். அதோடு ஆண் வீட்டார் பெண் வீட்டாருக்குக் கொடுப்பதாகக் கூறியிருந்த ரூபாயையும் மணமகளின் தகப்பனிடம் கொடுப்பார். பின்னர் மணப்பெண் மணக்கோலம் பூண்டு வரும்போது மணமகனின் தாய்மாமன் *மாலையணிவித்து வரவேற்பார். இதுவே மணமகளை* மணமனின் குடும்பத்தோடு இணைப்பதற்கு அடையாளமாகும். பின்னர் மணமகனின் தாய்மாமன் மணமகளின் வீட்டைச் சேர்ந்த முதியோர்களுக்கு மதுபானமும், வெற்றிலையும் வழங்குவார். இதோடு திருமணச் சடங்குகள் முடிவடையும். அன்று பிற்பகல் திருமணத் தம்பதிகள் மணமகனின் வீட்டிற்குச் செல்வார்கள். அங்கு சென்றவுடன் தங்கள் கடவுளை வழிபட்ட பின்னரே வீட்டினுள் செல்வார்கள். அங்கு பாட்டு, நடனம் ஆகியவற்றோடு வரவேற்கப்படுவார்கள். பொதுவாகப் பெண் வீட்டைவிட ஆண் வீட்டிலே அதிகமான பாட்டும் நடனமும் காணப்படும்.

தேனுக்குறும்பர்களின் திருமணத்தின்போது தாய்மாமன் முக்கிய இடத்தை வகிப்பதைக் காண முடிகிறது. இதேப்

போன்று ஒரு பெண் வயதுக்கு வந்தவுடன் நடைபெறும் சடங்காச்சாரங்களில் தாய்மாமனின் மனைவி முக்கிய பங்கு வகிப்பதைக் காணலாம். அதாவது பருவமடைந்த பெண்ணை நீராட்டும்போது முதலில் தாய்மாமனின் மனைவி புளிகலந்த சுடுதண்ணீரைத் தலையில் விடுவாள். பின்னர் அப்பெண்ணை அண்மையிலுள்ள நீர் நிலைக்கு அழைத்துச் செல்வார்கள். நீராடி விட்டுத் திரும்பி வரும்போது தாய்மாமனின் மனைவி அப்பெண்ணை மாலை அணிவித்து வரவேற்பாள். இவ்வாறு தாய் மாமனுக்கும், மனைவிக்கும் முக்கியத்துவம் கொடுப்பது பொதுவாகத் திருமணச் சடங்கு, பூப்பு நீராட்டுச் சடங்கு ஆகிய மகிழ்ச்சியான சடங்குகளிலே காணப்படுகிறது. ஆனால், மரணச் சடங்குகளில் தாய்மாமனுக்கும், மனைவிக்கும் எந்தவித முக்கியத்துவமும் கொடுப்பதில்லை. அங்கு இறந்தவரின் மூத்தமகன் மந்திரக்காரன் ஆகியோருக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர். மேலும், தேனுக்குறும்பர்களின் திருமணத்தின்போது வெற்றிலைபாக்கு வழங்கி ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டிக் கொள்வதும் மதுபானம் அருந்தி மகிழ்வதும் முக்கிய அம்சங்களாகக் காணப்படுகிறது. குறிப்பாக மணமகனின் தாய்மாமன் மணமகளுக்கு வெற்றிலை-பாக்கு வழங்குவதும் மணமகள் வீட்டாருக்கு மதுபானம் வழங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், மணமக்கள் முதியோர்களின் ஆசீர்வாதத்தைப் பெறும் போதும் வெற்றிலை பாக்கு வழங்கியே பெற்றுக் கொள்கின்றனர். திருமணத்துக்கு முன்னால் பெண் வீட்டார் ஆண் வீட்டுக்குச் செல்வதில்லை.

திருமணத்துக்குப்பின் மூன்றாவது நாள் மணமக்கள் சடங்காச்சாரங்களோடு மணமகள் வீட்டிற்குச் செல்வார்கள். சில நாட்கள் அங்கு தங்கிவிட்டுப் பின்னர் மணமகன் வீட்டிற்குச் செல்வார்கள்.

தேனுக்குறும்பர்களிடையே விவாகரத்தும், மறுமணமும் காணப்படுகின்றன. ஆண் அல்லது பெண் யார் வேண்டுமானாலும் விவாகரத்து செய்து கொள்ளலாம். அதாவது பெண்கள் கணவனை விட்டுச் சென்று வேறொருவரைத் திருமணம் செய்து கொள்வதும்

காணப்படுகிறது. அதேப் போன்று ஆண்களும் தன் மனைவியோடு வாழ விரும்பாவிட்டால் அவளை விட்டுவிட்டு வேறு திருமணம் செய்து கொள்வதுண்டு. இவ்வாறு பிரிந்து செல்வதில் குழப்பங்கள் ஏற்பட்டால் மட்டுமே பஞ்சாயத்தாரிடம் செல்வது வழக்கம். இங்கு, பஞ்சாயத்தார் என்பது முக்கியமாக இரு திறத்தாரின் தாய்மாமன்மார் ஆகும். மனைவி கணவனை விட்டுச் சென்றாலும், பரிசப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் பழக்கம் இவர்களிடையே இல்லை. கணவன் அல்லது மனைவி இறந்துவிட்டாலும் ஏழு நாட்கள் சென்ற பின்னர் மறுமணம் செய்து கொள்ளலாம். தேனுக் குறும்பர்களிடையே ஒருவர் இரண்டு மூன்று பெண்களை மணந்து கொள்ளும் பழக்கமும் காணப்படுகிறது. இது ஆண் மகனின் உடல் வலிமை, செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைகிறது.

குடும்ப அமைப்பு

தேனுக்குறும்பர்கள் தனிக்குடும்ப முறையையே பின்பற்றுகின்றனர். ஒரு குடும்பத்தில் மூத்த மகனுக்குத் திருமணமாகி இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பின் அவனுடைய பெற்றோர் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டிற்குச் சென்று விடுவது வழக்கம். திருமணமாகாதவர்கள் பெற்றோரோடு வாழ்வார்கள். இவ்வாறு மூத்த மகனுக்கு திருமணமான பின் பெற்றோர்கள் பிரிந்து செல்வது ஒரு தனித் தன்மையாகும். பொதுவாக எந்த சமுதாயத்திலும் திருமணமான பிள்ளைகள் தனியாக பிரிந்து செல்வது வழக்கம். இதற்கு நேர் மாறான பழக்கம் இவர்களிடையே காணப்படுகிறது. ஆனால் அடுத்த (இரண்டாவது அல்லது மூன்றாவது) மகன் திருமணம் செய்துகொண்ட பின் பெற்றோர் அவ்வாறு பிரிந்து செல்வதில்லை. இங்கு குடும்பத்தில் மூத்த மகனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பழக்கம் தேனுக்குறும்பர்களிடையே காணப்படுவதை உணரலாம்.

ஒரு குடும்பத்தின் தலைவர் மற்றும் அவருடைய மனைவி ஆகியோருள் ஒருவர் இறந்து விட்டால் மற்றவர் தன் பிள்ளைகளின் குடும்பத்தோடு இணைந்து வாழ்வது வழக்கம்.

முட்டலுமூலை என்ற தேனுக்குறும்பர்களின் பாடியில் வாழும் எழு குடும்பங்களில் மூன்று குடும்பங்கள் கணவனும், மனைவியும் மட்டும் வாழும் குடும்பங்கள் ஆகும். இரண்டு குடும்பங்கள் கணவன் மனைவி பிள்ளைகள் ஆகியோர் வாழும் குடும்பங்கள். ஏனைய இரண்டும் கணவன், மனைவி, பிள்ளைகள் மற்றும் வயது சென்ற தாயும் இணைந்து வாழும் குடும்பங்கள். இக்குடும்பங்களின் வரை படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. கணவனும் மனைவியும் வாழும் குடும்பங்கள் (3 குடும்பங்கள்)

2. கணவனும் மனைவியும் ஒரு பெண் பிள்ளையும் வாழும் குடும்பம்.



3. கணவனும் மனைவியும் ஒரு ஆண்பிள்ளையும் வாழும் குடும்பம்.



4. கணவன் மனைவியும் மூன்று பெண் பிள்ளைகளும் வயது சென்ற தாயும் வாழும் குடும்பம்.



5. கணவன் மனைவியும் ஒரு ஆண் குழந்தையும் வயது சென்ற தாயும் வாழும் குடும்பம்.



இங்கு குடும்ப அமைப்புகளைப் பார்க்கும் போது வயது சென்ற பெற்றோரில் ஆண் அங்கத்தினர் யாரும் தங்கள் பிள்ளைகளோடு இணைந்து வாழ்வதைக் காண முடியவில்லை. இதற்குக் காரணம் ஆண்கள் பொதுவாக வயது சென்ற பருவத்திலும் மனைவி இறந்து விட்டால் மறுமணம் செய்து கொள்கின்றனர்.

தேனுக்குறும்பர்கள் சொத்துரிமையிலும் தந்தைவழி முறையையே பின்பற்றுகின்றனர். பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை. ஒரு தாய் இறந்துவிட்டால் அவளுடைய தாலி மற்றும் அணிகலன்களையும் கழற்றி அவளுடைய மூத்த மகளிடம் கொடுப்பது வழக்கம். வீடு சொத்து போன்ற ஏனைய உடைமைகளைக் குடும்பத் தலைவரின் விருப்பப்படி ஆண் பிள்ளைகளுக்குச் சமமாகப் பகிர்ந்தளிப்பார்கள்.

தேனுக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

தேனுக்குறும்பர்கள், பெற்றோரின் உடன்பிறந்தோரின் பிள்ளைகளை வகைப்படுத்தும் முறையை முர்டாக்கின் கசின் வகைப்படுத்தல் முறையின் அடிப்படையில் பார்க்கும்போது சேர்த்தல் மற்றும் பிரித்தல் விதிமுறைகளையே கையாளுகின்றனர். ஒருவரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரனின் பிள்ளைகள் ஆகியோர் ஒரு உறவுமுறைப் பிரிவினராகச் சேர்க்கப்படுகின்றனர். ஒருவரின் தகப்பனின் சகோதரனின்

பிள்ளைகள் தாயின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் அவரது சகோதர சகோதரிகள் ஆகியோர் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு வேறுபட்ட ஒரு பிரிவில் அமைக்கப்படுகின்றனர். இவ்வாறு தேனுக்குறும்பர்கள் திராவிட உறவுமுறை அமைப்புக்கு ஒத்த ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். திராவிட உறவுமுறை அமைப்பைப் போன்று பால் மற்றும் மூத்த இளைய பாகுபாடும் தேனுக்குறும்பர்களிடையே காணப்படுகிறது. தேனுக்குறும்பர்களிடையே காணப்படும் ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பானது முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் ஹவாயன் கசின் முறையமைப்பிலிருந்து வேறுபடுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் 10-ன் மூலம் தேனுக்குறும்பர்களிடையே காணப்படும் கசின் முறையமைப்பை விளக்கலாம்.



படம்-10

aṇṇen	=	BrE, FaBrSoE, MoSiSoE.
tamman	=	BrY, FaBrSoY, MoSiSoY.
akkan	=	SiE, FaBrDaE, MoSiDaE.
teṅge	=	SiY, FaBrDaY, MoSiDaY.
ba:ven	=	FaSiSoE, MoBrSoE.
maydan	=	FaSiSoY, MoBrSoY.
eṭṭige	=	FaSiDaE, MoBrDaE
na:ḍini	=	FaSiDaY, MoBrDaY.

படம்-10ல் A, A1 என்று குறிப்பிடப்பட்டுள்ள உறவினர்கள் ஒரு உறவுமுறைப் பிரிவினர்களாகவும் B, B1 என்று குறிப்பிடப்பட்டுள்ள உறவினர்கள் ஒரு உறவுமுறைப் பிரிவினர்களாகவும் பிரிக்கப்படுகிறார்கள்.

தேனுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகளில் தாய்மாமனுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது போன்று அவரைக் குறிப்பிடும் உறவுமுறைச் சொல்லுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றனர். தாய்மாமனை 'அம்மோன்' (ammo:n) என்றும் தகப்பனின் சகோதரியின் கணவன், சகோதரனின் மனைவியின் தகப்பன் ஆகியோரை 'மாவன்' அல்லது 'மாவனன்' என்றும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் தாய்மாமனின் மகள், தகப்பனின் சகோதரியின் மகள் ஆகியோரை மணந்துகொள்ளும் திருமண முறையைப் பின்பற்றினாலும் மனைவியின் தகப்பனை 'மாமுதியன்' என்றும் மனைவியின் தாயை 'அத்த முதுக்கி' என்றும் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். ஆனால் தாயின் சகோதரனின் மனைவி, தகப்பனின் சகோதரி, சகோதரியின் கணவனின் தாய், சகோதரனின் மனைவியின் தாய் ஆகியோரை அத்தெ என்றே குறிப்பிடுகின்றனர். தாயையும், கணவனின் தாயையும் 'ஒவ்வெ' என்றே குறிப்பிடுகின்றனர். கணவனின் தகப்பனை 'மாமுஜனு' என்று வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். பொதுவாக மனைவியின் பெற்றோர் மற்றும் கணவனின் பெற்றோர்களை வேறுபடுத்திக் குறிப்பிடுவது வட இந்திய உறவுமுறை அமைப்பிலும் தென்னிந்தியாவில் சில பகுதிகளிலும் காணப்படும் ஒரு கூறு ஆகும். இவ்வாறு வேறுபடுத்திக் குறிப்பிடுவது முள்ளுக்குறும்பர்களிடையேயும் காணப்படுகிறது. ஆனால் முள்ளுக்குறும்பர்கள் தாய் மாமனின் மகள் தகப்பனின் சகோதரியின் மகள் ஆகியோரைத் திருமணம் செய்து கொள்ளும் முறையை முற்றிலும் புறக்கணிக்கின்றனர். பெட்டக் குறும்பர்கள் தாய்மாமன், தகப்பனின் சகோதரியின் கணவன் மற்றும் மனைவியின் தகப்பன், கணவனின் தகப்பன் ஆகியோரை ஒரே சொல்லால் குறிப்பிடுகின்றனர். இங்கு குறும்பர்பளின் உறவுமுறைச் சொற்களிலும், திருமண முறையிலும் பல வேறுபாடுகள் இருப்பதைக் காண முடிகிறது.

தேனுக்குறும்பர்கள் இரத்த உறவுச் சொற்களோடு-க(-ga), -அ (-a)- போன்ற ஒட்டுகளைச் சேர்ப்பதன் மூலம் மண உறவினர்களை வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர்.

எ.கா. அக்கென்	(akkan)	மூத்த சகோதரி
அக்கெக	(akkega)	கணவனின் சகோதரனின் மனைவி (மூத்தவள்)
தம்மென்	(tamman)	இளைய சகோதரன்
தம்மன	(tammana)	கணவனின் சகோதரியின் கணவன் (இளையவன்)

தேனுக்குறும்பர்கள் மூத்த, இளைய வேறுபாட்டினைப் பெரும்பாலும் வெவ்வேறு சொற்களால் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு குறிப்பிடுவது இரத்த உறவுச் சொற்களில் மட்டுமின்றி மண உறவுச் சொற்களிலும் காணப்படுகிறது. சான்றாக மூத்த சகோதரியின் கணவன் மனைவியின் சகோதரன் - மூத்தவர் ஆகியோரை 'பாவென்' என்றும் இளைய சகோதரியின் கணவன், மனைவியின் சகோதரன்-இளையவர் ஆகியோரை 'மைதென்' என்றும் குறிப்பிடுகின்றனர். முன் தலைமுறையினரையும் பின் தலைமுறையினரையும் குறிப்பிடும்போது இரண்டு தலைமுறை வரை மட்டுமே வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

பெட்டக்குறும்பர்

பெட்டக்குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்தில் முக்கியமாக கூடலூர் தாலுக்காவில் நெலக்கோட்டை, தேவாலா, பந்தலூர், பள்ளியற, மாயார், கார்குடி, அய்யங்கொல்லி, ஏலமன்னா, தெப்பக்காடு, பனஞ்செற, முதுமலை ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். செயபால் (1978) பெட்டக்குறும்பர்களின் மொழியில் 'பெட்டு' என்பதற்கு மலை என்று பொருள் எனவும் இவர்கள் மலைப்பாங்கான பகுதியில் வாழ்வதால் பெட்டக்குறும்பர்கள் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

பெட்டக்குறும்பர்கள் தாங்கள் வாழும் இடத்தைப் 'பாடி' என்று கூறுவார்கள். பொதுவாக ஒரு பாடியில் 9 முதல் 16 குடிசைகள் வரை காணப்படும். பாடியின் நடுப்பகுதியில் சுவர்கள் இல்லாத சற்று உயர்ந்த தரையுடைய ஒரு பெரிய குடிசை காணப்படும். பஞ்சாயத்துக்கூட்டம், கடவுள் வழிபாடு ஆகியவை பெரும்பாலும் அங்குதான் நடைபெறும். பாடிக்குப் புதிதாக யாராவது வந்தாலும் அங்குதான் அமரச் செய்வார்கள். ஒவ்வொரு பாடியிலும் 'மொகாளன்' என்ற தலைவர் இருப்பார். திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் ஆகியவை மேற்கூறிய கிராமத் தலைவரின் தலைமையில்தான் நடைபெறும். தலைவர் பாரம்பரியமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராகவே இருப்பார். ஆனால் ஆண் வாரிசு இல்லமல் தலைவர் இறந்துவிட்டால் அப்பாடியில் வாழும் மக்கள் எல்லோரும் கூடி வேறு தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

பெட்டக்குறும்பர்களின் மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தென்திராவிட மொழியென செயபால் (1978) கூறியுள்ளார். இவரால் வரையறுக்கப்பட்டு கையாளப்பட்டுள்ள ஒலியன்கள் .இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளன.

குல அமைப்பு

செயபால் (1978) பெட்டக்குறும்பர்களிடையே சுமார் 28 குலங்கள் காணப்படுவதாகக் கூறியுள்ளார். இந்த 28 குலங்களும் ஆறு பெரிய குலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பெரிய குலங்களினுள் காணப்படும் குலங்களுக்கிடையே திருமண உறவு வைத்துக்கொள்வதில்லை. அதாவது பெரிய குலத்தினுள் காணப்படும் குலங்கள் சகோதர குலங்களாகும். மேலும் குலங்களின் தோற்றம் பற்றிய செய்திகள் எதுவும் தெரியவில்லை எனவும் கூறியுள்ளார். குலங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஒற்புன் மகி (Orbunmagi)
2. புர்காளண் மகி (purka:ḷnmagi)
3. பாடுகன் மகி (ba;ḍuganmagi)
4. ஜிர்கால் மகி (jirga:lmagi)
5. மங்காளன் மகி (maṅga:ḷnmagi)

6. அட்டங்கால் மகி (aṭṭaṅga:l magi)
7. பாம்பாரன் மகி (pa:mba:rn magi)
8. பெலெஜின் மகி (pelejin magi)
9. சாகோடு மகி (ca:go:ḍu magi)
10. கல்கின் மகி (kalkin magi)
11. கோடிகின் மகி (ko:ṭigin magi)
12. யான்பார் மகி (ya:npa:r magi)
13. யார்கால் மகி (ya:rka:l magi)

14.	ஒல்மின்ஜில் மகி	(olminjil magi)
15.	தெர்கிடிள் மகி	(terkiḍḷ magi)
16.	கெம்சில் மகி	(kemsil magi)
17.	நிம்புல் மகி	(nimbul magi)
18.	கெருட் மகி	(keruḍ magi)
19.	நடுமித் மகி	(naḍumit magi)
20.	ஒற்கோட் மகி	(orko:ṭ magi)
21.	பெர் மகி	(per magi)
22.	சின்ஜர் மகி	(cinjar magi)
23.	குப்பார் மகி	(kuppa:r magi)
24.	கெர்கிர் மகி	(kergir magi)
25.	கல்கேர் மகி	(kalke:r ,magi)
26.	கும்பால் மகி	(kumba;l magi)
27.	கூகேர் மகி	(ku:ge:r magi)
28.	மாவோள் மகி	(ma:vo:ḷ magi)

தரவாட்டுக்காரர்களகோடு (பங்காளிகளோடு) திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை என்றும் வேறு தரவாட்டைச் சேர்ந்தவர்களோடுதான் திருமணத் தொடர்பு கொள்வதாகவும் இந்த ஆய்வுக்கான களப்பணியின்போது அறிந்து கொள்ளமுடிந்தது. இங்கு ஒரு தரவாடு என்பதை மேற்கூறிய ஒரு பெரிய குலத்தோடு ஒப்பிடலாம். எனவே நீலகிரி மாவட்டத்தில் வாழும் பெட்டக் குறும்பர்கள் ஆறு தரவாடுகளைச் சேர்ந்தவர்களெனக் குறிப்பிடலாம். மேலும் ஒரு பாடியில் வாழ்பவர்கள் சில குறிப்பிட்ட இடங்களில் தான் பெண் எடுப்பதும் கொடுப்பதும் வைத்துக் கொள்கிறார்கள். இத்தகைய பாகுபாடுகள் தரவாட்டு அடிப்படையில் ஏற்பட்டவைகளாகவும் இருக்கலாம்.

திருமண முறை

பெட்டக்குறும்பர்கள் தாயின் சகோதரனின் மகள் மற்றும் தகப்பனின் சகோதரியின் மகள் ஆகியோரைத் திருமணம் செய்து கொள்கின்றனர். இத்தகைய திருமணத்துக்கு முதலிடம் கொடுக்கின்றனர். இவர்களின் திருமணமுறை மிகவும் எளிமையானதாகக் காணப்படுகிறது.

பெற்றோர் மற்றும் தாய்மாமன் ஆகியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. திருமணம் நிச்சயிக்கும்போது சுமார் 100 அல்லது 200 ரூபாய் ஆண் வீட்டார் பெண் வீட்டாருக்குக் கொடுக்க வேண்டும். ஏனைய திருமணச் செலவுகளில் பெண்வீட்டுச் செலவுகளைப் பெண் வீட்டாரும் ஆண்வீட்டுச் செலவுகளை ஆண்வீட்டாரும் சந்திக்கின்றனர். மணப்பெண்ணுக்கான புதிய ஆடைகளை எடுத்துச் செல்வதும் மணமகனை மணமகள் வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் மணமகனின் தாயாகும். மணமகளுக்குத் தாலிகட்டுவது மணமகனின் தாய் மாமனின் மனைவியாகும். பெட்டக்குறும்பர்களிடையே தாய்மாமனின் மகளைத் திருமணம் செய்துகொள்ளும் முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் பெரும்பாலும் மணமகளுக்குத் தாலி கட்டுவது அவளுடைய தாயாக அமைகிறது. பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாயின் திருமணத்துக்குப்பின் மணமக்கள் மணமகளின் வீட்டிற்கு சென்றுவருவதுண்டு. ஆனால் விருப்பத்திருமணம் செய்துகொண்டால் திருமணங்களுக்குப் பின் மணமக்கள் மணமகளின் வீட்டிற்குச் செல்வது மிகவும் அரிது.

தற்போது பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டத் திருமணங்கள் நடைபெறுவது மிகவும் அரிதாகக் காணப்படுகிறது. காரணம் பெண்கள் பருவமடைந்து ஒருசில ஆண்டுகளுக்குள் ஒரு ஆண்மகனோடு சென்று கணவனும் மனைவியுமாக வாழ்க்கை நடத்துகின்றனர். வேறு சாதி மதத்தவரோடோ அல்லது வேறு பழங்குடியினரோடோ இவ்வாறு செல்வதில்லை. சொந்தத் தரவாட்டைச் சேர்ந்தவர்களோடும் செல்வதில்லை.

பெரும்பாலும் தாய்மாமனின் மகன் அல்லது தகப்பனின் சகோதரியின் மகன் ஆகியோருடன்தான் செல்வது வழக்கம்.

வேறொருவிதமான திருமணமுறையும் பெட்டக் குறும்பர்களிடையே காணப்படுகிறது. அதாவது ஒரு ஆணும் பெண்ணும் கணவனும் மனைவியுமாக வாழ விரும்பினால் இவர்கள் மறைவாக சந்திக்க முயல்வார்கள். இது பெரியோர்களுக்குத் தெரியவந்தால் பெண்ணின் தகப்பன் இக்காரியத்தைப் பஞ்சாயத்தாரிடம் எடுத்துச் செல்வார். பஞ்சாயத்தார் இதை விசாரித்து அப்பெண்ணை மனைவியாக எற்றுக்கொண்டு அவளைப் பாதுகாக்க விருப்பமா என்று ஆண்மகனிடம் கேட்பார்கள். அவன் விரும்பினால் பஞ்சாயத்தார் முன்னிலையில் அவனிடம் பெண்ணுக்குத் தாலி கட்டுமாறு கூறுவார்கள். அன்று முதல் அவர்கள் கணவனும் மனைவியுமாக வாழ்க்கையைத் தொடருவார்கள்.

திருமணத்தின்போது மட்டுமே தாலிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். அதாவது திருமணமான பெண்கள் எப்போது தாலி அணிந்திருக்க வேண்டுமென்று கட்டாயமல்ல. பொதுவாகத் திருமணத்துக்குப் பிறகு தாலியைக்கழற்றி வைத்துவிடுவது வழக்கம்.

பெட்டக்குறும்பர்களிடையே திருமணமுறையில் பெரும் மாறுதல்கள் ஏற்படுவதைக் காணமுடிகிறது. இரண்டாவது கூறப்பட்ட திருமண முறையே தற்போது பெரும்பாலும் நடைமுறையில் காணப்படுகிறது. இத்தகைய திருமணத்தின்போது தாலி கட்டுவதில்லை. எந்தவிதமான திருமணச் சடங்குகளும் நடைபெறுவதில்லை. மூன்றாவது கூறப்பட்ட திருமண முறையின்படி மணமகன் தாலிகட்டுகிறார். முதலில் கூறப்பட்ட திருமணத்தின்போது தாய் மாமனின் மனைவி தாலி கட்டுகிறாள். பெட்டக் குறும்ப சமுதாயம் திருமணமுறையில் இத்தகைய மாறுதல்களை அனுமதித்தாலும் வேறு பழங்குடி மக்களோடோ அல்லது வேறு சாதி மதத்தினரோடோ திருமண உறவு கொள்வதை வன்மையாகக் கண்டிக்கிறது. அதாவது ஒரு ஆண் அல்லது பெண் வேறு சாதி அல்லது பழங்குடியினரோடு திருமண உறவு

கொண்டால் அவர்களைத் தங்கள் சமுதாயத்திலிருந்து வெளியே தள்ளிவிடுவார்கள். அவர்கள் தங்கள் பாடியில் வாழவும் அனுமதிக்கப்படமாட்டார்கள். அவ்வாறு திருமணம் செய்துகொண்டவர்களின் குடும்பத்தில் நடைபெறும் எந்தவிதச் சடங்குகளிலும் ஏனைய பெட்டக்குறும்பர்கள் கலந்துகொள்வதில்லை.

பெட்டக்குறும்பர்களிடையே விவாகரத்து அனுமதிக்கப்படுகிறது. விவாகரத்து பஞ்சாயத்தார் அல்லது நாட்டுக்காரர் முன்னிலையில் நடைபெறும். நாட்டுக்காரர் என்பது தாய்மாமன், சகோதரியின் கணவன் ஆகியோர் ஆகும். விவாகரத்தை விரும்புகிறவர் (ஆண் அல்லது பெண்) நாட்டுக்காரரின் தீர்மானத்தின்படி ஒரு தொகை ரூபாய் பாதிக்கப்படுபவருக்குக் கொடுக்கவேண்டும்.

மறுமணம் மற்றும் விதவைத் திருமணமும் பெட்டக்குறும்பர்களிடையே காணப்படுகிறது. இத்தகைய திருமணத்தின்போது வேறு சாதி மதத்தினரோடு திருமணம் செய்துகொள்வதை பெட்டக்குறும்ப சமுதாயம் புறக்கணிக்கிறது. பொதுவாகக் கணவன் இறந்துவிட்டால் பெண் தன் தகப்பனின் வீட்டிற்குச் சென்று விடுவது வழக்கம். பின்னர் மறுமணம் செய்துகொடுப்பார்கள். இதேப்போன்று திருமணத்துக்குமுன் ஒரு பெண்ணின் தாயும் தகப்பனும் இறந்துவிட்டால் அப்பெண் தன் தாய்மாமன் வீட்டுக்குச் சென்றுவிடுவதும் இவர்களிடையே காணப்படுகிறது.

திருமணத்துக்குப்பிறகு ஒரு பெண்ணின் அல்லது ஆணின் பெயரை மாற்றும் பழக்கம் பெட்டக்குறும்பர்களிடையே இல்லை. ஆனால் இவர்களிடையே காணப்படும் பெயர்களைப் பார்க்கும்போது சற்று வினோதமாக உள்ளது. இவர்களிடையே மொத்தம் 16 பெயர்களே காணப்படுகின்றன. அவற்றில் எட்டு ஆண்களுக்குச் சூட்டும் பெயர்கள், எட்டு பெண்களுக்குச் சூட்டும் பெயர்கள். இதைத்தவிர வேறு எந்தப் பெயர்களையும் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுவதில்லை. இதனால் ஒவ்வொரு குடும்பத்தையும் எடுத்துக்கொண்டால்

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரே பெயரை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள் (செயபால், 1978).

சொத்துரிமையைப் பொறுத்தமட்டில் பெட்டக்குறும்பர்கள் தந்தைவழி முறையையே பின்பற்றுகின்றனர். பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாலும் விவசாயம் போன்ற தொழில்களில் ஆர்வமின்மையாலும் பெட்டக்குறும்பர்கள் பெரும்பாலும் நிலவுடைமையற்றவர்களாகவே காணப் படுகின்றனர். சிறிதளவு சொத்துடையவர்களாகக் காணப்பட்டாலும் பெண்களுக்கு சொத்தில் பங்கு அளிப்பதில்லை.

குடும்ப அமைப்பு

பெட்டக்குறும்பர்களின் குடும்ப அமைப்பைப் பார்க்கும்போது தந்தைவழிக் குடும்பமாகவே காணப்படுகிறது. இவர்கள் தனிக்குடும்ப முறையையே பின்பற்றுகின்றனர். ஒரு ஆண்மகன் திருமணமாகியதும் தனி வீடுகட்டி வாழ வசதியுடையவராக இருந்தால் தனி வீட்டிற்குச் செல்வார். இல்லாவிடில் அதே வீட்டில் தனி சமையல் ஆரம்பிப்பார். கூடலூர் தாலுகாவில் பள்ளியற என்ற இடத்தில் காணப்படும் பாடியில் வாழும் பெட்டக்குறும்பர்களின் குடும்ப அமைப்பைக் கீழே காணலாம்.

கணவனும் மனைவியும் வாழும் குடும்பம்:



கணவனும் மனைவியும் இரண்டு ஆண் பிள்ளைகளும் வாழும் குடும்பம்



கணவனும் மனைவியும் மூன்று ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் வாழும் குடும்பம்:



கணவனும் மனைவியும் ஒரு பெண் குழந்தையும் வாழும் குடும்பம்:



கணவனும் மனைவியும் ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் வாழும் குடும்பம்



மேலே கொடுக்கப்பட்டுள்ள குடும்ப அமைப்புப் படங்களைப் பார்க்கும்போது பெட்டக்குறும்பர்களிடையே முற்றிலுமாக தனிக்குடும்ப அமைப்பே காணப்படுகிறது.

பெட்டக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

முர்டாக்கின் கசின்முறையமைப்பின் அடிப்படையில் பார்க்கும்போது பெட்டக்குறும்பர்கள் திராவிட உறவுமுறைக்கு ஒத்த ஈறாக்கியஸ் கசின்முறையமைப்பை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது ஒருவரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரனின் பிள்ளைகள் ஆகியோர் ஒரு உறவுமுறைப் பிரிவினராகச்

சேர்க்கப்படுகின்றனர். ஒருவரின் தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள், தாயின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் அவரது சகோதர சகோதரிகள் ஆகியோர் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு வேறுபட்ட ஒரு பிரிவில் வைக்கப்படுகின்றனர். மேலும் திராவிட உறவுமுறை அமைப்பில் காணப்படுவது போன்ற பால் மற்றும் மூத்த இளைய பாகுபாடும் பெட்டக் குறும்பர்களின் உறவுமுறைச் சொற்களில் காணப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் 11ன் மூலம் பெட்டக்குறும்பர்களிடையே காணப்படும் கசின் முறையமைப்பை விளக்கலாம்:



படம் 11

aṇ	=	BrE, FaBrSoE, MoSiSoE
koṟun	=	BrY, FaBrSoY, MoSiSoY
akan	=	SiE, FaBrDaE, MoSiDaE
Kura:lo	=	SiY, FaBrDaY, MoSiDaY
maccan dagude	=	FaSiSoE, MoBrSoE
maccan ḳiride	=	FaSiSoY. MoBrSoY
eṯṯige	=	MoBrDaE
kuḷḷi	=	MoBrDaY
eṯṯi ḏakuḏe	=	FaSiDaE
eṯṯi kiriḏe	=	FaSiDaY

படம் 11-ல் **B, B1** என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் ஒரு உறவுமுறைப் பிரிவினர்களாக வகைப்படுத்தப் பட்டிருந்தாலும் தாயின் சகோதரனின் மகளையும் தகப்பனின் சகோதரியின் மகளையும் வெவ்வேறு சொற்களால் வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். இவ்வேறுபாடு ஈறாக்கியஸ் கசின் முறையமைப்பை உடைய தேனுக்குறும்பர்களிடையேயும் ஹவாயன் கசின் முறையமைப்பை உடைய முள்ளுக் குறும்பர்களிடையேயும் காணப்படவில்லை.

பெட்டக்குறும்பர்களின் திருமணச் சடங்குகள் தென்னிந்தியத் திருமணச் சடங்குகளிலிருந்து சற்று வேறுபட்டு மிகவும் எளிமையான முறையில் காணப்பட்டாலும், திருமண முறையைப் பார்க்கும்போது தென்னிந்தியத் திருமண முறைக்கு ஒத்தாகவே காணப்படுகிறது. இதேப்போன்று உறவுமுறைச் சொற்களில் சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவை குறிப்பிடும் உறவினரைப் பார்க்கும்போது தென்னிந்திய உறவுமுறை அமைப்புக்கு ஒத்ததாகவே காணப்படுகிறது. சான்றாகத் தாயின் சகோதரனின் மனைவி, மனைவியின் தாய், கணவனின் தாய் ஆகியோரை ஒரே சொல்லால் குறிப்பிடுகின்றனர். இங்கு மண உறவினர்களான கணவனின் தாய் அல்லது மனைவியின் தாய் ஆகியோரை வேறுபடுத்திக் குறிப்பிடும் பழக்கம் இவர்களிடையே இல்லை. சில உறவினர்களைக் குறிப்பிடும்போது மூத்த இளைய வேறுபாடு வெவ்வேறு சொற்களால் குறிப்பிடப்படுகிறது. சான்றாக தகப்பனின் மூத்த சகோதரன், தாயின் மூத்த சகோதரியின் கணவன் ஆகியோரை 'தபம்மன்' என்றும் தாயின் இளைய சகோதரியின் கணவன், தகப்பனின் இளைய சகோதரன் ஆகியோரை 'கெரம்மன்' என்றும் குறிப்பிடுகின்றனர். இதேப்போன்று மூத்த சகோதரியை 'அகன்' என்றும் இளைய சகோதரியை 'குராலொ' என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் சில உறவுனர்களைக் குறிப்பிடும்போது மூத்த இளைய வேறுபாட்டைக் குறிப்பிடுவதற்கு முறையே 'தகுதெ' 'கிரிதெ' என்ற பெயரடைகளைப் பயன்படுத்துகின்றனர். சான்றாகத் தாயின் சகோதரனின் மகன் வயதில் மூத்ததாக இருந்தால் 'மச்சன் தகுதெ' என்றும் தாயின் சகோதரனின் மகன் வயதில் இளையதாக இருந்தால் 'மச்சன் கிரிதெ' என்றும்

குறிப்பிடுகின்றனர். மகனின் மனைவியின் தகப்பன் மகளின் கணவனின் தகப்பன் ஆகியோரை 'மச்சன்' என்றே குறிப்பிடுகின்றனர்.

தாயை 'அப்பெ' என்றும் தகப்பனை 'அம்மன்' என்றும் குறிப்பிடுகின்றனர் துளு உறவுமுறையிலும் தாயை அப்பெ என்றே குறிப்பிடுகின்றனர். ஆனால் தகப்பனை அம்மன் என்று குறிப்பிடுவது ஏனைய தென்திராவிட மொழிகளில் காணப்படாத ஒரு தனிக்கூறாகக் காணப்படுகிறது. தகப்பனின் மூத்த சகோதரனை 'தபம்மன்' என்றும் தகப்பனின் இளைய சகோதரனை 'கெரம்மன்' என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் மனைவியின் தாயின் மூத்த, இளைய சகோதரர்களை அம்மன்கிரிதெ என்று குறிப்பிடுகின்றனர். பெட்டக்குறும்பர்கள் பெரும்பாலும் தகப்பனின் சகோதரியின் மகள், தாயின் சகோதரனின் மகள் ஆகியோரையே திருமணம் செய்துகொள்ளுகின்றனர். ஆயினும் தாயின் சகோதரனின் மகளையும் தகப்பனின் சகோதரியின் மகளையும் வெவ்வேறு சொற்களால் குறிப்பிடுகின்றனர்.

முடிவுரை

முள்ளுக்குறும்பர், தேனுக்குறும்பர் மற்றும் பெட்டக்குறும்பர் ஆகிய பிரிவினரின் உறவுமுறை அமைப்பைப் பார்க்கும்போது முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பில் சில தனித்தன்மைகள் இருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் ஹவாயன் கசின் முறையமைப்பு ஏனைய இரு பிரிவினர்களிடையே காணப்படும் திராவிட உறவுமுறை அமைப்பிலிருந்து வேறுபடுகிறது. முகர்ஜி (1981) திராவிட மொழி பேசும் பழங்குடியினர்களில் பீகார் மாநிலத்தில் வாழும் ஒரயன் என்ற பிரிவினரிடம் மட்டுமே ஹவாயன் கசின்முறையமைப்பு காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஹவாயன் கசின் முறையமைப்புடைய பழங்குடியினர் அனைவரும் தந்தைவழி முறையை உடையவர்களெனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் முள்ளுக்குறும்பர்களிடையே தாய்வழி குல உரிமை தந்தைவழி சொத்துரிமை மற்றும் தந்தையின் இருப்பிடக் குடித்தன முறையும் காணப்படுகிறது. ஏனைய இரு பிரிவைச் சேர்ந்த குறும்பர்களிடையேயும் முற்றிலுமாக தந்தைவழி முறையே காணப்படுகிறது. முள்ளுக் குறும்பர்களிடையே காணப்படும் தந்தைவழி சொத்துரிமையானது பிற்காலத்தில் தோன்றியதெனவும் கருத சான்றுகள் உள்ளன (பக்கம், 57-60). தாய் வழிக்குல உரிமை காணப்பட்டபோதிலும் பெண்களுக்கு சொத்துரிமை இல்லை. மேலும் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் உறவுமுறை அமைப்பானது அய்ராவதி கர்வே (1953) 'உறவுமுறை அமைப்பு பெரும்பாலும் மொழி அமைப்பைப்

பின்பற்றிக் காணப்படுகிறது' என்று கூறியுள்ள கருத்துக்கு மாறாகக் காணப்படுகிறது.

திராவிட உறவுமுறை அமைப்பில் தகப்பனின் சகோதரியின் மகள், தாயின் சகோதரனின் மகள் மற்றும் சகோதரியின் மகள் ஆகியோரைத் திருமணம் செய்து கொள்ளும் முறைகளினால் இரத்த உறவு மற்றும் மண உறவுப்பாகுபாட்டில் ஏற்படும் குழப்பங்கள் முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறை அமைப்பில் ஏற்படுவதில்லை.

முள்ளுக்குறும்பர் மற்றும் தேனுக்குறும்பர்களின் சமூக அமைப்புகளோடு பெட்டக்குறும்பர்களின் சமூக அமைப்பை ஒப்பிட்டுப்பார்க்கும்போது பெட்டக்குறும்பர்களின் சமூக அமைப்பு மிகவும் எளிமையாகவே காணப்படுகிறது. பெட்டக் குறும்பர்களிடையே பஞ்சாயத்தார் அல்லது நாட்டார் என்பது ஒருவரின் தாய்மாமன் மற்றும் மூத்த சகோதரியின் கணவன் ஆகியோராவர். இங்கு கிராம அல்லது பார்டி அளவிலான நாட்டாமை இல்லாமல் குடும்ப அளவிலான நாட்டாமையே காணப்படுகிறது.

குல அமைப்பைப் பொறுத்தமட்டில் முள்ளுக் குறும்பர்களிடையே தெளிவாக வரையறுக்கப்பட்ட நான்கு குலங்கள் காணப்படுகின்றன. ஏனைய இரு பிரிவினர்களிடையே தரவாட்டுக்காரர்கள் என்ற பாகுபாடு காணப்படுகிறது. முள்ளுக்குறும்பர்களின் முக்கிய வாழ்க்கைச் சடங்குகளில் உறவினருக்குக் குல அடிப்படையில் முக்கியத்துவம் அளிப்பதைக் காணமுடிகிறது.

முள்ளுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகளைப் பார்க்கும்போது விரிவான முறையில் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட ஒழுங்குகளோடு காணப்படுகிறது. கிராமிய நடனங்கள் மற்றும் அவர்களின் பாரம்பரிய தொழிலாகிய வேட்டை ஆகியவையும் திருமணச் சடங்குகளில் இடம்பெறுகின்றன. உறவினர்களின் பங்கேற்பும் அதிகமாகக் காணப்படுகிறது. தேனுக்குறும்பர்களின் திருமணச் சடங்கிலும்

கிராமிய நடனங்கள் இடம்பெறுகின்றன. ஆனால் ஏனைய சடங்குகள் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுவது போன்று விரிவாகக் காணப்படவில்லை. பெட்டக் குறும்பர்களின் திருமணச் சடங்கைப் பார்க்கும்போது மிகவும் எளிமையான முறையில் காணப்படுகிறது.

முள்ளுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகள் ஏனைய பிரிவினரின் திருமணச் சடங்குகளைவிட விரிவாகக் காணப்படுவதற்குக் காரணம் முள்ளுக்குறும்பர்களின் சமூகப் பொருளாதார நிலையாகவும் இருக்கலாம். இவர்கள் ஏனைய பிரிவினரைவிட சமூகப் பொருளாதார நிலையில் சற்று உயர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். இவர்களின் பாரம்பரியத் தொழில் வேட்டையாடுவதாக இருப்பதால் வேட்டைப் பொருட்களின் மூலம் விருந்தினரை உபசரிக்கும் பழக்கம் இவர்களிடையே ஏற்பட்டிருக்கலாம். எனவே திருமண நாட்களில் உறவினர்களோடு வேட்டைக்குச் செல்லும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். ஏனைய பிரிவினரைப்போல் அல்லாமல் வேட்டை மற்றும் விவசாயத்திலும் ஈடுபடுவதால் விருந்தினரை உபசரிப்பதற்கான வசதி உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

முள்ளுக்குறும்பர்களின் திருமணச் சடங்குகளானது அவர்கள் வாழும் பகுதியின் தன்மை, பாரம்பரிய தொழில் மற்றும் அவர்களின் திருமண முறை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. மேலும் திருமணமாகி புதிதாகத் தங்கள் பாடிக்கு வரும் மணமக்களைத் தங்கள் பாரம்பரியத் தொழில்களின்மூலம் தங்களோடு ஒன்றுபடச் செய்வதையும் காணமுடிகிறது.

முள்ளுக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகிய இரு பிரிவினரிடையேயும் திருமணத்தின்போது தாய்மாமன் பெண்ணுக்குத் தாலிகட்டும் பழக்கம் காணப்படுகிறது. பெட்டக்குறும்பர்களிடையே காணப்படும் மூன்றுவிதமான திருமணங்களில் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் மணமகளுக்குத் தாலிகட்டுவது மணமகனின் தாய்மாமனின் மனைவியாகும். பெரும்பாலும் பெண்ணின் தாயாக

அமைகிறது. இவர்களிடையே காணப்படும் இரண்டுவித விருப்பத் திருமணங்களில் ஒன்றில் தாலிகட்டும் பழக்கம் இல்லை. இன்னொருவித திருமணத்தில் பஞ்சாயத்தார் முன்னிலையில் மணமகன் மணமகளுக்குத் தாலிகட்டுகிறார். தாய்மாமனின் மகளைத் திருமணம் செய்துகொள்ளும் திருமண முறையை உடைய தேனுக்குறும்பர்களிடையேயும் அத்தகைய திருமண முறையைத் தடைசெய்யும் முள்ளுக்குறும்பர்களிடையேயும் தாய்மாமனே பெண்ணுக்குத் தாலி கட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால், முள்ளுக்குறும்பர்களிடையே தாலி மற்றும் நகைகளை அகற்றுவதில்லை. தேனுக்குறும்பர்களிடையே கணவன் இறந்துவிட்டால் தாலி மற்றும் நகைகளை அகற்றிவிட்டு சுமார் பத்து நாட்களுக்குப் பின் திரும்பவும் அணிந்துகொள்வார்கள். பெட்டக்குறும்பர்களிடையே பொதுவாகத் திருமணத்துக்குப்பின் தாலியைக் கழற்றி வைத்துவிடுகின்றனர். முள்ளுக்குறும்பர்களிடையே ஒரு பெண்ணின் குலத்தைச் சேர்ந்தவர் அப்பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது என்ற முறை காணப்படுகிறது. ஆனால் ஒரு பெண்ணின் திருமணத்தின் போது அவளுடைய குலத்தைச் சேர்ந்வர்தான் தாலிகட்ட வேண்டும் என்ற முறை காணப்படுகிறது. இவ்வாறு குறும்பர்களிடையே காணப்படும் தாலியின் தன்மையை வேறு சாதி மதத்தினரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு தனித்தன்மை உடையதாகக் காணப்படுகிறது.

திருமணத்தின்போது மணமகனின் சகோதரிக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படுவது போன்று தேனுக்குறும்பர் மற்றும் பெட்டக்குறும்பர்களிடையே காணப்படவில்லை. தேனுக்குறும்பர்களிடையே எல்லா பொறுப்புகளையும் தாய்மாமனே ஏற்று நடத்துகிறார். பெட்டக்குறும்பர்களிடையே மணமகனின் தாய் மற்றும் தாய் மாமனின் மனைவி ஆகியோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு தாய்மாமன் தாய்மாமனின் மனைவி ஆகியோருக்கு

அளிக்கப்படும் முக்கியத்துவம் மரணச்சடங்குகளில் அளிக்கப்படுவதில்லை.

விவாகரத்து மறுமணம் ஆகியவை மூன்று பிரிவினரிடையேயும் காணப்படுகிறது. தேனுக் குறும்பர்களிடையே ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்துகொண்டு வாழ்க்கை நடத்தும் பழக்கமும் காணப்படுகிறது. ஆனால் முள்ளுக்குறும்பர்கள் மற்றும் பெட்டக்குறும்பர்கள் பெரும்பாலும் மனைவி இறந்துவிட்டால் அல்லது விட்டுச் சென்றால் மட்டுமே மறுமணம் செய்துகொள்வது வழக்கம்.

ஒரு குடும்பத்தில் மூத்த மகனுக்குத் திருமணமானவுடன் பெற்றோர் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டிற்குச் சென்று விடுவது தேனுக்குறும்பர்களிடையே காணப்படும் ஒரு தனித்தன்மையாகும்.

தாய்மாமனின் மகளை மணந்துகொள்ளுதல் மற்றும் தகப்பனின் சகோதரியின் மகளை மணந்துகொள்ளுதல் ஆகிய திருமண முறைகள் தேனுக்குறும்பர்களிடையே காணப்பட்டாலும் இவர்கள் மனைவியின் பெற்றோர் மற்றும் கணவனின் பெற்றோர் ஆகியோரை வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு வேறுபடுத்துதல் முள்ளுக்குறும்பர்களிடையேயும் காணப்படுகிறது. மேலும் தகப்பனின் சகோதரியின் மகள் தாயின் சகோதரனின் மகள் ஆகியோர் ஒரே உறவுமுறைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவர்களை வெவ்வேறு சொற்களால் குறிப்பிடுவது இவர்களிடையே காணப்படும் தனித்தன்மையாகும்.

தாய்மாமனுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் தேனுக்குறும்பர்களின் உறவு முறைச் சொற்களிலும் பிரதி பலிப்பதைக் காணமுடிகிறது. உறவுமுறைச் சொற்களைப் பார்க்கும்போது தேனுக்குறும்பர்களிடையே விளக்கச் சொற்கள் ஏனைய பிரிவினரைவிட அதிகமாக இருப்பதைக் காணமுடிகிறது.

மூன்று பிரிவைச் சேர்ந்த குறும்பர்களும் மொழி உறவுமுறை, தோற்றம் ஆகியவற்றில் வேறுபடுவது போன்று உறவுமுறைச் சொற்களிலும் வேறுபடுகின்றனர். சான்றாக தாயைக் குறிப்பிடுவதற்கு முள்ளுக்குறும்பர்கள் 'அம்மெ' என்ற சொல்லையும் தேனுக்குறும்பர்கள் 'ஒவ்வெ' என்ற சொல்லையும் பெட்டக் குறும்பர்கள் 'அப்பெ' என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றனர். தகப்பனைக் குறிப்பிடும்போது முள்ளுக்குறும்பர்களும் தேனுக்குறு''ம்பர்களும் 'அப்பன்' என்ற சொல்லையும் பெட்டக்குறும்பர்கள் 'அம்மன்' என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றனர். இளைய சகோதரியைக் குறிப்பிடும்போது முள்ளுக்குறும்பர்கள் 'சும்பி' என்ற சொல்லையும் தேனுக்குறும்பர் 'தெங்கி' என்ற சொல்லையும் பெட்டக்குறும்பர் 'குராலொ' என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு ஒருவரின் முதல்நிலை உறவினர்களைக் குறிப்பிடும் சொற்களிலும் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன.

குறும்பர்களின் சமுதாயத்திலும் உறவுமுறை அமைப்பிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுவருவதைக் காணமுடிகிறது. குறிப்பாக முள்ளுக்குறும்பர்களிடையே புதுமையாக்கத்தை விரும்புகிறவர்களுக்கும் அதை விரும்பாதவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிளவு இவர்களின் சமுதாய வடிவமைப்பில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது.

குறும்பர்களின் திருமண முறையில் ஏற்பட்டு வரும் மாறுதல்களைப் பார்க்கும்போது மூன்று பிரிவினரிடையேயும் விருப்பத்திருமணங்கள் கூடுதலாக நடைபெறுவதைக் காணமுடிகிறது. விருப்பத்திருமணங்கள் முள்ளுக் குறும்பர்களிடையே மிகக் குறைவாகவும் தேனுக் குறும்பர்களிடையே சற்று அதிகமாகவும் பெட்டக் குறும்பர்களிடையே மிக அதிகமாகவும் காணப்படுகின்றன.

தேனுக்குறும்பர் மற்றும் பெட்டக்குறும்பர்களிடையே அதே சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு ஆணும் பெண்ணும் விரும்பித் திருமணம் செய்துகொள்ளுகின்றனர்.

பெட்டக்குறும்பர்களிடையே பெரும்பாலும் தாய்மாமனின் மகள் அல்லது தகப்பனின் சகோதரியின் மகள் ஆகியோரையே விரும்பித் திருமணம் செய்துகொள்கின்றனர். ஆனால் முள்ளுக்குறும்பப் பெண்கள் பிற சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களை விரும்பித் திருமணம் செய்துகொள்வதைக் காணமுடிகிறது. இவ்வாறு முள்ளுக்குறும்பப் பெண்கள் பிற சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களை விரும்பித் திருமணம் செய்துகொள்வதற்குக் காரணம் முள்ளுக்குறும்பர்களிடையே காணப்படும் திருமணமுறை மற்றும் திட்டவட்டமான விதிமுறைகளுமே காரணமெனவும் கூறலாம். அதாவது மணமகன் வீட்டார்தான் பெண்தேடிச் செல்லவேண்டும். தாய்மாமனின் மகள்/மகன் மற்றும் தகப்பனின் சகோதரியின் மகள்/மகன் ஆகியோரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது, உறவினர்களிடையே திருமணத் தொடர்பு கொள்ளக் கூடாது. என்ற நிபந்தனைகளை மீறி ஒரு ஆணும் பெண்ணும் விருப்பத்திருமணம் செய்து கொள்ள முன்வருவதில்லை. இத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒரு பெண் அதே சமுதாயத்தில் ஒரு ஆண்மகனைத் தானாக விரும்பித் திருமணம் செய்து கொள்ள இயலாத நிலை காணப்படுகிறது. ஆனால் ஆண்கள் பெரும்பாலும் அவர்களின் சமுதாய நிபந்தனைகளுக்குட்பட்டுத் தங்கள் வாழ்க்கைத் துணையை எளிதில் தேடிக் கொள்ளுகின்றனர். இந்நிலையில் பெண்கள் பிற சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களை விரும்பித் திருமணம் செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இணைப்பு - 1

முள்ளுக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

அம்மெ (amme)	அம்மா
முத்தப்பன் (muttappan)	தாயின் தகப்பன், தகப்பனின் தகப்பன், தகப்பனின் தகப்பனின் சகோதரன், கணவனின் தகப்பனின் தகப்பன், மனைவியின் தகப்பனின் தகப்பன்.
முத்தியம்மா (muttiyamma:)	தாயின் தாய், தகப்பனின் தாய், தகப்பனின் தகப்பனின் சகோதரி, கணவரின் தகப்பனின் தாய், மனைவியின் தாயின் தாய், மனைவியின் தகப்பனின் தாய்
மாமென் (ma:men)	தாயின் சகோதரன், தகப்பனின் சகோதரியின் கணவன், சகோதரனின் மனைவியின் தகப்பன், சகோதரியின் கணவனின் தகப்பன்.
மாமி (ma:mi)	தாயின் சகோதரனின் மனைவி, தகப்பனின் சகோதரி, சகோதரனின் மனைவியின் தாய், சகோதரியின் கணவனின் தாய்.

பேமா (Pe:ma:)	தாயின் மூத்த சகோதரி, தகப்பனின் மூத்த சகோதரனின் மனைவி
ஏமா (e:ma:)	தாயின் இளைய சகோதரி, தகப்பனின் இளைய சகோதரனின் மனைவி
பேப்பென் (pe:ppen)	தாயின் மூத்த சகோதரியின் கணவன், தகப்பனின் மூத்த சகோதரன்.
ஏப்பென் (e:ppen)	தாயின் இளைய சகோதரியின் கணவன், தகப்பனின் இளைய சகோதரன்
ஏப்பி (e:ppi)	தகப்பனின் இளைய சகோதரன் (தன்னை விட வயதில் குறைவாக இருந்தால்)
அப்பென் (appen)	தகப்பன்
மோப்பம்மா (mo:ppamma:)	தகப்பனின் தகப்பனின் தகப்பனின் மனைவி
மோப்பப்பன் (mo:ppappan)	தகப்பனின் தகப்பனின் தகப்பன்
தட்டம்மா (tattamma:)	தகப்பனின் தகப்பனின் சகோதரனின் மனைவி
தட்டப்பன் (tattappan)	தகப்பனின் தகப்பனின் சகோதரன்
அண்ணன் (annen)	மூத்த சகோதரன், தாயின் சகோதரனின் மகன்- மூத்தவர், தாயின் சகோதரியின் மகன்- மூத்தவர், தகப்பனின் சகோதரியின் மகன் மூத்தவர், தகப்பனின் சகோதரனின் மகன்- மூத்தவர், மனைவியின் மூத்த சகோதரியின் கணவன்.

சும்பென் / எனியன் (cumpen/eniyen)	இளைய சகோதரன், தாயின் சகோதரனின் மகன்-இளையவர், தாயின் சகோதரியின் மகன்-இளையவர், தகப்பனின் சகோதரியின் மகன்-இளையவர், தகப்பனின் சகோதரனின் மகன்-இளையவர்.
அற்ற (arra)	மூத்த சகோதரி, தாயின் சகோதரனின் மகள்-மூத்த, தகப்பனின் சகோதரியின் மகள்-மூத்த, தாயின் சகோதரியின், மகள்-மூத்த, தகப்பனின் சகோதரனின் மகள்-மூத்த.
சும்பி/எனியத்தி (cumpi/eniyatti)	இளைய சகோதரி, தாயின் சகோதரனின் மகள்-இளைய, தாயின் சகோதரியின் மகள்- இளைய, தகப்பனின் சகோதரியின் மகள் இளைய, தகப்பனின் சகோதரியின் மகள் - இளைய, கணவனின் சகோதரனின் மனைவி-இளைய.
பெரியோளு/ ஏட்டத்தியம்மா (periyo:lu/ e:ttattiyamma:)	மூத்த சகோதரனின் மனைவி, மூத்த சகோதரனின் மனைவியின் சகோதரி மூத்த, இளைய சகோதரனனின் மனைவியின் சகோதரி-மூத்த, மனைவியின்-சகோதரனின் மனைவி-மூத்த, கணவனின் சகோதரனின் மனைவி மூத்த.
அளியன் (aliyen)	சகோதரனனின் மனைவியின் சகோதரன், சகோதரியின் கணவன், சகோதரியின் கணவனின் சகோதரன், மனைவியின் சகோதரன், மகனின் மனைவியின் தகப்பன், மகளின் கணவனின் தகப்பன்.

செறியோளு (cer̲iyo:ḷu)	இளைய சகோதரனின் மனைவி, சகோதரனின் மனைவியின் சகோதரி-இளைய, மனைவியின் சகோதரனின் மனைவி-இளைய, மனைவியின் இளைய சகோதரி.
மெருமகன் (merumaken)	சகோதரியின் மகன், சகோதரியின் மகளின் கணவன், மகளின் கணவன், மகளின் கணவனின் சகோதரன்.
மெருமாளு (meruma:ḷu)	சகோதரியின் மகள், சகோதரியின் மகனின் மனைவி, மகனின் மனைவி, மகளின் கணவனின் சகோதரி.
குறுமாட்டி (kur̲uma:ṭṭi)	மனைவி
அம்மாயிமுத்தி (amma:yimut̲t̲i)	மனைவியின் தாய், மனைவியின் தகப்பனின் சகோதரி, கணவனின் தாய், கணவனின் தகப்பனின் சகோதரி.
அம்மமுத்தன் (ammemut̲t̲en)	மனைவியின் தகப்பன், மனைவியின் தாயின் சகோதரன், மனைவியின் தகப்பனின் சகோதரன், கணவனின் தாயின் சகோதரன், கணவனின் தகப்பன், கணவனின் தகப்பனின் சகோதரன்.
கார்னோரு/அண்ணன் (ka:rno:ru/aṇṇen)	மூத்த சகோதரன், மனைவியின் மூத்த சகோதரிதயின் கணவன்
அனந்தரன் (anant̲aren)	மனைவியின் இளைய சகோதரியின் கணவன்
குறுமன் (kur̲umen)	கணவன்

பெரியவன் (periyaven)	கணவனின் மூத்த சகோதரன், கணவனின் சகோதரியின் கணவன்-மூத்த.
செறியவன் (ceṟiyaven)	கணவனின் சகோதரன்-இளைய, கணவனின் சகோதரியின் கணவன்-இளைய.
நாத்தா (na:ṯṯa:)	கணவனின் சகோதரி
மகென் (maken)	மகன்
ஆங்களா (a:ṅkaḷa:)	ஒரு பெண்ணின் மகனின் மனைவியின் தகப்பன்
பெங்களா (peṅkaḷa:)	ஒரு ஆணின் மகனின் மனைவியின் தாய், மகளின் கணவனின் தாய்
பேரன் (pe:ren)	மகனின் மகன், மகளின் மகன்
பேரத்தி (pe:raṯṯi)	மகனின் மகள், மகளின் மகள்
மகளு (makaḷu)	மகள்

இணைப்பு - 2

தேனுக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

ஒவ்வெ (ovve)	தாய், கணவனின் தாய்
அச்சி (acci)	தாயின் தாய், தகப்பனின் தாய், தகப்பனின் தாயின் சகோதரி, கணவனின் தகப்பனின் தாய், தகப்பனின் தகப்பனின் மனைவி.
கெத்தென் (hettan)	தாயின் தகப்பன், தகப்பனின் தகப்பன், தகப்பனின் தகப்பனின் சகோதரன்.
மாவென்/மாவனென் (ma:van/ma:vanan)	தகப்பனனின் சகோதரியின் கணவன், சகோதரனின் மனைவியின் தகப்பன்.
அம்மோன் (ammo:n)	தாயின் சகோதரன்
அத்தெ (atte)	தாயின் சகோதரனின் மனைவி, சகோதரியின் கணவனின் தாய், சகோதரனின் மனைவியின் தாய், தகப்பனின் சகோதரி
பாவென்/பாவனென் (ba:ven/ba:vanan)	தாயின் சகோதரனின் மகன்-மூத்த, சகோதரனின் மனைவியின் சகோதரன்-மூத்த, மூத்த சகோதரியின்

	கணவன், தகப்பனின் சகோதரியின் மகன் - மூத்த, மனைவியின் சகோதரன் - மூத்த, கணவனின் மூத்த சகோதரன்
எத்திகெ (ettige)	தாயின் சகோதரனின் மகள்-மூத்த, தகப்பனின் சகோதரியின் மகள்-மூத்த, மூத்த சகோதரனின் மனைவி, மூத்த சகோதரனின் மனைவியின் சகோதரி-மூத்த, மனைவியின் சகோதரி-மூத்த, மனைவியின் சகோதரனின் மனைவி-மூத்த.
நாதினி (na:dini)	தாயின் சகோதரனின் மகள்-இளைய, தகப்பனின் சகோதரியின் மகள்-இளைய, மூத்த சகோதரனின் மனைவியின் சகோதரி இளைய, இளைய சகோதரனின் மனைவி, · சகோதரியின் மகனின் மனைவி, மனைவியின் சகோதரி-இளைய, மனைவியின் சகோதரனின் மனைவி-இளைய, கணவனின் சகோதரி-இளைய.
தொட்டொவ்வெ (doddovve)	தாயின் மூத்த சகோதரி, தகப்பனின் மூத்த சகோதரனின் மனைவி.
சிக்கொவ்வெ (cikkovve)	தாயின் இளைய சகோதரி, தகப்பனின் இளைய சகோதரனின் மனைவி
தொட்டப்பென் (doddappan)	தாயின் மூத்த சகோதரியின் கணவன், தகப்பனின் மூத்த சகோதரன்.
சிப்பென் (cippan)	தாயின் இளைய சகோதரியின் கணவன், தகப்பனின் இளைய சகோதரன்

அண்ணென் (aṇṇan)	மூத்த சகோதரன், தாயின் சகோதரியின் மகன்-மூத்த, தகப்பனின் சகோதரனின் மகன்-மூத்த, மனைவியின் மூத்த சகோதரியின் கணவன்.
தம்மென் (tamman)	இளைய சகோதரன், தாயின் சகோதரிதயின் மகன்-இளைய, தகப்பனின் சகோதரனின் மகன்-இளைய.
அக்கென் (akkan)	மூத்த சகோதரி, தாயின் சகோதரியின் மகள்-மூத்த, தகப்பனின் சகோதரனின் மகள்-மூத்த
தெங்கெ (teṅge)	இளைய சகோதரி, தாயின் சகோதரியின் மகள்-இளைய, தகப்பனின் சகோதரனின் மகள்-இளைய.
அப்பென் (appan)	தகப்பன்
மைதென் (maydan)	மனைவியின் இளைய சகோதரன், தகப்பனின் சகோதரியின் மகள்-இளைய, இளைய சகோதராரியின் கணவன், தாயின் சகோதரனின் மகன்-இளைய, சகோதரனின் மனைவியின் சகோதரன்-இளைய, கணவனின் இளைய சகோதரன்
எளென (eḷene)	சகோதரியின் மகன், மகளின் கணவன்
சொஜெ (soje)	சகோதரியின் மகள், மகனின் மனைவி
கெண்டுரு (heṇṭru)	மனைவி

அத்தெமுதுக்கி (attemudukkı)	மனைவியின் தாய்
மாமுதியன் (ma:mudiyan)	மனைவியின் தகப்பன்
கண்டனு (gandanu)	கணவன்
மாமுஜனு (ma.mujanı)	கணவனின் தகப்பன், கணவனின் தகப்பனின் சகோதரன்
ஒவ்வெக (ovvega)	மகனின் மனைவியின் தாய், மகளின் கணவனின் தாய்
எத்திகெக (ettıgega)	கணவனின் சகோதரி-மூத்த
அக்கெக (akkega)	கணவனின் சகோதரனின் மனைவி-மூத்த
தம்மன (tammana)	கணவனின் சகோதரியின் கணவன்-இளைய, மனைவியின் இளைய சகோதரியின் கணவன்
மகெனு (mageni)	மகன்
அப்பகென் (appagan)	மகனின் மனைவியின் தகப்பன்
மொம்மங்கன் (mommanan)	மகனின் மகன், மகளின் மகன்
மொம்மகெ (mommaga)	மகனின் மகள், மகளின் மகள்
மகெ (maga)	மகள்

இணைப்பு - 3

பெட்டக்குறும்பர்களின் உறவுமுறைச் சொற்கள்

அப்பெ (abbe)	தாய்
அஜ்ஜீ (ajji)	தாயின் தாய், தகப்பனின் தாய்
அஜ்ஜன் (ajjan)	தாயின் தகப்பன், தகப்பனின் தகப்பன்
மாமன் (ma:man)	தாயின் சகோதரன், தகப்பனின் சகோதரியின் கணவன், சகோதரனின் மனைவியின் தகப்பன், மனைவியின் தகப்பன், கணவனின் தகப்பன்
மாயி/திட்டி (ma:yi/tiddi)	தாயின் சகோதரனின் மனைவி, சகோதரனின் மனைவியின் தாய், மனைவியின் தாய், சகோதரியின் கணவனின் தாய், கணவனின் தாய்.
மச்சன் (maccan)	மகனின் மனைவியின் தகப்பன், மகளின் கணவனின் தகப்பன்
எத்திகெ (ettige)	தாயின் சகோதரனின் மகள் - மூத்த, மனைவியின் சகோதரனின் மனைவி-மூத்த, மகனின் மனைவியின் தாய், மகளின் கணவனின் தாய்

குள்ளி (kuḷḷi)	தாயின் சகோதரனின் மகள்-இளைய, மனைவியின் சகோதரனின் மனைவி-இளைய
தபபெ (dapabe)	தாயின் மூத்த சகோதரி, தகப்பனின் மூத்த சகோதரனின் மனைவி
கெராபே (kera:be:)	தாயின் இளைய சகோதரி, தகப்பனின் இளைய சகோதரனின் மனைவி
தபம்மன் (dapamman)	தகப்பனின் மூத்த சகோதரன், தாயின் மூத்த சகோதரியின் கணவன்
கெரம்மன் (keramman)	தாயின் இளைய சகோதரியின் கணவன், தகப்பனின் இளைய சகோதரன்
அகன் (akan)	தாயின் சகோதரியின் மகள்-மூத்த, மூத்த சகோதரி, தகப்பனின் சகோதரனின் மகள்-மூத்த, கணவனின் சகோதரனின் மனைவி-மூத்த.
குராலொ (kura:lo)	தாயின் சகோதரியின் மகள்-இளைய, இளைய சகோதரி, தகப்பனின் சகோதரனின் மகள்-இளைய
அம்மன் (amman)	தகப்பன்
மச்சன் தகுதெ (maccan dagude)	தாயின் சகோதரனின் மகன்-மூத்த, தகப்பனின் சகோதரியின் மகன்-மூத்த, மனைவியின் மூத்த சகோதரன், மூத்த சகோதரியின் கணவன், கணவனின் மூத்த சகோதரன்.
மச்சன் கிரிதெ (maccan kiride)	தகப்பனின் சகோதரியின் மகன்-இளைய, இளைய சகோதரியின்

	கணவன், மனைவியின் இளைய சகோதரன், தாயின் சகோதரனின் மகன்-இளைய
எத்தி தகுதெ (eṯṯi ḏakuḏe)	தகப்பனின் சகோதரியின் மகள்-மூத்த, மனைவியின் மூத்த சகோதரி
எத்தி கிரிதெ (eṯṯi kiride)	தகப்பனின் சகோதரியின் மகள்-இளைய, இளைய சகோதரனின் மனைவி, மனைவியின் இளைய சகோதரி.
அண் (aṇ)	மூத்த சகோதரன், தாயின் சகோதரியின் மகன்-மூத்த, தகப்பனின் சகோதரனின் மகன்-மூத்த, மனைவியின் மூத்த சகோதரியின் கணவன்
கொறுன் (koṛun)	இளைய சகோதரன், தாயின் சகோதரியின் மகன்-இளைய, தகப்பனின் சகோதரனின் மகன்-இளைய, மனைவியின் சகோதரியின் கணவன்-இளைய
எதுகீ (eṯugi:)	மூத்த சகோதரனின் மனைவி, கணவனின் சகோதரி, மகளின் கணவனின் தாய், மகனின் மனைவியின் தாய்.
மகன் (maken)	மகன், சகோதரனின் மகன்
மகளு (magaḷu)	மகள், சகோதரனின் மகள்
மென்மகளு (menmagaḷu)	மகனின் மனைவி, சகோதரனின் மகனின் மனைவி, சகோதரியின் மகள்

முத்தன் (muddan)	மகளின் கணவன், சகோதரனின் மகளின் கணவன், சகோதரியின் மகன்
பெணாகன் (peṇa:kan)	மனைவி
கெண்டாளு (geṇḍa:ḷu)	கணவன்
பெரன் (paeern)	மகனின் மகன், மகளின் மகன், மகனின் மகளின் மகன், மகளின் மகளின் மகன்
பெர்தி (paeerṯi)	மகனின் மகள், மகளின் மகள், மகனின் மகனின் மகள், மகளின் மகளின் மகள்

இணைப்பு - 4

ஒரு குறிப்பிட்ட உறவினரைக் குறிப்பிடும்போது மூன்று பிரிவைச் சேர்ந்த குறும்பர்களும் பயன்படுத்தும் உறவுமுறைச் சொற்கள் பின்வருமாறு:

1. தாய்	அம்மெ	மு.கு
	ஒவ்வெ	தே.கு.
	அப்பெ	பெ.கு.
2. தாயின் தாய்	முத்தியம்மா	மு.கு
	அச்சி	தே.கு
	அஜ்ஜி	பெ.கு,
3. தாயின்தகப்பன்	முத்தப்பென்	மு.கு.
	கெத்தென்	தே.கு.
	அஜ்ஜன்	பெ.கு.
4. தாயின் சகோதரன்	மாமென்	மு.கு
	அம்மோன்	தே.கு.
	மாமன்	பெ.கு.
5. தாயின் சகோதரனின் மனைவி	மாமி	மு.கு.
	அத்தெ	தே.கு.
	மாயி	பெ.கு.

6.	தாயின் சகோதரனின் மகன்-மூத்தவர்	அண்ணென்	மு.கு.
		பாவென்	தே.கு.
		மச்சான்	பெ.கு.
7.	தாயின் சகோதரனின் மகன்-இளையவர்	சும்பென்	மு.கு.
		மைதென்	தே.கு.
		மச்சான்	பெ.கு.
8.	தாயின் சகோதரனின் மகள்-மூத்தவள்	அற்ற	மு.கு.
		எத்திகெ	தே.கு.
		எத்திகெ	பெ.கு.
9.	தாயின் சகோதரனின் மகள்- இளையவள்	சும்பி	மு.கு.
		நாதினி	தே.கு.
		குள்ளி	பெ.கு.
10.	தாயின் மூத்த சகோதரி	பேமா	மு.கு.
		தொட்டொவ்வெ	தே.கு.
		தபாபெ	பெ.கு.
11.	தாயின் இளைய சகோதரி	ஏமா	மு.கு.
		சிக்கொவ்வெ	தே.கு.
		கெராபெ	பெ.கு.
12.	தாயின் மூத்த சகோதரியின் கணவன்	பேப்பென்	மு.கு.
		தொட்டப்பன்	தே.கு.
		தபம்மன்	பெ.கு.
13.	தாயின் இளைய சகோதரியின் கணவன்	ஏப்பென்	மு.கு.
		சிப்பன்	தே.கு.
		கெரம்மன்	பெ.கு.
14.	தாயின் சகோதரியின் மகன்-மூத்தவர், மூத்த சகோதரன்	அண்ணென்	மு.கு.
		அண்ணன்	தே.கு.
		அண்	பெ.கு.

15.	தாயின் சகோதரியின் மகன்-இளையவர்	சும்பென்	மு.கு.
		தம்மன்	தே.கு.
		கொறுன்	பெ.கு.
16.	தாயின் சகோதரியின் மகள்-மூத்தவள்	அற்ற	மு.கு.
		அக்கன்	தே.கு.
		அகன்	பெ.கு.
17.	தாயின் சகோதரியின் மகள்-இளையவள்	சும்பி	மு.கு.
		தெங்கி	தே.கு.
		குராலொ	பெ.கு.
18.	தகப்பன்	அப்பென்	மு.கு.
		அப்பன்	தே.கு.
		அம்மன்	பெ.கு.
19.	தகப்பனின் தகப்பனின் சகோதரன்	தட்டப்பென்	மு.கு.
		கெத்தன்	தே.கு.
		அஜ்ஜன்	பெ.கு.
20.	தகப்பனின் தகப்பனின் தகப்பன்	மோப்பப்பென்	மு.கு.
		இல்லை	தே.கு.
		இல்லை	பெ.கு.
21.	தகப்பனின் தகப்பனின் தகப்பனின் மனைவி	மோப்பம்மா	மு.கு.
		இல்லை	தே.கு.
		இல்லை	பெ.கு.
22.	தகப்பனின் தகப்பனின் சகோதரனின் மனைவி	தட்டம்மா	மு.கு.
		இல்லை	தே.கு.
		இல்லை	பெ.கு.
23.	மூத்த சகோதரனின் மனைவி	பெரியோளு	மு.கு.
		எத்திகெ	தே.கு.
		எத்திகெ/எதுகீ	பெ.கு.

24.	மூத்த சகோதரியின் கணவன்	அளியன்	மு.கு.
		பாவென்	தே.கு.
		மச்சான்	பெ.கு.
25.	இளைய சகோதரனின் மனைவி	செறியோளு	மு.கு.
		நாதினி	தே.கு.
		எத்திகிரிதெ	பெ.கு.
26.	சகோதரியின் மகன்	மெருமகென்	மு.கு.
		எளெனெ	தே.கு.
		முத்தன்	பெ.கு.
27.	சகோதரியின் மகள்	மெருமாளு	மு.கு.
		சொஜெ	தே.கு.
		மென்மகளு	பெ.கு.
28.	மனைவி	குறுமாட்டி	மு.கு.
		கெண்டுரு	தே.கு.
		பெணாகன்	பெ.கு.
29.	மனைவியின் தாய்	அம்மாயிமுத்தி	மு.கு.
		அத்தெமுதுக்கி	தே.கு.
		மாயி	பெ.கு.
30.	மனைவியின் தகப்பன்	அம்மமுத்தென்	மு.கு.
		மாமுதியன்	தே.கு.
		மாமன்	பெ.கு.
31.	மனைவியின் மூத்த சகோதரியின் கணவன்	கார்னோரு/ அண்ணென்	மு.கு.
		அண்ணன்	தே.கு.
		அண்	பெ.கு.
32.	மனைவியின் இளைய சகோதரியின் கணவன்	அனந்தரென்	மு.கு.
		தம்மன	தே.கு.
		கொறுன்	பெ.கு.

33.	கணவன்	குறுமென்	மு.கு.
		கண்டனு	தே.கு.
		கெண்டாளு	பெ.கு.
34.	கணவனின் மூத்த சகோதரன்	பெரியவென்	மு.கு.
		பாவென்	தே.கு.
		மச்சன்தகுதெ	பெ.கு.
35.	கணவனின் இளைய சகோதரன்	செறியவென்	மு.கு.
		மைதன்	தே.கு.
		மச்சன்கிரிதெ	பெ.கு.
36.	கணவனின் மூத்த சகோதரி	நாத்தா	மு.கு.
		எத்திகெக	தே.கு.
		எதுகீ	பெ.கு.
37.	கணவனின் இளைய சகோதரி	நாத்தா	மு.கு.
		நாதினி	தே.கு.
		எதுகீ	பெ.கு.
38.	கணவனின் தகப்பன்	அம்மமுத்தென்	மு.கு.
		மாமுஜனு	தே.கு.
		மாமன்	பெ.கு.
39.	கணவனின் தாய்	அம்மாயிமுத்தி	மு.கு.
		ஒவ்வெ	தே.கு.
		மாயி	பெ.கு.
40.	மகன்	மகென்	மு.கு.
		மகெனு	தே.கு.
		மகன்	பெ.கு.
41.	மகனின் மனைவியின் தாய்	பெங்கள	மு.கு.
		ஒவ்வெக	தே.கு.
		எதுகீ	பெ.கு.

42.	மகனின் மகன்	பேரன்	மு.கு.
		மொம்மங்கன்	தே.கு.
		பேரன்	பெ.கு.
43.	மகனின் மகள்	பேரத்தி	மு.கு.
		மொம்மகெ	தே.கு.
		பெர்தி	பெ.கு.
44.	மகள்	மகளு	மு.கு.
		மகெ	தே.கு.
		மகளு	பெ.கு.
45.	கணவனின் சகோதரனின் மனைவி- மூத்தவள்	பெரியோளு	மு.கு.
		அக்கெக	தே.கு.
		அகென்	பெ.கு.
46.	தகப்பனின் சகோதரியின் மகள்- மூத்தவள்	அற்ற	மு.கு.
		எத்திகெ	தே.கு.
		எத்திதகுதெ	பெ.கு.
47.	தகப்பனின் சகோதரியின் மகள்- இளையவள்	சும்பி	மு.கு.
		நாதினி	தே.கு.
		எத்திகிரிதெ	பெ.கு.
48.	மகனின் மனைவியின் தகப்பன்	ஆங்ஙள/ பெங்ஙள	மு.கு.
		அப்பெகன்	தே.கு.
		மச்சன்	பெ.கு.
49.	மூத்த சகோதரன்	அண்ணென்/ கார்னோரு	மு.கு.
		அண்ணன்	தே.கு.
		அண்த்குதெ	பெ.கு.
50.	இளைய சகோதரன்	சும்பென்	மு.கு.
		தம்மென்	தே.கு.
		அண்கிரிதெ	பெ.கு.

51.	மூத்த சகோதரி	அற்ற	மு.கு.
		அக்கெென்	தே.கு.
		அகெென்	பெ.கு.
52.	இளைய சகோதரி	சும்பி/	
		எனியத்தி	மு.கு.
		தெங்கி	தே.கு.
		குராலொ	பெ.கு.
53.	இளைய சகோதரியின் கணவன	அளியென்	மு.கு.
		மைதன்	தே.கு.
		மச்சன்கிரிதே	பெ.கு.
54.	மகனின் மனைவி	மெருமாளு	மு.கு.
		சொஜெ	தே.கு.
		மென்மகளு	பெ.கு.
55.	மகளின் கணவன்	மெருமகென்	மு.கு.
		எளெனெ	தே.கு.
		முத்தன்	பெ.கு.

துணைநூற்பட்டியல்

Aiyappan, A. 1948. *Report on the Socio-Economic Conditions of the Aboriginal Tribes of the province of Madras.* Government Press. Madras.

----------- 1973. "The Tribes of South and South-West India" *The Tibal people of Inida.* Publications Division. Government of India, New Delhi.

Dumont, Louis, 1953 "The Dravidian Kinship Terminology as an expression of Marriage" *Man* 54. 34-39.

Emeneau, M.B. 1953 "Dravidian Kinship terms" Language 29. 339-54. *Also in Dravidian Linguistics Ethnology and Folktales Collected papers*, Annamalai University, Annamalai nagar. 1967.

Engels, *The Origin of the Family, Private Property and the State.* Progress Publishers, Moscow.

Gough,E. Kathleen, 1979. "Dravidian Kinship and Modes of production" *Contributions to Indian Sociology,* 226-291.

Jayapal, S. 1978. Descriptive Grammar of Kurumba (unpublished Ph.D., Dissertation) Annamalai University, Annamalai nagar.

------- 1980. "Betta kurumba moliyil ve:rrumai" *Mozhiyiyal* Vol.3, No.4, All Inidia Tamil Linguistics Association, Anamalai Nagar.

Karve, Irawati, 1965. *Kinship Organisation in India*, Asia publishing House, Bombay.

Kumaraswami Raja, N. 1972. "Personal Kinship terms" *Third Seminar on Dravidian Linguistics*, S. Agesthialingom & S.V. Shanmugam (Eds) Annamalai University, Annamalai Nagar.

Lounsbury. Floyd, G. 1964. "The structural Analysis of Kinship Semantics" Proceedings of the Ninth International Congress of Linguists, Horace G. Lunt. Mouton & Co., London, The Hague, Paris.

Luiz, A.A.D. 1962 *Tribes of Kerala*, Bharatiya Adimjati Sevak Sangh, New Delhi.

Mathur, P.R.G. 1977. *Tribal Situation in Kerala*, Kerala Historical Society, Trivandrum.

Misra, Rajalakshmi, 1971. *Mullukurumbas of Kappala.* Memoir No.30. Anthropological Survey of India. Indian Museum. Calcutta.

Mitra. A. (Ed). 1961. *Census of India.* Vol.I. Part II-C. New Delhi.

Mukherjee Bhabananda. 1981. *Structure and Kinship in Tribal India.* Minerva Associates, Calcutta.

Murdock, G.P. 1949. *Social Structure*, Macmillan, New York.

Nambiar, P.K. 1961. *Census of India : Scheduled Tribe Population in Rural Areas*, Vol.IX, Madras.

----- 1964. "Ethnographic notes on Scheduled Tribe" *Census of India*, 1961, Vol.IX, Madras, Part V-B(1) Publication Division, Govt. of India, New Delhi.

Natanasabapathy, S. 1980. A Descriptive Study o ɿe Language of Kattunaickas (unpublished Ph.D., Dissertation) Annamalai University, Annamalai Nagar.

Prabhoo Lalitha, 1984. Kinship terminology of Gowda Saraswath Brahmins and a few other communities in Kerala (unpublished Ph.D. dissertation) University of Kerala, Trivandrum.

Ramanathan, Aru. 1982. *Na:ttuppurappa:talkal Ka:ttum Tamilar va:lviyal,* Manivasagar Noolagam, Chidambaram.

Reddy Subba, N. "The Essence and Evanescence of Dravidian kinship system". (As observed in a particular caste of Telugu-speaking area) Asian Profile, Vol.12, No.4.

Robert Sathya Joseph, D. 1982. A descriptive Study of Mullukurumba (unpublished Ph.D. dissertation) Annamalai University, Annamalai Nagar.

Schuwartz, M. Barton and Robert H. Ewald, 1968. *Culture and society - An Introduction to cultural Anthropology.* The Ronald Press.- Company. New York.

Susan Sharf Bean, 1972. Kannada Kinship Terms: use and Meaning. (Ph.D. Dissertation) Columbia University.

Thurston, E. 1975. *Caste and Tribes of Southern India.* (reprinted). Vol.IV, K-M. and Vol.V, M-P. Cosmopublications, New Delhi.

Trautmann, Thomas, R. 1981. *Dravidian Kinship,* Cambridge University Press, Cambridge.